கல்கி



KALKI 23-3-1958 30 நயா பைசா


பூர்த்தியாகும் பெரு முயற்சி

டாடா ஸ்டீலின் விரிவான இரு மில்லியன் டன் உற்பத்தித் திட்டம் இப்பொழுது பூர்த்தியாகும் நிலை அடைந்திருக்கிறது. 1958 ம் ஆண்டு நடுவில் முடிவடைய வேண்டிய இம் முயற்சி காலத்தோடு போட்டிபோடும் ஓர் நிகழ்ச்சி ஆகும்.

இன்று, ஜாம்ஷெட்பூரில் எங்கு பார்த்தாலும் தொழிலில் புதியதோர் அவசரத்தைக் காணலாம்...குறிப்பிட்ட காலத்துக்குள் இவ் விரிவான திட்டத்தைப் பூர்த்திசெய்ய வென்றே இடைவிடாமல் இரவு பகலாக தொழில் இயங்கி வருகிறது.

இரும்புத் தாதுப்பொருளையும் நிலக்கரியையும் சேகரிப்பதிலிருந்து எஃகு தயாரிக்கப்படும் வரை, டாடா ஸ்டீலின் விரிவான முயற்சி, வருட உற்பத்தியை இருமடங்காக்கி இரு மில்லியன் டன்னாக உற்பத்தி செய்யப்போகிறது. இது, நம் நாட்டின் இலட்சிய உற்பத்தி அளவிலே மூன்றில் ஒரு பங்காகும்.

வெகு துரிதமாகக் கட்டி முடிக்கப் போகும் இப் புதிய ப்ளாஸ்ட பர்னஸ் நாளொன்றுக்கு 1650 டன் இரும்பு (Pig Iron) உற்பத்தி செய்யும்.



டாடா ஸ்டீல்

இரு மில்லியன் டன் உற்பத்திக்கு

தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

TN 1763

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம், கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 17 — இதழ் 34

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

ஹேவிளம்பி பங்குனி மீ 10உ

பாரதம் வழிகாட்ட வேண்டும்!

"அடிமைப்பட்ட நாடு சுதந்திரம் அடைய வேண்டுமென்றால் புரட்சி செய்தேயாக வேண்டும்; ஹிம்சையைக் கடைப்பிடித்தேயாக வேண்டும். அராஜக முறைகளைக் கையாண்டே தீரவேண்டும்; இதுதான் நியதி. இந்த முறையில்தான் பற்பல நாடுகள் சுதந்திரம் பெற்றிருக்கின்றன. இதுதான் சரித்திர உண்மை." இதுவே காந்தி மகான் இந்திய அரசியல் துறையில் அடியெடுத்து வைப்பதற்குச் சற்று முன்வரை புரட்சி சாஸ்திரமாக இருந்து வந்தது!

இந்திய அரசியல் வானில் காந்தி மகான் தோன்றியதும், சரித்திரத்தில் புதுமையை உண்டாக்கினார். சுதந்திரப் போராட்டத்தில் புது முறையைக் கையாண்டார். பிறரை ஹிம்சிப்பதற்குப் பதில் நாம் இம்சையை மேற்கொள்ளலாம். அந்த ஆயுதத்தைக் கொண்டு உண்மையிலும் நேர்மையிலும் நம்பிக்கை கொண்டு போராட்டம் நடத்தலாம் என்றார். அது எந்த ஹிம்சாமுறைப் போராட்டத்தை விடவும் பலமும் சக்தியும் கொண்டது என்பதை உலகறியச் செய்தார்!

காந்தி மகானின் தியாகப் போர், இரண்டாயிர வருஷ உலக சரித்திரத்தில் ஒரு புதிய பாதைத் திருப்பம். பாரத தேசம் சுதந்திரம் பெற்று, எவ்வித படைபலமின்றியே உலக வல்லரசுகளில் இன்று முதன்மையாகத் திகழ்வது ஒன்றே காந்தி மகானின் அஹிம்சா போர் முறை எத்தகைய வெற்றியடைந்திருக்கிறது என்பதற்கும் சான்றாகும்.

எனினும் இன்றைய உலகச் சூழ்நிலையில் பாரத தேசம் மற்றொரு மகத்தான சாதனை புரிய வேண்டியிருக்கிறது. இதைச் சென்ற வாரம் ஆசாரிய கிருபளானி அவர்கள் மக்கள் சபையில் மிக உருக்கமாக எடுத்துரைத்தார்.

"நாம் உலகத்திலுள்ள எல்லா நாடுகளுடனும் சிநேக உறவு கொண்டிருக்கிறோம். கிழக்கே சீனாவுடனும் மேற்கே ருஷ்யாவுடனும் சிநேகமாக இருக்கிறோம்.

"இவ்விரண்டு நாடுகளும் நம் பஞ்சசீலக் கொள்கையில் நம்பிக்கை தெரிவித்துக் கையெழுத்திட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து படையெடுப்பை எதிர்பார்ப்பதற்கில்லை.

"நமக்கு ஏதாகிலும் விரோதமுள்ள நாடு என்றிருந்தால் அது பாகிஸ்தான் தான். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தந்திருக்கும் ராணுவ உதவியை இந்தியாவுக்கு எதிராக உபயோகப்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்லி வருகிறார்கள். அமெரிக்க சர்க்காரின் பேச்சை ஒப்புக் கொண்டு நமது ராணுவச் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். இதுதான் காந்தி மகான் காண்பித்த வழியைப் பின்பற்றிச் செல்வதாகும்!" இவ்வாறு கிருபளானி கூறியிருக்கிறார்.

* * * *

பாரத நாட்டு வரி முறையைப் போல் கடுமையான வரி முறை உலகில் வேறு எங்கும் கிடையாது. இவ்வளவு கடுமையான வரிகள் மூலம் வசூலிக்கப்படும் பணத்தில் பெரும் பகுதி ராணுவச் செலவுக்கும் மற்றப் பகுதி சாதாரண நிர்வாகச் செலவுக்குமே தீர்ந்து போகின்றன!

இன்றைய உலக நிலையில் மேற்கத்திய வல்லரசுகளோடு போட்டி போடக் கூடிய பெரும் ராணுவத்தை நம்மால் நிர்வகிக்க முடியாது. நிர்வகிக்க வேண்டிய

சொல்லும் செயலும்



"இந்திய ராணுவச் செலவைப் பெருக்கியிருப்பது, இந்தியா பறைசாற்றும் உலக சமாதான நோக்கத்துக்கு முற்றிலும் முரணாக இருக்கிறது" என்கிறார் திரு கிருபளானி.

அவசியமுமில்லை. அந்த ராணுவங்களுடன், அவைகளின் அணுகுண்டு, ஜலஜ குண்டு, பறக்கும் குண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது ராணுவம் ராணுவமே இல்லை என்று சொல்ல வேண்டும். இந்த ராணுவத்தை இவ்வளவு கோடி ரூபாய் செலவழித்து, நிர்வகிப்பானேன்? இந்தப் பணத்தை வேறு முக்கியமான திட்டங்களுக்குச் செலவழிக்கலாம் என்று தோன்றுகிறது.

நாம் உலக நாடுகளை, ருஷ்யாவையும் அமெரிக்காவையும், அணுகுண்டு ஜலஜ குண்டு களைத் தூரத் தூக்கி எறியுங்கள் என்று ஓயாமல் வற்புறுத்தி வருகிறோம்.

அந்த உபதேசத்துக்கு முரண்படாமல் நம்முடைய நிர்வாகம் நடைபெற வேண்டும்.

நமது ராணுவச் செலவைக் கணிசமான அளவுக்குக் குறைத்துக் கொண்டு, உலக நாடுகளுடன் அணுகுண்டு விஷயமாகப் பேச வேண்டும்!

நமது ராணுவச் செலவைப் பெரும் பகுதி குறைத்தாலே, உலக வல்லரசுகளிடம் புதிய விழிப்பு ஏற்படும்.

இக்கருத்தை ஆசாரிய கிருபளானி வெகு நன்றாகச் சென்ற வாரம் மக்கள் சபையில் வற்புறுத்திப் பேசியிருக்கிறார்.

உலகில் மகத்தான காரியங்களெல்லாம் துணிந்து ஒரு சிலர் காரியத்தில் இறங்கியதால்தான் நடைபெற்றிருக்கின்றன.

நேருஜி தலைமை வகிக்கும் இந்தச் சமயத்தில், உலக வல்லரசுகள் தங்கள் பெருந் தலைவர்கள் அணுகுண்டு சம்பந்தமாகக் கூடிப் பேசுவோமா, வேண்டாமா என்று தயங்கிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், பாரதம் காந்தியக் கொடியை உலகம் அறியத் தூக்கிப் பிடித்து ராணுவச் செலவைக் குறைத்துக் கொண்டால் பெரும் பயன் விளையும் என்று நம்புகிறோம். இருளில் கிடந்து தவிப்பவர்களுக்கு ஒளி கிடைத்தது போலாகும்.

நம்முடைய ராணுவ அதிகப்படிச் செலவெல்லாம் மேற்கத்திய வல்லரசு நாடுகளிலிருந்து தருவிக்கப்படும் தளவாடங்களுக்குத்தான் போகின்றன. வல்லரசுகளுடன் நாம் கட்சி செய்து கொள்ளாமல் தனித்து நிற்பதாக நம்முடைய யோசனை. அந்த யோசனைக்கும் இந்த ராணுவ தளவாட இறக்குமதிக்கும் உள்ள முரண்பாட்டைப் பிரதமர் நேரு அவர்கள் கவனிக்க வேண்டும். ராணுவ விமானங்கள் விலை கொடுத்து வாங்குவது எளிதாகும். ஆனால் அந்த விமானங்களின் வழியாக நாம் ஏதேனும் ஓர் வல்லரசுக்குக் கட்டுப்பட்டுத்தான் போவோம். சுதந்திரக் கொள்கைக்குப் பங்கம் ஏற்படுவது நிச்சயம்.

ஹோட்டல் தொழிலைக் காப்பாற்றுங்கள்!


தற்கால சமூக வாழ்க்கையில் ஹோட்டல்கள் இல்லாமல் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. ஒவ்வொரு பெரிய நகரிலும் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஹோட்டலில் சாப்பிடுகிறார்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஹோட்டல்கள் எவ்வளவு முக்கியமான பொதுஜன ஊழியம் செய்து வருகின்றன என்பது தெரிய வரும். ஹோட்டலில் சாப்பிடுகிறவர்கள் எல்லாரும் எப்படியாவது தங்கள் கையிலிருக்கும் பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்பதற்காக ஹோட்டலுக்குப் போக மாட்டார்கள். பின் ஹோட்டலுக்குப் போவதற்குக் காரணம் என்ன? உயிர் வாழ்வதற்கு உணவு சாப்பிடுவது அவசியமாக இருப்பதால்தான் ஹோட்டலுக்குப் போகிறார்கள். ஒவ்வொரு நகரத்திலும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் ஹோட்டல்களில் சாப்பிட்டே பசி ஆற வேண்டியிருக்கிறது. ஆகவே ஹோட்டல்கள் எவ்வளவு அவசியமான பொதுஜன சேவை செய்து வருகின்றன என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆயினும் நமது காருண்ய சர்க்கார் ஹோட்டல் விஷயத்தில் கடைப்பிடித்து வரும் கொள்கையைப் பார்த்தால் ஹோட்டல்களைப் பொதுஜன விரோதியாகக் கருதுவதாகவே தோன்றுகிறது.

மற்றப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் விற்பனை வரியைவிட அதிகமான வரி ஹோட்டல் தொழிலுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வரிக் கொடுமையால் ஹோட்டல் தொழில் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை விளக்கி நீண்ட நெடுங்காலமாக ஹோட்டல் தொழிலில் அனுபவப்பட்டிருக்கும் கும்பகோணம் திரு வி. எம். சுப்பிரமணியம் அவர்கள் எழுதியிருக்கும் கடிதத்தைத்தான் இந்த இதழில் இருபதாம் பக்கத்தில் வட்டமேஜைப் பகுதியில் பிரசுரித்திருக்கிறோம். அந்தக் கடிதத்தை ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஹோட்டல்தொழிலுக்கு அதிக வரிவிதிப்பது அத்தொழில் வளர்ச்சியைப் பாதிப்பதுடன், இதனால் கஷ்டப்படுபவர்கள் நடுத்தர வகுப்பினர்தான். கடைசியில் அவர்கள் தலையில்தான் எல்லா வரிச் சுமையும் வந்து சேரும் என்பதில் சந்தேகமில்லை.

'விற்பனை லைஸென்ஸ்' பற்றித் திரு வி. எம். சுப்பிரமணியம் அவர்கள் தம்முடைய கடிதத்தில் கூறியுள்ள யோசனையையும் பரிசீலனை செய்து பார்த்து ஹோட்டல்கள் நன்றாக நடைபெறுவதற்குச் சர்க்கார் தங்களாலான உதவிகளைத் தாராளமாகச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

பகலில் ஏன் லாந்தர்?



தென்னாட்டு மகாகவிகளில் ஒருவர்

மலையாள இலக்கிய வானில் ஐம்பதாண்டுகளாகச் சுடர் வீசிய நட்சத்திரம் கவி வள்ளத்தோள் அவர்கள். அந்த நட்சத்திரம் மறைந்து விட்டது. அவர் தம் இனத்தவர்களான மகா கவி பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை முதலியவர்களுடன் சேர்ந்துவிட்டார்.

கவி வள்ளத்தோள் மலையாளிகளின் ஆசைகளையும் அபிலாஷைகளையும் திரட்டி உலகளவு பரந்த வான் கருத்துக்களையும் கவிதையில் கூட்டித் தந்த பெரும் கவிஞராக விளங்கினார்.

கவி வள்ளத்தோள் வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு ராமாயணத்தை யாத்துத் தந்தார். அதை ஒவ்வொரு மலையாளியும் மிகுந்த நன்றியோடும் பக்தியோடும் போற்றுகிறார்.

கவி வள்ளத்தோள் இளமையில் குருகுல வாசம் செய்து வடமொழி இலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சி பெற்றார். சிறு பிராயத்திலேயே கவி இயற்றும் திறமையும் பெற்றிருந்தார். ஆனால் அந்த நாட்களில் மலையாளத்தில் கவி இயற்றுவது வடமொழி சுலோகம் முறையில்தான் இருக்கும். ஆனால் கவி வள்ளத்தோள் கவிதை இயற்றுவதில் புது முறையைக் கையாண்டார். தமிழ் யாப்பியலையொட்டிக் கவி புனையத் தொடங்கினார்.

இவ்விதம் கவி வள்ளத்தோள் பழமையான கல்வி முறையில் பயின்றவராயினும் புதுமையில் எப்பொழுதும் நாட்டங் கொண்டு விளங்கினார்.



கவிஞர் ஸ்ரீ வள்ளத்தோள்

சுதந்திரப் போரில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். காந்தி மகானின் அஹிம்சைப் போரில் தீவிர ஊக்கங் கொண்டு கவிகள் இயற்றினார். கேரள மக்களைத் தமது கவிதைத் திறத்தாலே தேச பக்தி கொள்ளச் செய்தார்.

கவி வள்ளத்தோள் ராமாயணத்தைத் தவிர இன்னும் பல சொந்தக் காவியங்கள் செய்திருக்கிறார். ''மேரி மாக்டலேனா'', ''தந்தையும் மகனும்''—இவ்விதம் பல காவியங்கள் செய்திருக்கிறார். ரிக்வேதத்தை மலையாளத்தில் மொழிபெயர்த்து மலையாளிகளுக்குப் பேருபகாரம் செய்திருக்கிறார்.

அவருக்கு மலையாள நாட்டைச் சேர்ந்த கதகளி நடனத்தில் மிகுந்த ஈடுபாடு. அந்தக் கலைக்குப் புத்துயிர் அளித்தவரும் வள்ளத்தோள்தான். அந்தக் கலையை வளர்ப்பதற்காகவே ''கேரள கலா மண்டலம்'' என்ற ஸ்தாபனத்தை நிறுவினார். அந்த ஸ்தாபனத்தைப் பெரு முயற்சி எடுத்து வளர்த்து வந்தார். அதற்கு நமது பிரதமர் நேரு சமீபத்தில் கணிசமான தொகை நன்கொடையளித்து உதவினார். இப்பொழுது அதைக் கேரள சர்க்கார் ஏற்று நடத்தி வருகின்றனர். இவ்விதம் தாம் துவக்கிய ஸ்தாபனம் சிறந்த முறையில் பணியாற்றத் தொடங்கி விட்டது என்ற நிம்மதியுடன் வள்ளத்தோள் மறைந்தார் என்று எண்ணத் தோன்றுகிறது.

வள்ளத்தோள் சீனா, ரஷ்யா முதலிய மேல் நாடுகளுக்கெல்லாம் சென்று வந்தார். பாரத நாட்டிலிருந்து அனுப்பப்படும் கலைத் தூது கோஷ்டிகளுள் கவிஞர் திரு வள்ளத்தோள் இடம் பெற்று வந்தார்.

சென்னை ராஜ்யத்தில் மலையாளப் பகுதியும் கொச்சிப் பகுதியும் சேர்ந்திருந்த போது, சென்னை அரசாங்கம் கவி வள்ளத்தோளுக்கு மலையாள ஆஸ்தான கவிஞர் என்னும் பதவியைத் தந்து பெருமையடைந்தது.

கவிஞர்கள் அமரர்கள். அவர்கள் என்றும் இறப்பதில்லை. அவர்கள் தங்கள் கவிதைகளில் சிரஞ்சீவித்துவம் பெற்று மரணத்துக்குப் பிறகும் புத்துயிருடன் விளங்குகிறார்கள்.

இரண்டுபட்ட உலகம்

காதலனைப் பிரிந்த துயரத்தில் அவள் ஆழ்ந்திருந்தாள். எனினும், அவள் தான் அன்றாடம் சிங்காரித்துக் கொள்ளும் கடமையிலிருந்து தவற முடியுமா, என்ன? அவள் நிலைக் கண்ணாடி முன் அமர்ந்து சிங்காரித்துக் கொண்டாள். அப்போது, அவள் நினைவு பலபடியாக ஓடியது—தன்னைப் பற்றியே ஓடியது.

''எத்தனை பெண்கள் எவ்வளவு சந்தோஷமாகத் தூங்குகிறார்கள். ஆனால் எனக்குத் தூக்கமே வர மறுக்கிறதே! எத்தனை பெண்கள் வானத்தில் எழும் முழுமதியைக் கண்டு குதூகலப்படுகிறார்கள். ஆனால் எனக்கோ பெரும் வேதனையளிப்பதாக இருக்கிறதே!''

''யாவருக்கும் மதியம் வேறு எனக்குவேறு மதியமோ
யானொருத்தி பெண்பிறந்து இரண்டுபட்ட துலகமே!''

கண்ணாடியின் முன் அமர்ந்து அவள் எண்ணும் எண்ணங்களையும், அவள் எண்ணங்களுக்குக் காரணமான காதலனையும் ஓவியர் வினு இவ்விதம் அட்டைச் சித்திரமாக வழங்குகிறார்.


13
கல்கி
புத்தாண்டு
மலரில்
கி. ராஜேந்திரன்
எழுதும்
பொங்கிவரும்
பெருநிலவு
புதிய தொடர்கதை
ஆரம்பமாகிறது
லதா

அருள்வாக்கு

சந்தோஷமாக இருப்பதற்கு வேண்டியவையெல்லாம் ஒருவனிடம் இருக்கலாம்: இருப்பினும் சந்தோஷம் அனுபவிப்பதற்கு வேண்டிய மனப் பண்பை அவன் வளர்த்துக் கொள்ளவில்லையென்றால், அவன் சந்தோஷமாகவோ திருப்தியாகவோ இருக்க முடியாது. அதிருப்தி, கோபம், பொறாமை முதலியவற்றிற்கு அவன் மனம் அடிமையாகி யிருந்தால், அவனுக்கு மன நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படாது. ஓட்டைக் குடத்தில் வைத்த தண்ணீர் போல அவனுடைய செல்வங்களெல்லாம் அவனுக்குப் பயன்படாமல் போகும். ஆகையால் நம் மனத்திலிருந்து எல்லா அழுக்குகளையும் அகற்றுமாறு நாம் முதலில் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டுமென்பதற்கு ஷட்பதி ஸ்தோத்திரத்தில் ஆதி சங்கரர் வழி காட்டி யிருக்கிறார். விநயம் என்பது பண்பு உடையவர்களின் குணம் என்கிறோம். மிருதுவான சுபாவம், எளிமை, பிறரின் சௌகர்யத்தை அனுசரித்து நடப்பது, அகம்பாவமில்லாமலிருப்பது முதலியவை விநயத்தில் சேரும். உண்மையில் கல்வியின் லக்ஷ்யமே விநயத்தைப் பெறுவதுதான். (வித்யா விநய ஸம்பன்ன.) மாணவர்களுக்கு விநயத்தைக் கற்பிப்பது குருவின் கடமை. அதே போல், பிரஜைகள் விநயத்துடன் வாழும்படி பார்த்துக் கொள்வது அரசனின் கடமை. விநயத்திற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தினால் மாணவனையும் இச்சொல் குறிக்கிறது.

விநயத்துக்கு விரோதமான அகம்பாவம், கோபம் முதலிய தீமைகளை அகற்றுமாறு ஆதி சங்கரர் பிரார்த்திக்கிறார். மனத்தைக் கட்டுப்படுத்தவும் அருள் புரியுமாறு அவர் கோருகிறார். மனத்தைக் கட்டுப் படுத்தினால் பின்னர் அது தாற்காலிக சுகங்களைத் தேடி அலையாமல், கடவுளைப் பற்றிய சிந்தனையில் நிலைத்து நிற்கும்.

அடுத்தபடியாகப் புலன்களால் தூண்டப்படும் ஆசைகளை அகற்றுமாறு பிரார்த்திக்க வேண்டும். நாம் உலக சுகங்களைத் தேடி அலையவில்லையானால், நம் மனம் உலகத்தோடு 'ச்ருதி' சேர்த்து இசைக்கிறது. அன்பு நிறைந்த பரந்த மனப்பான்மை ஏற்படுகிறது. ஆகையால் சிருஷ்டியில் எல்லாப் பொருள்களிடத்திலும், தம் அன்பு வியாபிக்க அருளுமாறு கேட்கிறார் ஆதிசங்கரர். இவ்விதம் படிப்படியாக ஆத்மீக உயர்வு பெற்றால் பிறப்பு, இறப்புகளாகிய ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுவது நிச்சயம்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

இந்திய வர்த்தகர்களின் துன்பம்

—கொழும்பு, மார்கழி 14வ.

இலங்கையில் இந்தியர்கள் தனிப்பட்ட முறையிலே வர்த்தகம் நடத்த இனி இடம் கிடையாது என்றும் அவர்களுடைய வர்த்தக முதலீடுகள் இலங்கைக்குத் தேவையில்லை என்றும் வர்த்தக மந்திரி ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயகா இவ்வாரம் தெளிவாக அறிவித்திருக்கிறார். இந்தியர்களுக்கு வாச பர்மிட் வாங்கும் முறையைப் பற்றி விசாரணை நடத்துவதற்காக ஸ்ரீ சேனநாயகா தலைமையில் ஒரு உப கமிட்டியை மந்திரி சபை நியமித்திருந்தது. அந்த உப கமிட்டி, இந்திய வர்த்தகச் சங்கத் தூதுகோஷ்டி ஒன்றைச் சாட்சியமளிக்க அழைத்திருந்தது.

இந்திய வர்த்தகச் சங்கத் தலைவர் திரு வி. பி. ஏ. நாயர் தலைமையில் ஒரு உப கமிட்டியைச் சந்தித்து, இந்திய வியாபாரிகள் அனுபவித்து வரும் கஷ்ட நஷ்டங்களை எடுத்துரைத்தார்கள். இந்திய சிப்பந்திகளை நாடு கடத்துவது மட்டுமே ஆரம்பத்தில் அரசாங்கத்தின் திட்டமாக இருந்ததென்றும் இப்பொழுது ரூ. 50,000 வரையில் முதலீடு செய்துள்ள வியாபாரிகள்கூடத் திடீர் திடீர் என்று இலங்கையை விட்டு வெளியேறுமாறு கோரப்படுகிறார்கள் என்றும் வர்த்தகர்களின் நிச்சயமற்ற இந்த நிலைமை தொழிலைக் கடுமையாகப் பாதிப்பதாயும் ஸ்ரீ நாயர் உப கமிட்டியிடம் தெரிவித்துக் கொண்டார். "இந்திய வியாபாரிகளுக்கு இலங்கையில் இடமில்லை என்றால் கடைகளைக் கட்டிக் கொண்டு போய்விடத் தயார். இவ்விஷயத்தில் அரசாங்கத்தின் கொள்கை என்னவென்பது தெளிவாகத் தெரிய வேண்டும்" என்று ஸ்ரீ நாயர் கூறினார்.


இதற்குப் பதில் அளிக்கையில் தனிப்பட்ட முறையிலே இந்தியர்கள் இங்கு வர்த்தகம் செய்யும் காலம் மலையேறி விட்டது என்றும், தனிப்பட்ட இந்தியர்கள் தொடர்ந்து இங்கு வர்த்தகம் செய்வதை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை என்றும் வர்த்தக மந்திரி ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயகா தெரிவித்தார். இந்திய வர்த்தகர்கள் எப்பொழுது இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்பதையும் அவர்களுக்கு எவ்வளவு அவகாசம் கொடுக்கப்படும் என்பதையும் பிறகு யோசித்து அறிவிப்பதாக மந்திரி தெரிவித்தார்.

சிங்கள 'ஸ்ரீ' எழுத்து பொறித்த பஸ்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வரக் கூடாது என்றும் அந்த பஸ் வண்டிகளைத் தமிழர் வாழும் மேற்படி மாகாணங்களுக்கு அனுப்புவதாயிருந்தால் சிங்கள 'ஸ்ரீ' எழுத்துடன் தமிழ் 'ஸ்ரீ' எழுத்தையும் போட்டு அனுப்ப வேண்டும் என்றும் தமிழ் அரசுக் கட்சி அரசாங்க போக்குவரத்துச் சபைக்கு அறிவித்திருக்கிறது. இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் இணங்காத பட்சத்தில் ஒரு போராட்டம் நடப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும் என்றும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். சிங்கள 'ஸ்ரீ' எழுத்துடன் அரசாங்க பஸ் வண்டிகள் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்தால் போராட்டம் நடத்தித் தமிழ் 'ஸ்ரீ' எழுத்தைப் பொறித்து அனுப்புவோம் என்றும் போராட்டத்துக்கும் மனக் கசப்புக்கும் இடமில்லாமல் அரசாங்கமே இதைச் செய்வதுதான் விவேகமென்றும் திரு எஸ். ராஜதுரை எம். பி. ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்.


* * *

யாழ்ப்பாணத்தில் தீண்டாமைப் பழக்கம் மிக மிகக் கொடிய முறையிலே செயல்பட்டு வருவதாகவும் தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ளப் பள்ளிக்கூடங்கள் மறுப்பதாயும், தவறிப் போய்ச் சில பள்ளிக்கூடங்களில் இடம் கிடைத்தால் அங்கு தாழ்த்தப்பட்ட வகுப்புக் குழந்தைகளைத் தனியாக உட்கார வைத்து அவமதிக்கப்படுவதாயும் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை கல்வி மந்திரியிடம் முறையிட்டிருக்கிறது. இதைப்பற்றிப் பல தமிழ்த் தலைவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்து வருகிறார்கள். அடுத்த பொதுத் தேர்தலில் வோட்டுக் கிடைக்காமல் போய் விடுமோ என்ற பயத்தினால்தான் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் செய்யத் தலைவர்கள் தயங்குவதாயும், மக்களின் உண்மையான தலைவர்கள் தேர்தலில் கண்ணும் கருத்துமாக இல்லாது சேவையில் கருத்தாயிருக்க வேண்டும் என்றும் உள்ளூர்ப் பத்திரிகை ஒன்று இடித்துக் காட்டியிருக்கிறது.

— ரஜனி



தொழிற்சாலைகள் இன்ஸ்பெக்டர் திரு டி. வி. லக்ஷ்மணசாமி அவர்கள் சகோதரர் திரு டி. வி. கமலசாமி எம்.பி. அவர்களின் குமாரி செல்வி கற்பகத்துக்கும் நீதிபதி திரு எஸ். கணபதியா பிள்ளை அவர்களின் குமாரன் செல்வன் ஸ்ரீ. சொக்கலிங்கம் அவர்களுக்கும் ஜனவரி மாதக் கடைசியில் சென்னை தியாகராய நகரில் மிகச் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்குச் சென்னை நகரப் பிரமுகர்களும் உயர் அதிகாரிகளும் நண்பர்களும் உறவினர்களும் திரளாக விஜயம் செய்து மணமக்களுக்கு வாழ்த்துக் கூறினர். வாழ்க மணமக்கள்! வாழ்க பல்லாண்டு!



சந்திரனை அடையும் வழியில் மனிதன்

முதலாவது செயற்கைச் சந்திரன் ஆகாயத்தில் சுழலவிடப்பட்டதிலிருந்து உண்மைச் சந்திரன் மற்ற கிரஹங்களைவிட அதிக முக்கியத்துவம் அடைந்திருக்கிறது.

மனிதன் எப்பொழுதாவது சந்திரனை அடைய முடியுமா ?

சந்திரனை அடைய முதலில் ஒரு தங்கும் இடம் ஏற்படுத்த வேண்டும்—அந்த இடம் பூமியிலிருந்து சுமார் 1000 மைல் தூரத்திற்கு அப்பால் பூமியைச் சுற்றி சுழலும். அது ஒரு சிறிய நகரமாகி மேல் வானுலகில்—தொழிற்சாலைகளும் வீடுகளும் உள்ள—ஒரு சுறுசுறுப்பான வாசஸ்தலமாகும். சந்திரனை அடையும் விமானம் இங்கு கட்டப்படலாம். இவ்விமானத்தை பூமியில் கட்டுவதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன. பூமியின் ஆகர்ஷண சக்தியை எதிர்த்துச் செல்லக்கூடிய சக்தியை உண்டாக்கிக் கொள்வதற்கான எரிபொருளை கொள்ளக்கூடிய தகுந்த எடையை உடையதும் சந்திரனை அடைந்து திரும்பக்கூடியதுமான விமானத்தை மனதால் நினைக்கக்கூட இயலவில்லை.

ஓர் கிரஹத்திலிருந்து மற்றோர் கிரஹத்திற்கு செல்வது ஒரு விந்தையல்ல—இப்பொழுது விஞ்ஞான ஆராய்ச்சி—கூடிய சீக்கிரமே இதை உண்மையாக்கிவிடலாம்.




மிகத் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இவ்வுலகத்திலும் கூட மனிதனுக்கு தினசரி வாழ்க்கையில் சில பொருள்கள் மாறாத திருப்தியை அளிக்கின்றன. உதாரணமாக வில்ஸ் நேவி கட் சிகரெட்டுகள் எப்பொழுதும் உயர்ந்த ரகத்தை விரும்புவோர்களுக்கு உற்ற துணையாக இருக்கிறது. ஏனென்றால்...

வில்ஸ் எப்பொழுதும் நல்லவை

10 சிகரெட் கொண்ட பாக்கெட் 50 ந.பை (உள்ளூர் வரி தனி)

NC/98

Issued by The Imperial Tobacco Company of India Limited


1,000,000
புகைப்படக்காரர்களும்
தவறு செய்திருக்க முடியாது!
CLACK
ஆக்பாவின் சாகசமான சிறு ஸ்னப் எடுக்கும் காமிரா நிரூபணமான வெற்றியடைந்துள்ளது. 3 வருடங்களுக்கும் குறைந்த காலத்திற்குள் உலக முழுவதிலும் ஒரு மிலியன் ஆக்பா க்ளாக் காமிராக்கள் விற்பனையாகி யிருக்கின்றன. அதன் திறம்பட்ட அமைப்பும், மலிவான பிலிம் பொருத்தும் சாதனமும் சேர்ந்து, 2¼"x3¼" ஆல்பம் சைஸ் படம் எடுக்கக்கூடிய சிறிய மலிவான காமிரா இதுவே என்று நிரூபிக்கின்றன. இத்தகைய சேர்த்தியான காமிராவின் விலை ரூ. 29 தான்.
ஆக்பா ஏ. ஜி. லிவர்குஸன் டிரேட்மார்க்
Agfa
க்ளாக்
ஒரு மாபெரும் வெற்றி!
இந்தியாவில் ஏகபோக விநியோகஸ்தர்கள் :
ஆக்பா இந்தியா பிரைவேட் லிட்.
AGFA.57J5TH

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

22

அறவழியில் நேர்மையாக வாழ்க்கை நடத்திய ஒருவன் தன்னுடைய செல்வம் இழந்து விட்டு வறுமை யடைந்தபோதிலும் மக்கள் மதிப்பில் அவன் தாழ்ச்சி யடைய மாட்டான். சமூகத்தில் அவன் முன் போலவே கவுரவஸ்தானம்தொடர்ந்து பெறுவான். செல்வநிலை மாறினதால் அதில் ஒரு வேறுபாடும் உண்டாகாது.

ஒருவனுடைய வாழ்க்கை முறையில் நேர்மைக்குறை இருந்தால், அவனுடைய செல்வத்தைக் கண்டு அவனை மதித்தவர்கள் அந்தச் செல்வம் மறைந்ததும் அவனை மதிக்க மாட்டார்கள். நேர்மை வாழ்க்கையினால் உண்டாகும் காப்பு அவனுக்கு இராது.

கெடுவாக வையாது
உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு

[நடுவாக—நடுநிலைமை காத்து. தாழ்வு- செல்வத்தில் தாழ்ச்சி அதாவது. வறுமை. கெடுவாக வையாது —செல்வ நஷ்டத்தை ஒரு நஷ்டமாகக் கருதாது: சமூகத்தில் அவன் ஸ்தானம் முன் போலவே இருக்கும்.]

நேர்மை வாழ்க்கை தர்மத்துக்கு இசைந்தது என்பது மட்டும் அல்ல. உலக விவேகமும் அதுவே ஆகும்.

* * *

ஆங்கிலத்திலும் ஒரு பழைய வாசகம் உண்டு. 'உண்மைதான் லாபமும் தரும் யுக்தி' என்பது அந்தப் பழமொழியின் பொருள். அந்தக் கருத்தையே குறளில் காணலாம்.

வாணிகம் செய்வார்க்கு
வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

பிறருடைய லாப நஷ்டத்தைத் தங்களுடைய லாப நஷ்டத்தைப் போலவே கவனித்து வாணிபத் தொழில் செய்வதே நல்ல பயன் தரும் வாணிப முறை ஆகும். இதை வணிகர் அறிவார்களாக—என்கிறார் முனிவர்.

[தமபோல் - தம்முடைய லாப நஷ்டங்களைப் போலவே; பிறவும் - பிறருடைய லாபநஷ்டங்களையும். பேணிச் செயின் - கவனித்து நடத்தினால். வாணிகம் செய்வார்க்கு எது நல்ல வாணிகம் என்றால் பேணிப் பிறவும் தமபோல் செயின்- என்று பாட்டை வைத்துப் பொருள் கொள்ள வேண்டும்.]

'வாணிகம் செய்வார்க்கு' என்பதை வாணிகம் செய்வார்க்குமே என்று வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். வியாபாரம் செய்பவர்களுக்கும் நேர்மை சிறந்த வியாபார முறையாகும் என்பது கருத்து.

உலக வாழ்க்கையைத் துறந்து விடாமல் இல்லற வாழ்க்கை நடத்தும் மக்களுக்கு நேர்மையைப் பற்றிச் சொல்லவேண்டிய முறையில் முனிவர் சொல்லியிருக்கிறார். நேர்மையாக வாழ்ந்தாயானால் நீ சம்பாதித்த சொத்து, பழியோடு கலவாமல் உன்



மக்களுக்குப் போய்ச் சேரும். நேர்மையாக நீ வாழ்ந்தாயானால் உன் மக்களும் அதைப் பின்பற்றுவார்கள். அவர்கள் நல்ல பேர் எடுப்பார்கள். உன் மக்களின் நன்மையைக் கருதி நேர்மையாக வாழ்—என்கிறார். வறுமையடைந்தாலும் நீ சமூகத்தில் மதிப்பு இழக்க மாட்டாய்; எப்போதும் நேர்மையாக வாழ்ந்தாயானால் வறுமையைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை என்கிறார். நேர்மையானது வாணிபத் தொழிலுக்கும் உதவும். வியாபாரத்தில் பொய் சொல்லலாம், நேர்மை தவறி நடக்கலாம் என்பதெல்லாம் தவறு என்கிறார்.




கல்கத்தா மகாநாடு

சென்ற வாரம் கல்கத்தா பெருநகரம் அல்லோல கல்லோலப் பட்டது. கல்கத்தாவில் வங்கப் பெருமக்கள் ஹிந்தித் திணிப்பை எதிர்த்து மகாநாடு கூட்டுகிறார்கள்; அதற்குத் தலைவர் ராஜாஜி வருகிறார் என்றவுடன் வங்கப் பெருமக்களின் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது! அந்த மகாநாட்டுக்குத் தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பஞ்சாப் சீக்கியர்களின் தலைவர் மாஸ்டர் தாராசிங் வந்திருந்தார். ஆழ்ந்து சிந்தித்துப் பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன!

மார்ச்சு மாதம் 8, 9 தேதிகளில் நடைபெற்ற மகாநாட்டின் பலகாட்சிகளை இங்கு இப்பக்கங்களில் காணலாம்.











1. தலைவர் பேருரைக்குப்பின் கல்கத்தா வாழ் இரு தமிழ் நாட்டுச் சகோதரிகள் தமிழ் தேசியப் பாடல்களைப் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர்.

2. சீக்கியர்களின் தலைவர் மாஸ்டர் தாராசிங் ஆங்கிலத்தை ஆதரித்துப் பேசுகிறார்.

3. திரு ஈ. வி. கே. சம்பத் எம். பி. ஒரு முக்கியமான தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறார்.

4. மகாநாடு ஆரம்பிப்பதற்கு முன் பாரதத் தாய்க்கு மேடையிலிருந்த தலைவர்கள் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினார்கள்.

5. தலைவர் டாக்டர் ராதா வினோத்பால் மிக அருமையானதோர் பேருரை நிகழ்த்தினார்.

6. திரு ஸோமேந்திரநாத் டாகுர் ஒரு முக்கியமான தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறார்.

7. தலைவர் ராஜாஜி பேசுகிறார்.

8. திரு பிராங்க் அந்தோனி எம். பி. 'புது ஹிந்தி'யை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்.

9. இரண்டாவது நாள் மகாநாட்டுக்கு டாக்டர் எம். ரத்னசுவாமி தலைமை வகித்து மகாநாட்டைச் சிறப்பாக நடத்தித் தந்தார்.

போட்டோ: பார்த்தன் — வி. எஸ். சக்கரவர்த்தி





நிலச் சீர்திருத்தம்

சாத்தனூர் க. வெங்கடசுப்பு

நிலச் சீர்திருத்தம் என்பதே உண்மையில் விளைவைப் பெருக்கக் கூடிய உபாயங்கள் என்ற கருத்துடைய ஒரு சொல். இந்தச் சொல் ஒரு சாதாரண விவசாயியின் மனத்தில் மேற்கண்ட எண்ணத்தைத்தான் தோற்றுவிக்கும். அரசியல் நோக்கமே பிரதானமாக இல்லாமல், உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்கவும், விவசாயத் தொழிலின் முன்னேற்றத்துக்கான இட்டத்தைக் கொண்ட நில சம்பந்தமாகக் கொண்டு வர விரும்பும் எந்தச் சட்டத்தையும் யாவரும் வரவேற்பார்கள்.

விவசாயத் தொழில் நிபுணர்களும், பொருளாதார நிபுணர்களும் சேர்ந்து இதற்கான சட்டமியற்ற ஒரு இட்டம் தயாரிப்பார்களானால் அது காரண காரியத்துடன் இருக்கலாமென்று எதிர்பார்க்கலாம். ஆனால் நிலச் சீர்திருத்தம் வேண்டுமென்பதில் கவலையும், கவனமும் செலுத்துவோர் யாவரும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான். மக்களிடையே அரசியல் கட்சிகள் செல்வாக்குப் பெறவேண்டி இருக்கிறது. மக்களின் ஆதரவு இருந்தால்தான் தேர்தலில் வெற்றி பெற முடியும். தேர்தலில் அதிக வெற்றி அடைந்த கட்சி அரசியலைக் கைப்பற்ற முடியும். அரசியலிலே அமர்ந்து அதே மக்களின்மீது அதிகாரத்தைச் செலுத்த முடியும். இது ஒன்றே அரசியல் கட்சிகளின் குறிக்கோள். அதற்காக எதை வேண்டுமானாலும் மக்களிடையே பேசுவது என்பது இவர்கள் பழக்கமாகி விட்டது. மக்கள் ஆதரவைத் தங்கள் கட்சிகளுக்குத் தேட இவர்கள் கிராமங்களுக்கும் போகின்றனர். அங்குள்ள சூழ்நிலையைத் தாங்கள் வந்த காரியத்துக்குச் சாதகமாக வைத்துக் கொண்டு அங்குள்ளவர்களை அழைத்து, அவர்களை ரட்சிக்க, கடைத்தேற்றத் தாங்கள் வந்திருப்பதாக ஆவேசமாகப் பேசுகின்றனர். 'உழுபவருக்கே நிலம்' 'நிலமில்லாதவர்களுக்கெல்லாம் நிலம் கொடு' என்றெல்லாம் தொண்டை வறண்டு போகும் வரையில் கோஷங்களைப் போடுகின்றனர்.

அந்த அப்பாவிகளான கிராம மக்களின் மனத்தில் நப்பாசைகளை உண்டாக்கி நஞ்சும் ஊட்டி வருகின்றனர். நிலப் பசியும், தன்னைவிட அதிக நிலமுடையவர்களிடம் துவேஷ மனப்பான்மையும் அவர்களிடம் உண்டாகி வருகின்றன.

கிராமங்களில் பொது நன்மைக்குப் பல தலைமுறையாகப் பயன்பட்டுவந்த ஒற்றுமைச் சக்தி இன்றும் பல விதங்களில் உருக்குலைக்கப் படுகிறது. கிராமங்களில் ஒற்றுமை காரணமாகத் தேர்தல்களின்போது எந்தக் கட்சிக்காவது ஒரு கட்சிக்கு இவர்கள் வோட்டுகளையும் போட்டு ஆதரவளிப்பார்கள். இதற்கு அஞ்சிச் சில பிற்போக்குக் கட்சிகள் தங்கள் தேர்தல் திறமைகளால் ஒற்றுமையாக இருந்து வந்த கிராமங்களிலும் பிளவு ஏற்படுத்தி விட்டு வந்து விடுகின்றனர்.

விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் யாரும் சோம்பேறியாக இருக்கவே முடியாது. 'முதலாளி இல்லாவிட்டால் முழுங்கட்டை' 'உழவடை காலத்தில் ஊர் திரிந்தவன் அறுவடை காலத்தில் அரிவாள் எடுக்க வேண்டியிராது' என்ற பழமொழிகள் விவசாயிகளின் கடமையையும் பொறுப்பையும் உணர்த்துகின்றன.

'ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு'

என்ற வள்ளுவர் வாக்குப்படி நிலத்தை உழுது நன்றாக எரு விட்டு விதைத்துத் தண்ணீர் பாய்ச்சிவிட்டால் மட்டும் போதாது. அதைக் காப்பாற்ற வேண்டும். அதாவது ஆடுமாடுகள் மேயாமலும், திருடர் அபகரிக்காமலும் மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதல்ல. பயிர்களையும், நாளொருமேனியாக உண்டாகும் நோய் நொடிகளிலிருந்து காப்பாற்ற வேண்டும். ஒரு ஆளைக் கொண்டு வெறும் காவல் போட்டாலும் பயிரை நோய் நொடிகளிலிருந்து காப்பாற்ற இந்தக் காலத்தில் அதன் உடையவர்-பயிரிட்டவரின் பொறுப்பு அவசியம் இருந்தாக வேண்டும். விவசாயத்துக்கு வயல்களில் உழைப்பவர்கள் மட்டும் போதாது. அவர்கள் செய்யும் வேலைகளைக் கண்காணித்து, வேலை நுணுக்கங்களுடன் அதன் தேவைகளைக் கவனிக்கும் திறமையும் வசதியுமுள்ள நிர்வாகஸ்தர்களும் தேவைப்படுகிறது. எந்த வேலையையும் செய்வதற்கென்று பலர் இருந்தால், அதை நிர்வாகம் செய்ய ஒருவர் இருக்க வேண்டியிருக்கிறதல்லவா?

அப்படி இருக்க, பண்ணையார்-பாட்டாளி, மிராசுதார் - கூலியாள், முதலாளி-தொழிலாளி என்று பேதங்கள் காட்டி முன்னவரைப் பின்னவர்கள் துன்புறுத்துவதான கருத்துள்ள வசனங்களையும், பாடல்களையும், காட்சிகளையும் கொண்ட கதைகளைப் படமாக்கி, பார்ப்பவர்கள் திரும்பத் திரும்பப் பல தடவைகள் பார்க்க வேண்டுமென்கிற ஆவலைத் தூண்டும்படியாகச் செய்துவிடுகிறார்கள்.

ஆவடியில் நடைபெற்ற காங்கிரசில் சோஷலிஸ பாணியில் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. நில உடைமைக்கு வரம்பு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பத்து ஆண்டுகளுக்கு முன்பே காங்கிரஸ் மேலிடத்தார் காந்திய பொருளாதார நிபுணரான திரு ஜே. ஸி. குமரப்பா அவர்களின் தலைமையின் கீழ் விவசாய சீர்திருத்தக் கமிட்டி ஒன்றை அமைத்தார்கள். இந்தக் கமிட்டியின் அங்கத்தினராக இருந்த சென்னை மாகாணத்தின் முன்னாள் முதன் மந்திரி ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களும் விவசாய சீர்திருத்தம் பற்றித் தம் கருத்தை மிகத் தெளிவாகவும், ஆதாரங்களுடனும் எடுத்துரைத்திருக்கிறார். ஆனால் இந்தக் கமிட்டியின் மூலம் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையோ, கமிட்டியின்

முடிவையே பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

நிலவுடைமைக்கு வரம்பு கட்டுவதால் நிலமில்லாதவர்களில் சிலருக்குச் சிறிது நிலம் கிடைக்கும் வசதி இதனால் உண்டாகும். அவர்களுடைய ஓட்டுக்களெல்லாம் இனி காங்கிரசுக்கே கிடைக்கலாமென்ற நம்பிக்கை இருக்கலாம். ஆனால் கட்சி தன் அரசியல் செல்வாக்கினால் இவ்விதச் சட்டங்களைச் செய்து, தங்கள் கட்சிக்கு நிரந்தரமான செல்வாக்கைத் தேடிக் கொள்வதன் மூலம் தாங்களே ஆட்சி பீடத்திலும் வீற்றிருக்கலாம் என்று நினைப்பவர்கள், 16—2—58 கல்கி இதழின் 'புதிய சட்டமும் பயிர்த் தொழிலும்' என்ற தலையங்கத்தைப் படிக்க வேண்டியது அவசியமாகும்.

சமுதாயத்தினரின் நல்வாழ்வுக்காக விவசாயம், வியாபாரம், உத்தியோகம், கைத்தொழில்கள் என்ற நான்கு வகையான தொழில் முறைகள் இருந்து வருகின்றன. மக்கள், இந்த நால்வகைத் தொழில்களைச் செய்து அதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இதில் விவசாயம் மிக முக்கியமானது. தமிழ் நாட்டில் பண்டையப் பெருமை வாய்ந்த ஒரு தொழிலாகவே இது கருதப்பட்டு வருகிறது. விவசாயம் செய்யப்படும் நிலங்கள் இப்பொழுது ரயத்துவாரி என்ற ஒரே முறையின்கீழ் அரசாங்கத்தாரால் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

சென்னை அரசாங்கத்தின் 1946-47ம் வருஷத்திய புள்ளி விவரப்படி இந்த மாகாணத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள், 31,035,475 ஏக்கர்கள். பாழாகக் கிடக்கும் பயிரிடத்தக்க நிலம் 21,347,625 ஏக்கர்கள்; பயிரிடுபவர்களின் தொகை 36,142,332 பேர்களாவார்கள். இந்தப் புள்ளி விவரங்களைக் கொண்டு இந்த மாகாணத்தில் பயிர் செய்யப்படும் நிலங்களை இங்குள்ள விவசாயிகளுக்கு மட்டும் சமமாகப் பிரித்துக் கொடுப்பதென்று கருதினால் நன்செயும் புன்செயுமாக நபர் ஒன்றுக்குச் சராசரி 86 சென்டுகளே கிடைக்கும்.

2 ஏக்கர்களுக்குக் குறைந்த நிலமுடையவர்கள்	100க்கு	51 பேர்
2 முதல் 5 ஏக்கர்கள் வரை ..	..	31 பேர்
5 முதல் 10 ஏக்கர் வரை ..	..	7 பேர்
10 ஏக்கர்களுக்கும் அதிகமான ..	..	11 பேர்

இதிலிருந்து நம் மாகாணத்தில் விவசாயிகளிடையில் நிலவுடைமை பரவலாகவே இருக்கிறதென்று தெரிய வருகிறது.

விவசாயம்

நம் நாட்டின் மொத்த ஜனத்தொகையில் 100க்கு 80 பேருக்குமேல் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்களெல்லோரும் கிராமங்களில் வசிப்பவர்கள். இவ்வளவு அதிகமான பேர்கள் இதில் ஈடுபட்டிருக்கின்றனரென்ற காரணத்தால் இதை நல்ல வருவாயுள்ள ஒரு தொழிலென்றே எண்ணத் தோன்றும். இதற்கு முற்றிலும் நேர்மாறானது வருவாய். லாபமிருக்கிறதோ இல்லையோ பழங்காலம் முதற்கொண்டே பெருமைவாய்ந்த தொழிலென்பதினால் அதிகமான பேர்கள் இதில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் சொல்வதற்கில்லை. இது கிராமாந்திரங்களின் ஜீவாதாரமும் நிரந்தரமுமான ஒரே தொழிலாக இருப்பதனால், அங்கு வாழும் அத்தனை பேரும் இதிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். இதிலுள்ள மற்றொரு உண்மை என்னவென்றால் இவர்களுக்கு அவர்கள் வாழுமிடங்களிலோ, மற்றவிடங்களிலோ வேறு நிரந்தரமான வேலை கிடைக்காத காரணத்தினால்தான், இந்தத்தொழிலிலேயே அத்தனை பேரும் ஈடுபட வேண்டியவர்களாயினர்கள்.

இதையே தேசியத் திட்டக் கமிஷனின் அங்கத்தினரான விருத்த திரு சர்தார்லால் சிங் சமீபத்தில் பெங்களூரில் நடந்த தென்ராஜ்ய விவசாயிகளின் மகாநாட்டில், தம் தலைமைப் பிரசங்கத்தில் கூறினார். ''அரசாங்க உத்தியோகங்களில் மிகத் தாழ்ந்தவைகளான சேவகர்கள், காவல்காரர்கள் போன்ற நிரந்தரமான உத்தியோகங்களை விவசாயிகளுக்கு அரசாங்கம் கொடுப்பதாகச் சொன்னால் லக்ஷக்கணக்கான விவசாயிகள் தங்கள் தொழிலை விட்டு விட்டு அந்த உத்தியோகங்களுக்கு வரத் தயாராகி விடுவார்கள்'' என்று உண்மை நிலையை எடுத்துக் கூறியிருக்கிறார். அந்த மகாநாட்டில் பேசியவர்களின் சொற்களிலிருந்து விவசாயத்தின் உண்மை நிலை பிரதிபலிக்கிறது. அவர்களும் விவசாயிகளல்லவா?

பெங்களூர் மகாநாட்டில் எடுத்துக் கூறப்பட்டுள்ள உண்மைகளைச் சிலரால் மிகைப் படக்கூறப்பட்டதென்றோ, வேறு விதமாகவும் திருத்தியோ கூறப்படலாம். 1946-ஆம் ஆண்டில் கிராமக்கடன் பற்றி விசாரணை செய்த பொருளாதார நிபுணர் சென்னை அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்துள்ள யதாஸ்திலிருந்து கீழே சில புள்ளி விவரங்கள் தரப்படுகின்றன. அதிலிருந்தாவது உண்மை புலனாகும்.

1946-ஆம் ஆண்டில் விவசாயிகளின் வருமானமும், கடனும்.

1.	25 ஏக்கருக்கு அதிகமான நன்செய் புன்செய் நிலமுடையவர்களான பெரிய நிலச்சுவான்தார்களின் சராசரி குடும்ப வருமானம்	ரூ. 4332
	ஷை நபர்வாரி சராசரி வருமானம்	ரூ. 347
	ஷை நபர்வாரி சராசரி கடன்	ரூ. 113
2.	5 ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரை நன்செய் புன்செய் நிலமுடைய மத்தியதர விவசாயியின் குடும்ப சராசரி வருமானம்	ரூ. 1339
	ஷையார் நபர்வாரி சராசரி ..	ரூ. 201
	ஷையார் .. .. கடன்	ரூ. 64

3. 5 ஏக்கர்களுக்குட்பட்ட நன்செய் புன்செய் நிலமுடைய சிறு விவசாயியின் குடும்பச் சராசரி வருமானம்	ரூ. 687
ஷேயார் நபர்வாரி	ரூ. 116
ஷேயார் .. .. கடன்	ரூ. 37
4. நிலமில்லாமல் வாரம் குத்தகைக்குப் பயிரிடுபவரின் குடும்ப சராசரி வருமானம்	ரூ. 686
ஷேயார் நபர்வாரி	ரூ. 108
ஷேயார் .. .. கடன்	ரூ. 21
5. நிலமில்லாமல் கூலி வேலை செய்பவரின் குடும்ப சராசரி வருமானம்	ரூ. 477
ஷேயார் நபர்வாரி	ரூ. 91
ஷேயார் நபர்வாரி .. கடன்	ரூ. 8

இதிலிருந்து விவசாயிகளின் பொருளாதார நிலையை நன்ருகத் தெரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் புள்ளி விவரங்கள் பத்து வருடங்களுக்கு முன்பிருந்த நிலையையே காட்டுகிறதென்ருலும், வருமானம் ஒருவருக்கு அதிகமாக இப்பொழுது வரலாமென்று சொன்ருல் அதற்குத் தகுந்தவாறே மற்றவர்களுக்கும் இருக்கும். கடனையும் அவ்விதமாகவே வைத்துக் கொள்ளலாம். இதனுல் தான் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள் இந்திய விவசாயி, 'கடன்காரனுகப் பிறந்து, கடன்காரனுக வாழ்ந்து, கடன்காரனுகவே இறக்க வேண்டி இருக்கிறதென்று' ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கிருர்.

ஜீவாதார உரிமை

இந்த நாட்டுப் பிரஜைகள் பாரபட்சமின்றிப் பொதுச் சட்டங்களுக்கு முரண் இல்லாமல் தமக்கு இஷ்டமான தொழிலைச் செய்து தமது திறமைக்கேற்றபடி சம்பாதித்துக்கொள்ள அரசியல் சட்டத்தில் ஜீவாதார உரிமை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், தொழில் முதலாளிகளும் மாதமொன்றுக்கு ஆயிரமாயிரமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் நிலவுடைமை போன்ற சட்டங்களின் மூலம் விவசாயியின் பொருளாதார நிலையைப் பாதிக்கச் செய்வது எவ்வித நியாயமாகும்? அப்படிச் செய்வது அவர்களுடைய ஜீவாதார உரிமையைப் பறிப்பதாகாதா?

சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்க விரும்புவது உண்மையாஞல், சமூகத்தில் பல்வேறு தொழில்களின் மூலம் வருவாயுடைய யாவருக்கும் பொதுவாகச் சட்டம் இயற்றப்பட்டால், அது பாரபட்சமில்லாததாகும். நகரத்திலுள்ளோரில் சிலர் கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள ஆஸ்திகள் வைத்திருக்கின்றனர். பலர் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் மாத வருமானமாகச் சம்பாதிக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் இதுபோன்ற சட்டங்களைச் செய்யத் துணிவது விவசாயிகளுக்குப் பெரும் அநீதியை இழைப்பதாகும்.

அநுமானமும் அனுபவமும்

எந்தத் துறையிலும் அநுமானத்தைவிட அனுபவத்தின் துணை கொண்டு காரியங்களைச் செய்யத் துணிவது மிகவும் சிறந்ததும், அறிவுடைமையுமாகும். நிலவுடைமையைப் பொதுவுடைமையாகச் செய்த ரஷ்ய நாட்டிலும் இந்த முறையில் தோல்வி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. 'உழுபவனுக்கே நிலம். அதிக நிலம் வைத்திருப்பவர்களின் நிலங்களை அரசாங்கம் எடுத்து நிலமில்லா மக்களுக்குக் கொடுத்தால் உற்பத்தி இன்னும் பெருகும்' என்று வாதம் செய்யப்படுகிறது. இதை அநுமானமென்று கூற வேண்டுமே தவிர அனுபவ பூர்வமானதென்று ஒப்புக்கொள்ளவே முடியாது. இதை நன்ருகத் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்கள் கிராமங்களில் இன்றைய நிலையிலிருக்கும், பெரிய, நடுத்தர, சிறிய விவசாயிகளை விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

சிறிய நிலப்பரப்பை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறிய விவசாயி, தன் நிலத்தைத் தானே நேர்முகமாக உழுது ஆர்வத்துடன் பயிரிட முடியும். அதனுல் விளைவு பெருகும். பெரிய விவசாயி தனக்கு இருக்கும் அதிக நிலங்களைப் பயிரிடும்போது கவனக் குறைவும், அசட்டையினுல் விளைவு குறையும் என்று எடுத்துக் கூறப்படும் காரணங்கள் சரியானவையே அல்ல. இது அநுமானத்தினுல் கூறப்படும் வாதமாகும். பெரிய, நடுத்தர, சிறிய விவசாயிகள் மகசூல் விளைவே இதற்குச் சான்று கூறும். இவர்களில் முதல் இருவருடைய மகசூலை விடச் சிறிய விவசாயி தன் மகசூலை அதிகமாக விளைவிக்க முடியவில்லை. இதுவே உண்மை. இதுவே நடைமுறையில் அனுபவமாக இருந்து வருகிறது. அவ்விதம் அவர்கள் அதிக மகசூலை அடைய முடியா திருப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாவற்றுக்கும் சுலபமாகப் பரிகாரம் காண முடியாது.


பொதுவாக, கூட்டுறவு விவசாயமுறை மற்ற முறைகளைவிட மேலானதென்று சொல்லப்படுகிறது. இந்த விஷயத்தில் அவசரமாக ஏதாவது செய்யத் தலைப்படுவது நாட்டின் உணவு உற்பத்திக்கே கேடு விளைவிக்கும். ஆகையால் நிபுணர்களையும், அறிஞர்களையும் யோசனை கேட்டு அதன்படி செய்வதே புத்திசாலித்தனமாகும்.

'வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோனுயர்வான்'


என்று ஔவை மூதாட்டியார் போற்றியுள்ளபடி விவசாயம் முன்னேற்றமடைந்தால் கிராமங்கள் முன்னேற்றமடையும். கிராமங்களின் முன்னேற்றமே நம் நாட்டின் உண்மை முன்னேற்றமாகும்.

தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி.


அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன.



டெமிங் மார்வெல்
வீடுகளுக்கு



டெமிங் ஆயில்ரைட்
தொழிற்சாலைகளுக்கு



டெமிங் டூப்ளே
கிராம தண்ணீர் சப்ளைக்கு

வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு நம்பகரமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.

- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வந்துகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடல்களையும் விரைவில் சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை. அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள் பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே. இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங் பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

EEC

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்

ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.

5-7 செகண்ட் லைன் பீச், மதராஸ்.

பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேலக் கோபுர வீதி, மதுரை



ஹோட்டல் தொழிலும் விற்பனை வரியும்

தற்போது ஹோட்டல் தொழிலின் நிலை, விலைவாசிகள் ஏற்றத்தின் காரணமாகவும், விற்பனை வரியின் கொடுமையினாலும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பொருள்களின் விலை 1955—56ம் ஆண்டில் இருந்ததைவிடத் தற்போது சுமார் எட்டு சத விகிதம் அதிகமாகி உள்ளது. அதற்காக ஹோட்டல்களில் விற்பனை செய்யும் பண்டங்களின் விலையை அதிகரிக்கவும் இயலாது. அப்படி ஏற்றி விற்பனை செய்தால் பொதுஜனங்களின் மதிப்பை ஹோட்டல்கள் நிச்சயமாக இழக்க நேரிடும்.

உணவுப் பங்கீடு சமயத்தில் அரிசியின் விலை மூட்டை ஒன்றுக்குப் பதினெட்டு ரூபாய் வீதம் கிடைத்தது. காப்பிக் கொட்டை, சர்க்கரை முதலிய பொருள்களும் மிகவும் மலிவாக இருந்தன. அப்போது ஹோட்டல்களில் பண்டங்கள் என்ன விலைக்கு விற்கப்பட்டனவோ-அதாவது இட்டிலி ஒரு அணா வீதமும், காப்பி இரண்டு அணா வீதமும்தான்—அதே விலையில் இப்போதும் விற்கப்படுகின்றன. ஆனால் ஹோட்டல்களுக்கு வரிகள் உயர்ந்து கொண்டே போகின்றன; சட்டங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இவற்றைக் கவனிக்கும்போது நாட்டின் இன்றியமையாத ஹோட்டல் தொழில் வளர்ச்சியடைய வேண்டும் என்று சர்க்கார் கருதவில்லை என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

விற்பனை வரி அதிகாரிகள் இவ்வளவு கொள் முதல் செய்தால் இவ்வளவு சதவிகிதம் வியாபாரம் நடத்திருக்க வேண்டும் என்றும், இவ்வளவு சதவிகிதம் லாபம் கிடைத்திருக்க வேண்டும் என்றும் குத்து மதிப்பாக ஒரு கணக்கு வைத்துக் கொண்டு உத்தேசமாக ஒரு அளவு வியாபாரத்தை அதிகமாகச் சேர்த்துக் கொண்டு ஹோட்டல்களுக்கு வரி விதிக்கிறார்கள். இதனால் ஹோட்டல் வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

உருளைக்கிழங்கு, வெங்காயம், காய்கறிகள் போன்ற பொருள்களுக்கு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன. சர்க்கரை, காப்பிக் கொட்டை முதலியன ஒரு முனை விற்பனையிலுள்ளன. ஆனால் மேற்படி பொருள்களைக் கொண்டும், மற்றும் பல பொருள்களை விற்பனை வரி கொடுத்து வாங்கியும் பொதுமக்களுக்குப் பலகாரங்களும், காப்பியும் தயாரித்து அளிக்கும் ஹோட்டல்களுக்கு இரண்டரை சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது என்றால் அது விந்தையிலும் விந்தைதான்.

ஹோட்டல்களில் விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கு உண்பவரிடமிருந்து விற்பனை வரியை வசூல் செய்வதில்லை; வசூல் செய்யவும் முடியாது. எல்லோருக்கும் இது தெரிந்த விஷயம். ஆனால் மற்ற வியாபாரங்களுக்கு, (விற்பனை வரி வசூல் செய்யும் வியாபாரத்துக்கு) வசூலிக்கப்படும் வரியைவிட அரை சத விகிதம் அதிகமாக ஹோட்டல்களுக்கு வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

ஹோட்டல்களில் தயார் செய்து விற்பனை செய்யப்படும் பொருள்கள் குறிப்பிட்ட நேரத்தில் விற்பனையாகா விட்டால் வீணாகக் கூடியவை. விற்பனை வரிச் சட்டத்தில் விலக்களிக்கப்பட்டிருக்கும் உருளைக் கிழங்கு, வெங்காயம், காய்கறிகள் முதலியனவாவது சில நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். ஆனால் ஹோட்டல்களில் விற்பனை செய்யப்படும் பொருள்களோ சில மணி நேரங்களில் கெட்டு விடக் கூடியவை. இவைகளைச் சர்க்கார் நன்முகப் பரிசிலனை செய்து ஹோட்டல் வியாபாரத்துக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்.

ஹோட்டல் வியாபாரத்துக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பதன் மூலம் சர்க்காருக்கு வருமானம் குறைந்து விடுமெனக் கருதினால், ஹோட்டல் வியாபாரிகளுக்கு அவர்களின் முந்திய வருஷ வியாபாரத்தைக் கொண்டு 'விற்பனை லைசென்ஸ்' என்று ஏற்படுத்தி வியாபாரத்துக்குத் தகுந்தபடி தரவாரியாகக் கட்டணங்களை நிர்ணயம் செய்து, வருஷத்துக்கு ஒரு முறையாகவோ, அல்லது இரண்டு நான்கு முறைகளாகவோ கட்டணங்களை வசூல் செய்து கொள்ளலாம். இப்படிச் செய்வதன் மூலம் சர்க்காரின் வருமானம் அதிகம் பாதிக்கப்படாது என்பது திண்ணம்.


விற்பனை வரி விஷயமாக நியாயமான முடிவு செய்ய வேண்டியது சர்க்காரின் கடமை. இவைகளை எடுத்துச் சொல்ல வேண்டியது தற்போது மிகவும் அவசியமாக இருக்கிறது. சென்னை ராஜ்யம் தவிர மற்ற இடங்களில் ஹோட்டல்களுக்கு விற்பனை வரி இல்லை என்று தெரிகிறது. ஹோட்டல் தொழில் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள சர்க்கார், ஹோட்டல்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பார்கள் என்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

கும்பகோணம் வி எம். சுப்பிரமணிய ஐயர்
10—3—58 (உரிமையாளர், வெங்கடாசலபதி ...)

மக்கள் குரல்

மதுராந்தகம்-கடலூர் பாதையில் சென்னைக்கும் கடலூருக்கும் பஸ் ஒன்று ஓடுகிறது. அதில் மதுராந்தகம், செங்கல்பட்டு டிக்கட் போட்டு ஜனங்களை ஏற்றுவது கிடையாது. மூன்று லோக்கல் பஸ்கள் உண்டு. அவை செங்கல்பட்டுக்கும் - கடலூருக்கும் போகின்றன. இதில் மதுராந்தகத்துக்கு ஜனங்களை ஏற்றுவது கிடையாது. பொதுவாக, திங்கள், புதன், வெள்ளி, சனி இந்நாட்களில் இந்தப் பாதையில் ஜனங்கள் பஸ்ஸுக்காக அவதிப்பட வேண்டி இருக்கிறது. எல்லா பஸ்களிலும் கடலூரிலேயே டிக்கட் போட்டு விடு

மேஜை



வதால் பஸ் நிறைந்து விடுகிறது. கடலூரி லிருந்து வரும்போது தட்டாம்பேடு, கண் டிகை பாளையம், பாலூர், விருதுமங்கலம் ஆகிய இடங்களில் இருக்கும் ஜனங்கள் பஸ் ஏறிப் போவதற்கு வசதி கிடையாது. இதைப் பற்றி அரசாங்கம் கவனிக்குமா?

தட்டாம்பேடு 3—3—58 வி. என். கிருஷ்ணசாமிரெட்டி

மாயவரம் மேஸ்திரிகள்

மாயவரம் டிவிஷனில் 1954-ம் வருடம் ஜூன் மாதம் முதல் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. அதுமுதல் விவசாய இலாக்காவில் மேஸ்திரிகள் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் வேலை செய்து வருகிறார்கள். மற்ற டிவிஷன்களைவிட மாய வரம் டிவிஷனில் மேஸ்திரிகள் அதிகமான வேலை செய்து அதிக அபிவிருத்தியைக் காட்டி இருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்த மேஸ் திரிகளை வேலையிலிருந்து தள்ளிவிடுவார்கள் என்று தோன்றுகிறது.

இலாக்காவில் தொடர்ந்து வேலை செய்து இரண்டு வருடங்களானால், அவர்களை நிரந் தர ஊழியர்களாக்க வேண்டும் என்ற உத் தரவு இருக்கிறது. தற்சமயம் மாயவரம் டிவிஷனில் உள்ள மேஸ்திரிகளை மட்டும் நிரந் தர ஊழியர்களாக ஆக்கவில்லை. இதை கனம் விவசாய டைரக்டர் அவர்களும், விவசாய உதவி டைரக்டர் அவர்களும் கவனித்து எங் களை நிரந்தர ஊழியர்களாக்குவார்களா?

மாயவரம் 3—3—58 ஒரு விவசாய மேஸ்திரி

ரேடியோ நிகழ்ச்சிகள்!

கடந்த ஏழெட்டு மாதங்களாக அகில இந்திய வானொலியில் சில மாறுதல்கள் ஏற் பட்டிருப்பதை நேயர்கள் கவனித்திருக்க லாம். சங்கீத விழா, ரேடியோ சம்மேளனம், ரேடியோ வாரம் முதலிய விசேஷ நிகழ்ச்சி களில் 'ஸீனியர்' வித்வான்களின் சங்கீத நிகழ்ச்சிகளையே ஏற்பாடு செய்து ரஸிகர் களைத் திருப்தி செய்கிறார்கள். ஆனால், எங் களைப்போல் இளம் ரேடியோ பாடகர்களுக்கு ரேடியோவில் பாடும் சந்தர்ப்பம் அளிக்கப் படவில்லை. முன்பு இளம் பாடகர்களுக்கு ஊக்கமளித்துச் சந்தர்ப்பம் கொடுத்த ரேடியோ ஸ்தாபனம், இவ்வாறு நடந்து கொள்வது மன வருத்தத்தையும், சோர் வையும் கொடுத்திருக்கிறது.

நாகப்பட்டினம் 8—3—58 வி. அனந்தராமன்

மந்திரிகள் கடமை


தங்கள் 2-3-58 இதழில், ''மீராபென் அவர்களின் கருத்து'' என்ற தலைப்பின் கீழ் வந்துள்ள விஷயத்தைப் படித்ததும் நான் அடைந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை. ஒரு மேலை நாட்டுப் பெண்மணியின் கருத்து இந்த விதமாக இருக்க வேண்டுமென்றால், அவர் எவ்வளவு அனுபவசாலியாக இருக்க வேண்டும். நம் இந்தியாவின் மீதும், அதில் வசிக்கும் மக்கள் மீதும் அவர் கொண்டுள்ள மதிப்புக்கு நாம் மிகவும் கடமைப் பட்டுள்ளோம். அவருடைய கருத்துப்படி, நம் பெரிய மந்திரிமார்கள், மக்களின் நன் மதிப்பைப் பெற வேண்டுமானால், அவர்க ளுடைய உரிமைகளைப் பறிக்காமல் இருப்பது நலம். இந்திய மக்களின் நன் மதிப்பைப் பெற்று, சுதந்திரத்தை மந்திரிகள் கவன முடன் காக்க வேண்டுகிறேன்.

திருவனந்தபுரம் 3—3—58 ஆர். எம். சுப்பிரமணியம்

அமரர் ஆஸாத்

'கல்கி' 2-3-58 இதழ் தலையங்கத்தை வாசித்துக் கண்கலங்கினேன். மௌலானாவின் மறைவு முஸ்லிம்களுக்குப் பெரும் நஷ்டம் என்று எண்ணினேன். அவரது மறைவு இந்தியாவுக்கே நஷ்டம் என்று தெரிவித்த ''கல்கியை'' வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

தஞ்சாவூர் 27—2—58 வி. எம். சுலைமான்



திருவனந்தபுரம் எஸ். ஐ. சி டிவிஷனல் மானேஜர் திரு ஆர். வெங்கடசுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் திரு ராமநாதனுக்கும் சென்னை கெ அண்டு கம்பெனியைச் சேர்ந்த திரு பி. என். கிருஷ்ணமணியின் சகோதரி கமலாவுக்கும் சென்னை லாயிட்ஸ் ரோடில் உள்ள சத்தியக் கிரஹத்தில் வெகு சிறப்பாக விவாகம் நடைபெற்றது. திருமணத்துக்கு நண்பர்களும், உறவினர்களும், பிரமுகர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறி னார்கள். வாழ்க மணமக்கள்!



ராம பக்த ஹனுமான்

ஹிந்தியிலும் சரி, தமிழ், தெலுங்கிலும் சரி புராணக் கதைகள் எண்ணிறந்தவை படமாக வந்து விட்டன. ஒரே கதை பல முறை படமாக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படி யிருந்தும் புராணக் கதைகள் மீதுள்ள மோகம் நம் படாதிபதிகளை விட்டுவிடவில்லை. அதற்குக் காரணம் என்ன? மிதமிஞ்சிய பக்தி உணர்ச்சியா? அல்லது புராணக் கதைகளின் மீது அவர்கள் கொண்டுள்ள அபார நம்பிக்கையா? இரண்டும் இல்லை.

புராணக் கதைகளை நம்பாவிட்டாலும், புராணப் படங்களின் வசூல் விஷயத்தில் படாதிபதிகளுக்கு நம்பிக்கை சிறிதும் குறைந்துவிட வில்லை.

எவ்வளவு பிரமாதமான சமூகப் படமாயிருந்தாலும், அது ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான் ஓடும். அப்புறம் ஒரே ஓட்டமாக ஓடிப் போய் விடும்! ஆனால் புராணப் படங்கள் விஷயம் அப்படியல்ல; சிவராத்திரியும், வைகுண்ட ஏகாதசியும் நம் பாரத நாட்டில் உள்ள மட்டும், புராணப் படங்கள் (தியேட்டர் முதல் கூடாரச் சினிமா வரையில்) நிரந்தரமாக ஓடிக் கொண்டுதான் இருக்கும்.

"இன்றைக்குப் புண்ணிய தினமாகிய வைகுண்ட ஏகாதசி. நம் ஊர்க் கூடாரச் சினிமாவில், "ருக்மாங்கதா," "பக்த குசேலா" காட்டுகிறார்கள். வீட்டில் இராப் பொழுதை வீணாக்காமல் புண்ணியப் படம் பார்த்து வைக்கலாம். இரவு கண் விழிப்பதற்கும் சௌகரியமாயிருக்கும்" என்று பாட்டிமார்கள் கூறுவதைக் கேட்டு விழிப்பதில் பயனில்லை. வியக்கத்தான் வேண்டும்!

புதிதாக ஒரு சமூகப் படம் தயாரித்துச் சிரமப்படுவதைவிட, பழைய புராணப் படத்தின் புதிய காப்பியைத் தயாரித்தால் போதும். நல்ல லாபம் உண்டு.

பஸந்த் பிக்சர்ஸாரின் "ராம பக்த ஹனுமான்" படத்தில் திரைக் கதையைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. அப்படி யாராவது ஒருவர் கவலைப்பட்டுத்தான் ஆகவேண்டும் என்றால், அதற்கு இருக்கவே இருக்கிறார் வால்மீகி பகவான்!

படத்தின் வசனத்தைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லைதான்: 'டப்பிங்' படம் முழுவதும் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டிருக்கிறது. ஹிந்தி உச்சரிப்புக்கு ஏற்ற உதட்டு அசைவுகளைக் கொண்டு தமிழ் வசனம் அமைப்பது மிகவும் சிரமமான காரியம்தான். அந்தச் சிரமத்தை நாம் எவ்வளவு நன்றாக உணர்ந்திருந்தாலும், படத்தில் வாய் அசைவுக்கும் சொல் அமைப்புக்கும் ஒத்துழையாமை இயக்கம் நடப்பதைப் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அத்துடன், ஒலிப்பதிவும் படம் முழுவதும் ஒரே கோளாறாயிருக்கிறது.

ஆனால் படம் பார்க்கும் போது வசனம் புரியாதது சிரமமாயில்லை. காரணம், நன்றாய்த் தெரிந்த கதையை, சரியாகப் புரியாத வசனம் சிரமப்படுத்த முடியாதல்லவா?

ஸ்ரீராமபிரானைத் தேடிக்கொண்டு பூமண்டலம் முழுதும் சுற்றும் ஹனுமான் சபரியைச் சந்தித்து ஸ்ரீராமபிரானின் பிரபாவத்தை யறியும் காட்சி நன்றாயிருக்கிறது. சக்கரவர்த்தித் திருமகனின் திருநாமத்தை உருக்கத்துடன் சொன்னால் ஆகாத காரியம் இல்லை என்பதை, சபரிக்கு வணங்கி மலர்களைத் தந்த மலர்ச் செடிகள் நன்கு விளக்குகின்றன.

வாயுகுமாரனான ஹனுமான் அவதரிப்பதிலிருந்து படம் ஆரம்பித்து, கடைசியில் ராம பட்டாபிஷேகத்தில் முடிவடைகிறது.

சேதுபந்தனம், ஹனுமான் சஞ்சீவி பர்வதத்தைப் பெயர்த்தெடுத்து வருதல், ராம ராவண யுத்தம் முதலியவை நன்றாய்ப் படமாக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி காட்சிகள் ஸ்ரீராம பக்தியினால் ஹனுமான் சாதித்த

மகத்தான சாதனைகள் மனத்தில் பதியும் வண்ணம் அமைந்திருக்கின்றன. அசோக வனத்தில் ஹனுமான் அரக்க வீரர்களுடன் போர் புரியும் காட்சி விறு விறுப்பாய் அமைந்திருக்கிறது. சேதுபந்தனத்தில் 'ராம' என்றெழுதி ஹனுமான் போட்ட கற்கள் மிதக்கும் காட்சி பிரமாதம்.

இந்தப் படத்தின் தமிழ்ப் பாடல்களை இயற்றியவர் குயிலன். டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா, பி. பி. சீனிவாசன், சுசீலா, பி. லீலா, ஜிக்கி, ஜானகி ஆகியவர்கள் மேற்படி பாடல்களுக்குக் குரல் கொடுத்து உதவியிருக்கின்றனர். கே. வி. கோவிந்தன் வசனம் எழுதியிருக்கிறார்.

எல்லோருடைய சிந்தனையையும் தாண்டி விடும் ஓர் அரிய காட்சி 'ராமபக்த ஹனுமா'வில் வருகிறது.

சீதையைத் தூக்கி வரும்படி சூர்ப்பனகை யோசனை சொன்னதும் ராவணன் மனம் சிந்தனை செய்கிறது—அப்பொழுது அகங்காரம், ஆணவம் முதலிய தீக் குணங்கள் அவனுள் புகுந்து அவனை ஊக்குகின்றன. மேற்படி குணங்களை நங்கைகளாகக் காட்டியிருப்பது மிகவும் நன்றாயிருக்கின்றது.

கடைசியில் ராம பட்டாபிஷேகக் காட்சி கேவா கலரில் எடுக்கப்பட்டிருக்கிறது.

நன்றாய் நடிக்கிறார். ககன மார்க்கத்தில் கடலைத் தாண்டிச் சென்ற போதும், அசோக வனத்தில் அரக்கர்களுடன் அருஞ் சமர் புரிந்த போதும், ஸ்ரீராம நாம இன்பத்தில் திளைத்த போதும் மிகவும் நன்றாய் நடித்திருக்கிறார்.

ஸ்ரீராம பட்டாபிஷேக சமயத்தில் சீதை ஹனுமானுக்கு முத்துமாலையைப் பரிசாக அளிக்கிறாள். ஹனுமான் ஒவ்வொரு முத்தாகக் கடித்துப் பார்த்துத் துப்பி விடுகிறான். இச்செயலைக் கண்ட சபையோர் திகைக்கின்றனர். சீதை கோபம் கொள்கிறாள். ஸ்ரீராம நாமத்தின் இனிமை ஒரு முத்தில்கூட இல்லை என்று ஹனுமான் சொன்னதும் சபையோர் சந்தோஷ ஆரவாரம் செய்கின்றனர். அது மிகவும் உருக்கமாயிருக்கிறது.

ஹனுமானது ராம பக்திக்குச் சோதனை ஏற்படுகிறது. அதாவது ''ராம பக்த ஹனுமான்'' என்ற படத்தின் தலைப்புக்குப் பொருத்தமான ஒரு காட்சி வேண்டுமல்லவா? அதுதான் அந்தச் சோதனைக் காட்சி. தான் சதா வழிபடும் ஸ்ரீராம பிரானைத் தன் இதயத்தில் காட்டுகிறான். அதாவது ஹனுமான் தன் மார்பைப் பிளக்கவும் ஸ்ரீராம பட்டாபிஷேகக் கோலம் அங்கு சுடர் விடுகிறது. ஆனால் அது அவ்வளவு சரியாக அமையவில்லை. பனியனைக் கிழித்ததும் ஸ்ரீராமர் காட்சியளிப்பது போலிருக்கிறது!

வஞ்சகன் மாரீசனின் உதவியை ராவணன் நாடுவதும், அவன் முதலில் மறுத்து, பிறகு ஸ்ரீராமன் கை அம்பினால் மரணம் அடையும் பாக்கியத்தை எண்ணிச் சம்மதித்ததும், பொன் மானாக வந்து ஸ்ரீராமனைச் சீதையிடமிருந்து பிரித்ததும், அவ் வஞ்சகனின் சதியினால் லக்ஷ்மணனும் சீதையைப் பிரிய நேர்ந்ததும், பிறகு ராவண சன்னியாசியின் தோற்றமும் விறு விறுவென்று ஓடுகின்றன.

முதல் கோவலன் இரண்டாம் கோவலன் என்று நாடகங்களில் வருவது போல், இந்தப் படத்தில் முதல் ஹனுமான் இரண்டாம் ஹனுமான் ஆகிய இருவர் வருகின்றனர். பகலவனைப் பழமென்று நினைத்த பால ஹனுமான் பாய்கிறான் வானவீதியில்; அப்பொழுது இந்திரனின் வஜ்ராயுதம் அவனைத் தாக்கி நிறுத்துகிறது என்பது இதிகாசக் கதை. ஆனால் இந்த ஹிந்தி ஹனுமான் பொல்லாதவனாக இருக்கிறான். பகலவனையே பலகாரம் செய்து விடுகிறான்! இந்தக் காட்சி நன்றாயிருக்கிறது. பெரிய ஹனுமானாக நடிப்பவர்



இவ்வளவு தூரம் ''ராம பக்த ஹனுமான்'' படத்தைப் பற்றி எழுதிவிட்டு, அதில் வரும் ஸ்ரீராமபிரானையும் லக்ஷ்மணனையும் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லாமலிருக்கலாமா? ஹனுமானுக்கு இருக்கும் மகத்துவம் ஸ்ரீ ராமனாக நடிப்பவருக்கு இல்லை. மிகச் சாதாரணமாகத் தோன்றுகிறார். லக்ஷ்மணனுக்கும் அதே கதிதான். சீதை சங்கதி என்ன என்கிறீர்களா? அதுவும் அப்படியே. முன்பு வெளி வந்த ''ராமராஜ்யா'' என்ற ஹிந்திப் படத்தில் ஸ்ரீராமனாக நடித்த பிரேம் அதீபையும், சீதாபிராட்டியாக வந்த சோபனா சமர்த்தையும் பார்த்தவர்கள் இந்த ராமனையும் சீதையையும் பார்த்தால் மனம் கஷ்டப்படுவார்கள்.

நவாப் ராஜமாணிக்கம் நாடகக் குழுவினர் நடத்தும் ''சம்பூர்ண ராமாயண''த்தைப் பாராதவர்கள் ''ராமபக்த ஹனுமான்'' படத்தை நிச்சயம் ரசிப்பார்கள். அத்துடன் ஆஸ்திகத்தைப் பரப்பும் இதிகாசக் கதை இந்தச் சந்தர்ப்பத்தில் படமாக வருவதை நாம் வரவேற்கத்தான் வேண்டும்.

காந்தன்



கிஷோர் ஒரு பணக்கார வாலிபன்; அவன் நண்பன் 'கேதார் நடத்தை கெட்டவன்; கிஷோரின் மனைவி சாந்தாவின் அழகில் மயங்கி அதன் காரணமாகக் கிஷோரை மதுவுக்கும் பகட்டு மங்கையான நடிகை மனோரமாவுக்கும் அடிமைப்படுத்தி விடுகிறான். ஒரு நாள், கிஷோர் இரவு வெகுநேரம் ஆகியும் வராமற் போகவே, சாந்தா அவனைத் தேடிக் கொண்டு கேதாரின் வீட்டுக்குப் போகிறாள். கேதார் சாந்தாவைக் கண்டதும் வெறி கொள்கிறான்; ஆனால் சாந்தா அவனிடமிருந்து தப்பி வீடு வந்து சேருகிறாள்! சாந்தாவிடம் சந்தேகம் கொண்ட கிஷோர் அவளை வீட்டை விட்டே துரத்தி விடுகிறான். பெற்ற குழந்தை கமலாவையும் பிரிந்து சாந்தா வெளியேறுகிறாள்.

இந்தப் படத்தில், இதுவரையில் உள்ள கதைப் பகுதி மிக மிகச் சாதாரணமானது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காட்சியினால் படம் நன்றாயிருக்கிறது.

சாந்தா கணவனால் புறக்கணிக்கப்பட்டதும், நேரே கேதார் வீட்டுக்குச் சென்று அவனுடன் வெளியூர்செல்லத் திட்டமிடுகிறாள். இருவரும் ரயிலில் முதல் வகுப்பில் செல்லும் போது அயர்ந்து தூங்கும் கேதாரின் மார்பில் கத்தியைப் பாய்ச்சித் தன் பழியைத் தீர்த்துக் கொள்கிறாள். சாந்தா. பிறகு போலீஸ் ஸ்டேஷனில் சரணடைந்து பத்து வருஷக் கடுங்காவல் தண்டனையை அடைகிறாள்.

சாந்தாவாக நடிக்கும்] மாலா சின்ஹா இந்தக் கட்டத்தில் பிரமாதமாக நடித்திருக்கிறார். இந்தக் காட்சிக்குப் பின்னணிச் சங்கீதம் ஏதுமின்றி ரயில் செல்லும் ஓசையிலேயே காட்சியை முடித்திருப்பது நன்றாயிருக்கிறது.

புது மோகங் கொண்டு அலையும் கிஷோராகப் பிரதீப் குமார் நடிக்கிறார். அவர் நடிப்பில் விசேஷமாகச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. ஹிந்திப் படங்களிலேயே இப்பொழுதெல்லாம் சர்வ சாதாரணமாக ஆங்கில மோஸ்தர் உடைகளையும் நடன அலங்காரங்களையும் காண முடிகிறது. இந்தப் படம் (Fashion) என்ற பெயரிலேயே எடுக்கப் பட்டிருக்கிறபடியினால், மேற்படி காட்சிகளுக்குக் குறைவிருக்குமா என்ன?


என்னதான் நவநாகரிகமும், புது மோகமும் பூத்துக் குலுங்கினாலும் ஒரு பெண்மணி சிகரெட் புகைப்பது சகிக்கக் கூடியதாயில்லை. ஆங்கிலப் படங்களில் யார் என்னத்தைப் புகைத்தாலும் யாரும் கவலைப்பட மாட்டார்கள். ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் நவநாகரிக ஆடை அலங்காரங்களும் பாவனைகளும் வளர்ந்து விட்டன.

கிஷோருக்கு மனத் தெளிவைக் கொடுக்கும் பிச்சைக்காரனின் பாட்டு பாரதப் பெண்களின் பெருமையைப் பற்றிக் கூறுகிறது. இனிமையான அந்தப் பாட்டு இரண்டு முறை பாடப்பட்டும் சுவை குன்றவில்லை.


சௌகரியமும்
திறமையும்
தருமாறு அமைக்
கப்பட்டுள்ளது.
பிரபாத்
பிராடெக்ஸ்
“இந்தியாவில் முதன்மை
யானவை, இன்றும்
முதல்தரமானவை.”
Prabhat
Prabhat
பிரபாத் (ஸ்டவ் & லாம்ப்) பிராடெக்ட்ஸ் கம்பெனி, பிரைவேட் லிட்.
கோபின் சேம்பர்ஸ், பார்ஸி பஜார் தெரு, கோட்டை, பம்பாய்-1.

அமெரிக்காவின்

மிகக்கடின மோட்டார் பந்தயம்



இந்த டயர் அபாயமின்றி செல்லக்கூடியதென நிரூபித்துள்ளது



புகழ்பெற்ற இந்தியானுப்போலிஸ் "500" பந்தயத்தில், தொடர்ந்து 34 வருஷங்களாக பயர்ஸ்டோன் டயர்கள் வெற்றி கண்டுள்ளன. பந்தயத்தில் வெற்றிபெற அவசியமான உறுதிவாய்ந்த அந்த பயர்ஸ்டோன் டயர்களைத் தயாரிப்பதிலுள்ள அதே உன்னத தர சோதனையும், வேலைத் திறனுமே, "பாஸஞ்சர்" டயர் அபாயமின்றிச் செல்லுவதில் இணையற்றது என்பதை உறுதிப் படுத்துகிறது.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன்

டியூப்லெஸ் அல்லது டியூபுள்ளது

மன நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த டயர்

I 58



அத்தியாயம் 23

திரும்பிப் போ!

மாடி அறைக்குள் இரண்டு காதலர்கள், வேலாயுதமும் வள்ளியும்; தெருவில் இரண்டு போலீஸ்காரர்கள்; இந்த நால்வருக்கும் மத்தியில் தணிகாசலமும் உமாவும் நின்றார்கள்.

பயத்தினால் வெளுத்த முகத்தோடு "என்ன மாமா, இது?" என்று மெதுவாகக் கேட்டாள் உமா. "வந்திருப்பவர்கள் யார்? எதற்காகப் போலீஸ்காரர்கள் உங்களைத் தேடுகிறார்கள்?"

"தேவகியின் நிலத் தகராறைத் தீர்ப்பதற்காக முன்பு ஒரு முறை முல்லையூருக்குப் போனேனல்லவா? அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். ஒருமாதிரி நிலச் சண்டை முடிந்தபிறகு கல்யாணச் சண்டை ஆரம்பித்து விட்டது போல் இருக்கிறது!"

"ஊர் விவகாரத்தை இழுத்துப் போட்டுக் கொள்வதே உங்கள் வழக்கம்" என்றாள் உமா.

"நான் எதையும் இழுத்துப் போட்டுக் கொள்வதில்லை. விவகாரம் என்னைத் தேடி வந்திருக்கிறது. முடிந்ததைச் செய்ய வேண்டியது என் கடமை. கௌரியிடம் சொல்லி நீ வந்திருப்பவர்களைக் கவனித்துக்கொள். அதற்குள் நான் போலீஸ்காரர்களை அனுப்பி விட்டு வருகிறேன்."


போலீஸ்காரர்களில் ஒருவர், தாங்கள் வந்த காரணத்தைக் கூறினார்: "வந்திருக்கும் பட்டிக்காட்டுப் பையனையும் பெண்ணையும் பார்த்தால் எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. உங்களைத் தேடி வந்ததாக அவர்கள் சொன்னார்கள். நாங்கள் நம்பவில்லை. சொல்லிக் கொள்ளாமல் ஓடி வந்தவர்கள் போல் தெரிகிறதே?"

தணிகாசலம் அவர்களுடைய சந்தேகத்தைப் போக்கி முதலில் அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தான்.

"என்னிடந்தான் வந்திருக்கிறார்கள். பட்டணத்துக்கு முதல் முறையாக வந்திருப்பதால் அவர்களுக்குப் பயம் தெளியவில்லை. எப்படியோ கேட்டுக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தார்களே, அதுவே பெரிய காரியம். சந்தேகத்துக்கு இடமான பலர் இந்தப் பட்டணத்தில் தைரியமாக நடமாடும்போது, இந்தக் கிராமவாசிகள் மட்டும் எப்படியோ உங்களிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பரவாயில்லை. இவர்கள் என்னுடைய விருந்தாளிகள் தாம்."

குளித்து விட்டுத் தணிகாசலம் விருந்தினருடன் காலைப் பலகாரம் சாப்பிட்டான். வள்ளியைத் தனியாக அழைத்து வைத்துக் கொண்டு கல்யாணி அம்மாளும் கௌரியும் அவளிடம் பேச்சுக் கொடுத்தனர். உமா கல்லூரிக்குச் சென்ற பிறகு தணிகாசலம் வேலாயுதத்தை விசாரித்தான். போலீஸார் தேடி வந்ததிலும் நியாயம் இருந்ததாய்த் தோன்றியது.

"நீங்கள் இருவரும் இப்படி யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் புறப்படலாமா? வள்ளியைப் பெற்றவர்களின் மனம் என்ன பாடுபடும்? போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு பெண் பிள்ளையுடன் போய் நிற்க வேண்டிய



நிலை வந்தால அது எவ்வளவு கேவலம் என்பதை யோசித்தீர்களா ?''

தணிகாசலத்தால் வேலாயுதத்தின் செய்கையை மன்னிக்கவே முடியவில்லை. மனங் கொண்டமட்டும் அவனைத் திட்டினான் : ''அவள்தான் பெண் பிள்ளை என்றால், உனக்குப் பொறுப்பு வேண்டாமா ? அவளுடைய பண்பையும், அவள் பிறந்த வீட்டின் மதிப்பையும் காப்பாற்றும் முறையில் நீ நடந்து கொண்டிருக்க வேண்டும்.''

வேலாயுதம் நடுநடுங்கிப் போனான். அவன் கூறிய விவரங்களிலிருந்து, அவர்கள் சென்னைக்கு வந்த காரணம் தணிகாசலத்துக்கு ஓரளவு விளங்கியது. வள்ளியும் வேலாயுதமும் இப்படிச் செய்யாமல் வேறு எப்படி நடந்து கொண்டிருக்க முடியும் என்றும் அவனால் நிதானிக்க முடியவில்லை.

வேலாயுதத்தின் மாமா செல்லையா, முதலில் அவர்களுடைய கல்யாணப் பேச்சுக்கு ஆதரவாக இருந்து, பிறகு கடைசி நேரத்தில் பேச்சு மாறி விட்டாராம். முழுக் குற்றமும் அவர் பேரில் இல்லை. அடுத்த கிராமத்தின் பெரிய பண்ணைக்காரர் தம்முடைய மகனுக்குப் பெண் கேட்டிருக்கிறார். பெண் கொடுக்காவிட்டால் ஆபத்து வரும் என்று எச்சரிக்கையும் செய்திருக்கிறார். செல்லையா பெரிய பண்ணைக்குப் பணிந்து விட்டார். அவருடைய பயமுறுத்தலுக்கு மசிந்து விட்டார்.

வேலாயுதம் மென்று விழுங்கிக் கொண்டே கூறினான் :

''அவுங்க அப்பா செய்த இம்சை பொறுக்க முடியாமல், வள்ளி ராத்திரியோடு ராத்திரியா வந்து என் வீட்டுக் கதவைத் தட்டிச்சுங்க. வள்ளியை அந்தக் கோலத்திலே பார்த்தால் கல் மனசும் கரைஞ்சு போகும். என்னைப் பார்த்து, 'என் கழுத்திலே தாலியைக் கட்டு; இல்லாட்டி என்னைச் சுருக்குப் போட்டுக் கொல்லு'ன்னு சொல்லிச்சுங்க. ரகசியமாய் என்னோடு கூட்டாளிங்ககிட்ட சொல்லிட்டு, ரயிலேறி இங்கே வந்தேனுங்க. வந்தது தப்புத்தான். இதைவிட எனக்கு வேறே வழி ஒண்ணும் தெரியலீங்க.''

வழி காண்பித்தான் தணிகாசலம்.

''நாளைக்கே என்னோடு புறப்பட்டு இரண்டு பேரும் முல்லையூருக்கு வாருங்கள்; செல்லையாவிடம் உங்களைப் பற்றி நான் எடுத்துச் சொல்லுறேன்'' என்றான். இப்பொழுது வேலாயுதத்தின் பயம் இரண்டு மடங்காகியது.

''மாமாவைக் கேட்டுப் புண்ணியமில்லீங்க'' என்றான் வேலாயுதம்.

'கல்யாணம் செய்துக்காமல் நாங்க இனிமேல் முல்லையூருக்கு வந்தால் நல்லாயிருக்காது. பேசாமல் இந்த ஊர்க்கச்



சேரியிலே எங்களுக்கு ரிஜிஸ்தர் கல்யாணம் பண்ணி வையுங்க. வள்ளிக்கும் சட்டப்படி வயசாயிடுச்சு.''

தணிகாசலம் இதை ஒப்புக் கொள்ளவில்லை. வேலாயுதமோ முல்லையூருக்குத் திரும்புவதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. அவன் தனக்குத் தெரிந்த அரைகுறைச் சட்ட ஞானத்தை விளக்கிப் பேசினான்.

தணிகாசலத்துக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. ''பெற்றவர்கள்-பெரியவர்கள் சம்மதமில்லாமல் கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய நெருக்கடி ஒன்றும் உங்களுக்கு இப்போது

ஏற்படவில்லை. நம்மை வளர்த்த பரம் பரையின் உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்து அவர்களிடம் நாம் நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். சட்டத்தால் சாதிக்க முடியாததை யெல்லாம் சமரச முயற்சியால் சாதித்துப் பெற்று விடலாம்.''



வேலாயுதம் மனம் உடைந்து போய், ''நான் கைந்து வருஷங்களாய் நாங்கள் வளர்த்த ஆசையை நீங்கள் இப்படி அழிச்சுப் பேசலாமா?'' என்று கேட்டான். அத்துடன் அவன் விடவில்லை. தணிகாசலம் எழுதிய கதைகள்கூடத் தங்கள் அன்பின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தன என்று கூறினான். ''நீங்கள் எழுதின கதைகளை நான் படிச்சுட்டு வள்ளிக்கு இரவல் கொடுப்பேன். எத்தனையோ கதைகளில் நீங்கள் பல பேருக்குக் கல்யாணம் செய்து வைச்சிருக்கீங்க. இப்போ நேரில் வந்து கேட்டால் முடியாதுன்னு சொல்லலாமா?''

தன் கதைகளைக் கொண்டே தன்னை வேலாயுதம் தாக்கியது தணிகாசலத்துக்கு என்னவோ போலிருந்தது. ''கதைகளில்கூட இப்படிப் பெற்றவர்களிடம் சொல்லாமல் வருகிறவர்களுக்கு நான் கல்யாணம் செய்து வைத்திருக்க மாட்டேன்'' என்றான்.

இந்தத் தர்மசங்கடத்திலிருந்து அவர்களை எப்படி விடுவிப்பதென்று அவனுக்குத் தெரியவில்லை. காதலர்களின் மனநிலை

தணிகாசலத்தை வாட்டி எடுத்தது. இவர்களுக்குக் குறுக்கே நின்ற பெரிய பண்ணையைப்பற்றி விசாரித்துக் கொண்டான். உடனடியாகச் செல்லையாவுக்கு ஒரு கடிதம் எழுதினான்: ''வள்ளியும் வேலாயுதமும் என்னுடைய வீட்டுக்கு வந்து தங்கியிருக்கிறார்கள். நீங்கள் வள்ளியைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களிடம் பேசிப் பார்த்ததில், நீங்கள் சம்மதிக்காததால் மிகவும் மனம் நொந்து போயிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதுவிஷயமாக உங்களிடம் நேரில் பேசுவதற்காக நான் முல்லையூருக்கு வருகிறேன். ரயிலடிக்கு வந்து என்னைச் சந்தியுங்கள். அவர்களுக்குக் கல்யாணம் செய்து வைத்தால் இன்பமாக வாழ்க்கை நடத்துவார்கள் என்று நான் நம்புகிறேன்.''

எந்த ரயிலில் வந்து அவனைப் பார்க்க வேண்டுமென்பதையும் குறிப்பிட்டு எழுதினான் தணிகாசலம்.

நெருங்கிய பழக்கமோ உறவோ இல்லாத மூன்றாவது மனிதர்களுக்குப் பரிந்து கொண்டு அவன் முல்லையூருக்குச் செல்வது கௌரிக்கும் உமாவுக்கும் பிடிக்க வில்லை. கல்லூரியிலிருந்து திரும்பிய உமாவையும் அழைத்து வைத்துக் கொண்டு கௌரி தணிகாசலத்திடம் முல்லையூருக்குப் போக வேண்டாமென்று தடுக்கப் பார்த்தாள். தணிகாசலம் இதைக் கேட்கவில்லை. உமாவின் பக்கம் திரும்பி, ''அந்த நாட்களில் எங்களுக்கு நடந்ததையெல்லாம் மறந்து விட்டுப் பேசுகிறாள் இவள்; எங்கள் கல்யாணத்தின் போது நாங்கள் பட்ட கஷ்டங்களைக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தால் தெரியும்'' என்றான்.

கௌரியின் நினைவுகள் பின்னால் ஓடின. மங்களத்துப் பாட்டிக்கும், வீரம்மாள் பாட்டிக்கும் நடந்த சண்டைகளையும், அதனால் தான் மண்டையை உடைத்துக் கொண்டதையும் நினைவுக்குக் கொண்டு வந்தாள். உறவு முறைக்குக் குறுக்கே பணம் நின்று தடுத்ததை அவளால் இப்போது மறக்க முடியவில்லை. கண்கள் நீரால் நனைந்தன. ''தாராளமாய் நீங்கள் இவர்களுக்குக் கல்யாணம் செய்து வையுங்கள்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினாள்.

''உங்கள் கதைகளைப் படித்துத் தங்கள் அன்பை வளர்த்துக் கொண்டதாகக் கூறினார்களாமே, இவர்கள்?'' என்று கேட்டாள் உமா.

''அதுவும் ஒரு காரணந்தான்; ஆனால் நான் யாரையும் பெற்றோருக்குத் தெரியாமல் ரயிலேறச் சொல்லவில்லை'' என்றான் தணிகாசலம். பிறகு அவனே, ''உலகத்தில் இந்தக் காதல் போராட்டங்கள் இன்று-நேற்று நடைபெறவில்லை. சங்கத் தமிழைப் படித்தால் அந்தக் காலத்துத் தமிழ் மகன், தான் விரும்பிய பெண்ணுக்காக மடலேறி மன்றாடி யிருப்பது தெரியும். இப்போது காலம் மாறி விட்டது. வேலாயுதம் மடலேறுவதற்குப் பதிலாக ரயில் ஏறி யிருக்கிறான்!''

இதற்கு மேல் தணிகாசலத்தின் முல்லையூர்ப் பிரயாணத்தை அவர்கள் தடுக்க வில்லை. ''பண்ணைக்காரர்களுடன் மோதிக் கொள்ளாமல் கவனமாய்க் காரியத்தை முடித்துக் கொண்டு திரும்பி வாருங்கள்'' என்று அவனுக்கு எச்சரிக்கை செய்தாள் உமா.

* * *

மூன்றாவது நாள் மாலை நேரத்தில் தணிகாசலம் முல்லையூர் ரயிலடியில் வந்து இறங்கினான். அவனைத் தவிர மற்றொரு குடும்பமும் அங்கே இறங்கி, தங்களுக்காகக் காத்திருந்த வில்வண்டியில் ஊரை நோக்கிச் சென்றது. ரயிலடியில் வேலாயுதத்தின் மாமா செல்லையாவையோ அவருடைய வண்டியையோ காணவில்லை. சற்று நேரம் காத்து நின்று அவரை எதிர்பார்த்தான். யாரும் வரவில்லை. சுமார் மூன்று மைல் தூரம், அறுத்தோடியிருந்த மாட்டு வண்டிப் பாதையில், தனியாக நடந்துதான் செல்ல வேண்டும். மாலை நேரமும் மங்கிக் கொண்டு வந்து இருளைக் கூவி அழைக்கப் பார்த்தது.

காலை எட்டப் போட்டு நடந்தான் தணிகாசலம். 'இக்-இக்' கென்று காரணம் புரியாமல் அடித்துக் கொண்டது அவன் மனம். 'செல்லையாவுக்குக் கடிதம் கிடைக்காமல் இருந்திருக்காது. அவர் ஏன் என்னைக் காண வரவில்லை? வண்டியாவது அனுப்பி யிருக்கலாமே! கிராமவாசிகளும் இப்போது இந்தத் தேவையற்ற நாகரிகத்தைக் கற்றுக் கொண்டு விட்டார்களோ என்னவோ?''

ஒரு புறம் மூங்கிற் புதர்களும், ஈச்ச மரங்களும் மண்டிக் கிடந்தன. சற்று நேரத்தில் உலகத்தை மூடப் போகிற இருள் இப்போது அந்தப் புதர்களுக்குள்ளே ஒளிந்து கொண்டிருந்தது. மற்றொரு புறத்தில் பச்சை நெல் வயல்கள் கருநீலம் பாய்ந்து கதிரொளிக்கு விடை கொடுத்துக் கொண்டிருந்தன. வெகு தூரத்தில் சிலர் வரப்புகளின் மேல் நடந்து வருவது தெரிந்தது.

திருப்பம் ஒன்றில் பாதை வளைந்தது. யாரோ ஒரு கிராமவாசி மூங்கிற் புதர்களிலிருந்து வெளிப்பட்டுத் தணிகா

சலத்தைப் பின்பற்றி நடந்தான். பேச்சுத் துணைக்கு ஆள் கிடைத்தது தணிகாசலத்துக்கு. கிராமவாசியே முதலில் பேச்சுக் கொடுத்தான்.

''செல்லையாவைத் தேடிக்கிட்டுப் பட்டணத்திலே யிருந்து வருகிறீர்களா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்றான் தணிகாசலம்.

''ஏன் செல்லையா உங்களை வரச் சொல்லிக் கூப்பிட்டு அனுப்பினாரா?''

அதற்கு அவன் பதிலளிக்கவில்லை.

''பண்ணை விட்டு மருமகப் பொண்ணு வள்ளி இப்பொ பட்டணத்திலெ உங்க வீட்டிலேதான் இருக்குதுங்களா?''

''ஆமாம்; ஏன்?''

திடீரென்று குறுக்கே நின்று முறைத்தான் அந்தப் பேர்வழி. ''நீங்க போட்ட கடுதாசி செல்லையாவுக்குப் போய்ச் சேரவில்லை. அது எங்க பண்ணைக்காரர் கையிலே சிக்கிடுச்சுங்க. நீங்க இப்ப மரியாதையா வந்த வழியைப் பார்த்துக்கிட்டுத் திரும்பிப் போறீங்களா? இல்லே, உங்களைத் திருப்பி அனுப்பணுமா? வெளியூர்க்காரங்களுக்கு எங்களோட விசயத்திலே என்ன அக்கறையாம்?''

பண்ணைக்காரரின் ஆள் அவன்.

தணிகாசலம் சிரித்தான். ''உறவு முறைக்காரங்களுக்கு மத்தியில் உங்கள் பண்ணைக்காரர் குறுக்கிடலாம்; ஆனால் அவர்களுக்காகப் பரிந்து பேச நான் இங்கே வரக்கூடாதோ?''

''உங்க உசிர் மேலே ஆசையிருந்தால் திரும்பிப் போங்க!'' என்று கத்தினான் அந்த மனிதன். அவனைப் பார்த்தால் புல் தடுக்கிப் பயில்வான் போல் தோன்றியது. தணிகாசலத்தின் ஒரு அறையைத் தாங்கக் கூட அந்த எலும்பு மனிதனின் உடலில் திராணியில்லை. அவன் பேசிய பேச்சோ பெரிய பேச்சாக இருந்தது. ''அடுத்த ரயிலிலே இரும்பிப் போய் வேலாயுதம் பயலைப் புடிச்சுப் போலீஸிலே குடுத்திடணும். உடனே செல்லையாவுக்குக் கடுதாசி போட்டால் அவர் வள்ளியை அழைச்சுக்கிட்டு வந்திடுவார். இது எங்க எசமான் உத்தரவு. இல்லாட்டி... இல்லாட்டி...''

''இல்லாவிட்டால்?''

''திரும்பிப் போ, சார்! உனக்கு ஏன் சார் இந்தத் தொல்லை? ஒரு அடி முன்னாலே எடுத்து வைச்சியோ, உன்னோட முழங்கால் முட்டி எலும்பு கழண்டு போகும்! போ, சாருன்னு போயிடு!''



தணிகாசலத்தின் கை பரபரத்தது. இருந்தாலும் பொறுமையைக் கடைப்பிடித்து அவனை ஒதுக்கித் தள்ளி விட்டு நடந்தான். கிராமவாசி அவனை விடவில்லை. ''போகமாட்டே? மரியாதையாக நீ போகமாட்டே?'' என்று மிரட்டிக் கொண்டே பின்தொடர்ந்தான். குரைக்கும் நாய்களுக்குக் கடிக்கும் துணிவு கிடையாது என்பதால் தணிகாசலம் அவனைப் பொருட்படுத்தவில்லை.

பாதையில் பயங்கரமான மற்றொரு திருப்பம் வந்தது.

கூட வந்த மனிதன் தன் வாயில் கை வைத்துத் தன் பலங் கொண்ட மட்டும் சீட்டி அடித்தான். தணிகாசலத்தின் இருதயம் அந்தச் சீட்டியின் அலறல் கேட்டுக் குலுங்கி விழுந்தது. உடனே மூன்று நான்கு குரல்கள் மூங்கில் புதரிலிருந்து ஒன்றாக எழும்பின.

''திரும்பிப் போ! திரும்பிப் போ! திரும்பிப் போ!''

யாராவது அரசியல்வாதிகளோ, அல்லது பெரிய தலைவர்களோ வந்தால் இது போன்ற வரவேற்பை எதிர்க் கட்சிக்காரர்கள் நகரங்களில் ஏற்படுத்துவது வழக்கம். தனக்கு இப்படி ஒரு எதிர்ப்பு கிளம்பும் என்று அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. திகைத்தான்.

புதர்கள் அசைந்தன; புலிகள் தாவின; நான்கு முரடர்கள் கைகளில் மூங்கிற் கழிகளோடு முன்னே நின்று அவனை வழிமறித்தார்கள்.

''திரும்பிப் போ!'' பாட்டுப் பாடினார்கள். தணிகாசலம் மரம் போல் நின்று ஒவ்வொருவர் முகமாக உற்றுப் பார்த்தான். கள்ளச் சாராயத்தின் கயவாளித்தனம் அவர்களுடைய முகங்களில் தெரிந்தது. அவர்களிடம் நியாயம் பேசி அவர்களுடைய மனத்தை மாற்ற முடியாது.

'வருவது வரட்டும்; நேர்மைக்குச் சாவுதான் பரிசென்றால் அது தாராளமாய்க் கிடைத்து விட்டுப் போகட்டும்; எத்தனையோ குடும்பங்கள் தெருவில் நின்று தவிப்பது போல் என் குடும்பமும் தவிக்கட்டும்; நான் ஒருவன் இல்லாவிட்டால் இந்தநாட்டுக்குத்தான் என்ன நஷ்டம்? நடுநிலையில் நின்று நியாயம் பேச வருகிறவனை இந்த மூளை கெட்ட

கூட்டம் உயிருடன் விட்டு வைக்காது போலிருக்கிறதே!'

தணிகாசலம் கண்களை மூடிக்கொண்டான். மிருந்த தைரியத்துடன் அவன் மேலே நடந்தான்.

''மடார்! மடார்! மடார்!'' என்று முழங்காலுக்குக் கீழே மூங்கிற் தடிகள் தாக்கின. முதுகிலும் தோளிலும்கூட அவை விழுந்தன. கூக்குரல் எழுப்ப வேண்டாம் என்றுதான் தணிகாசலம் நினைத்தான். அவ்வளவு மனப் பக்குவம் அவனுக்கு ஏற்படவில்லை. தன்னையறியாது கத்தித் துடித்து விட்டான்.

கை வலிக்கும் வரையில் அவனை அடித்துப் போட்டு விட்டுக் காலிகள் ஐவரும் புதரின் இருளுக்குள் ஓடிமறைந்தார்கள். தணிகாசலம் கத்தினான்; கத்தினான்; கத்திக் கொண்டே இருந்தான்.

கத்துகிற சக்தியும் ஓய்ந்த பிறகு மெல்ல மெல்ல அவனிடமிருந்து தீனக் குரலில் முனகல்கள் மட்டும் மெதுவாக வெளிப்படத் தொடங்கின.

அத்தியாயம் 27

வள்ளி திருமணம்

எழுத்தாளன் மனிதத் தன்மையில் நம்பிக்கை வைத்து எழுத்துப் பணி செய்கிறவன். மனிதத் தன்மையில் படியும் தூசி துப்புக்களை ஊதிக் களைந்து அதை உயர்த்துவதற்காக உழைப்பவன். தணிகாசலமும் அதே மனிதத் தன்மையில் நம்பிக்கை வைத்துத்தான் முல்லையூருக்குத் தனி வழி புறப்பட்டான். மிருகத் தன்மை அவனைத் தடுத்து நொறுக்கப் பார்த்தது.

விழுந்து கிடந்த தணிகாசலத்தின் கண்களுக்கு எதிரில் ஒரே சமயத்தில் ஆயிரம் காக்கைகள் ஒன்றாய்ப் பறப்பது போல் தோன்றியது. பிறகு அவனிடம் சுய உணர்வு இல்லை. அடுத்தாற் போல் கனவுலகத்தில் நடப்பவை போல் என்னென்னவோ நடந்தன. யார் யாரோ வந்தார்கள்; கூடிப் பேசினார்கள்: யார் யாரையோ திட்டினார்கள். தணிகாசலத்தைக் கட்டை வண்டியில் தூக்கிப் போட்டுக் கொண்டு கிராமத்துக்குள் சென்றார்கள். அவனைச் சுற்றிக் கூடிய பலரிலும், வேலாயுதத்தின் நண்பர்கள் இருவரைத் தணிகாசலத்தால் கண்டு கொள்ள முடிந்தது.

''இவர் யார், தெரியுமா? நம்ப வேலாயுத அண்ணனோட குரு!'' என்று சொன்னான் ஒருவன்.

''இவரைத் தேடிக்கிட்டுத்தான் அது பட்டணத்துக்குப் பறந்து போச்சு'' என்றான் மற்றவன்.

அந்தக் குரு அப்போது பிராணவஸ்தையில் கிடந்து தனியாகத் தவித்துக் கொண்டிருந்தார்.

இரவு எப்படிக் கழிந்ததென்று தணிகாசலத்துக்குத் தெரியவில்லை. ஏற்கனவே இருந்த வலி போதாதென்று நாட்டு வைத்தியர் வேறு வந்து இறுக்கமான கட்டுக்களைப் போட்டு விட்டுப் போனார். கணுவுக்குக் கணு நரம்புகள் தெறித்தன. தன்னையறியாது 'அம்மா, அம்மா!' என்று அரற்றிக் கொண்டே புரண்டு படுக்க முடியாமல் அவன் தொல்லைப்பட்டான்.

பின்னிரவில் சிறு பொழுது தூங்க முடிந்தது. காலை வெய்யில் வந்த பிறகு ஒன்பது மணியளவில் மெல்லக் கண் விழித்தான். அவன் இருந்தது செல்லையாவின் வீடு. படுக்கைக்கு ஒருபுறம் செல்லையாவும் மறுபுறம் போலீஸ்காரர் ஒருவரும் உட்கார்ந்திருந்தார்கள். போலீஸ்காரரின் முகத்தையும் எங்கோ இதற்கு முன்பு பார்த்த நினைவு வந்தது.

''என்ன, தணிகாசலம்! என்னை உனக்கு அடையாளம் தெரியவில்லையா?''

தலையிலிருந்த தொப்பியை அந்தப் போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் கீழே கழற்றி வைத்தார். ''நீ இப்போது பெரிய மனிதனாகி விட்டாய்; என் மனைவி உன் கதைகளைப் படித்து விட்டு என்னிடம் பேசுவாள்; கண்ணபுரம் கல்லூரியில் உன்னோடு படித்த இப்ராஹீமை நீ அடியோடு மறந்திருப்பாய் போல் தெரிகிறது.''

''மகமது இப்ராஹீமா?''

''அவனேதான்!''

பழைய நண்பர்களை எதிர்பாராத இடங்களில் சந்திப்பது புதையலைக் கண்டெடுப்பது போலல்லவா? தன் வலியை மறந்து இரு கரங்களாலும் அவரைப் பற்றினான் தணிகாசலம். பெரிய மனிதன் என்று தன்னை அவர் அழைத்தது அவனுக்குப் பிடிக்கவில்லை.

''பெரிய மனிதனாவது, மண்ணாங்கட்டியாவது! பணம் இருப்பவன்தான் பெரிய மனிதன். அவன் நினைத்தால் கடவுளைக்கூடத் தூணில் கட்டி வைத்து அடிக்கத் தயங்க மாட்டான்.''

''நான் சொல்வதை நீ நம்பாவிட்டால் உனக்காக வெளியே கூடியிருக்கும் கூட்டத்தைப் பார்! அத்தனை பேரும் வேலாயுதத்தின் ஆட்கள். உன்னை

அடித்தவனைப் பழி வாங்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.'' '

சன்னல் வழியே பார்த்த போது, கிராமவாசிகளின் கூட்டம் அங்கு ஆள் ஒன்றும் கம்பு ஒன்றுமாகக் காத்துக் கொண்டிருந்தது. தனக்குத் தெரியாமலே தன் பெயரை அந்தக் கிராமம் முழுவதிலும் பரப்பியிருக்கும் வேலாயுதத்தின் விசுவாசத்தை அவன் கண்டான். வியப்பும் பெருமிதமும் அவனை ஆட்கொண்டன. 'மனிதர்கள் விழிப் படைந்து வருகிறார்கள்.'

செல்லையாவைப் பார்த்து, ''உங்களுக்கு வள்ளியை வேலாயுதத்துக்குக் கொடுப்பதற்குச் சம்மதமா? இல்லையா? அதை முதலில் சொல்லுங்கள்'' என்று கேட்டான் தணிகாசலம்.

''தாராளமாய்க் கொடுக்கிறேன். நான் ஒரு பாவமும் அறியாதவன். எல்லாம் அந்தப் பெரிய பண்ணையின் வேலை!'' என்றார் செல்லையா.

இன்ஸ்பெக்டர் இப்ராஹீம் 'மளமள'வென்று அவனிடம் கேள்விகளைக் கேட்டுப் பதில் பெற்றுக் கொண்டார். தம்முடைய மேல் நடவடிக்கைகளை அவனிடம் அறிவித்தார்.

''தணிகாசலம்! இந்தப் பெரியதனக்காரப் புள்ளியின் அட்டூழியம் இந்தப் பக்கத்தில் தாங்க முடியவில்லை. நீ அவரிடம் அடிபட்ட நாலாவது ஆள். யாரும் அவருக்குப் பயந்துகொண்டு எங்களிடம் புகார் செய்வதில்லை. சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் நீ வந்து சேர்ந்தாய். நாடு அறிந்த மனிதனான உனக்கே இந்தக் கதி என்றால் மற்றவர்களின் பாடு எப்படியிருக்கும்? — இந்த வழக்கில் நான் அவரை உள்ளே தள்ளவில்லையென்றால் மக்களுக்குத் தொண்டாற்றும் போலீஸ்காரனாக இருந்து பலனில்லை.''

தணிகாசலத்துக்கு இந்த நடவடிக்கைகள் சிறிதும் பிடிக்கவில்லை.

''வேண்டாம், இப்ராஹீம்! நான் இங்கே வம்பு வழக்குச் செய்ய வரவில்லை. தம்முடைய மகனுக்குப் பெண் கேட்பதை அவர் நிறுத்திக் கொண்டால் போதும். நீ எனக்கு இந்த உதவி மட்டும் செய். செல்லையாவின் மகளுக்கும் வேலாயுதத்துக்கும் ஒரு முடிச்சைப் போட்டு விட்டால் என்னுடைய காயங்கள் உடனே ஆறி விடும்.''

போலீஸ்காரர் சட்டம் பேசினார்; எழுத்தாளன் மனிதத் தன்மையை எடுத்துரைத்தான். சட்டத்தில் பழி வாங்கும் கட்டளை இருந்தது; மனிதத் தன்மையில் மன்னித்து விடும் உயர்ந்த பண்பு ஓங்கி மிளிர்ந்திருந்தது.

தணிகாசலம் தன் நண்பரைச் சட்டத்துக்குப் புறம்பாக எதையும் செய்யச் சொல்லவில்லை. சட்டத்திலேயே சமாதானம் செய்து கொள்வதற்கும் ஒரு தனிப் பிரிவு இருந்தது. அதைத் தணிகாசலம் அவருக்குச் சுட்டிக்காட்டி, ''நீ அவரிடம் எனக்காகச் சமாதானத் தூதுவனாய்ப் போய் வா!'' என்று வேண்டிக் கொண்டான்.

''எல்லோருக்கும் நல்லவனாய் நடந்து கொள்ள நினைக்கிறாயா?'' என்று கேலி செய்தார் இப்ராஹீம்.

''அப்படி நடந்து கொள்வது தவறில்லை; அதனால்தான் எனக்கு எதிர்ப்புக்களும் அதிகம்; ஆதரவும் அதிகம்.''

''யோக்கியர்களிடம் யோக்கியமாக நடந்து கொள்ள வேண்டும்; அயோக்கி



யர்களிடம் கட்டாயம் அயோக்கியத்தனமும் செய்ய வேண்டும்.''

''நான் அமைதியாக நின்று நடுநிலைமையில் எதையும் யோசனை செய்கிறவன். சமுதாயத்தின் வேற்றுமை வெறிகளுக்கு மாற்று மருந்து நான். தனிப்பட்ட மனிதர்கள், சாதிகள், சமயங்கள், கட்சிகள் மோதிக் கொள்ளும் போதெல்லாம் ஒரு சிலர் துணிந்து நடுநிலையில் நின்று விரோதங்களைத் தணிப்பதற்கு முயல வேண்டாமா?—என்னை நீயாவது புரிந்து கொள்.''

''ஏதோ என்னால் ஆனதைச் செய்து பார்க்கிறேன்; சொந்தமாக உழைக்காமல் பரம்பரைச் சொத்தைத் தின்று கொழுத்த புல்லுருவிகளுக்கு எப்போதுமே திமிர் அதிகம்; பயமுறுத்தாமல் அவர்கள் நம் வழிக்கு வரமாட்டார்கள்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

மகமது இப்ராஹீம் விடைபெற்றுக் கொண்டார். நேரே பெரியதனக்காரரிடம், தாம் அவர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள

நேரும் என்று விளக்கினுர். வேண்டுமென்றே தணிகாசலத்தின் செல்வாக்கை மிகைப்படுத்திக் காட்டி, அத்தகைய மனிதனுக்குத் தீங்கு செய்ததால், தாம் அவரைச் சும்மாவிடப் போவதில்லை என்று அச்சுறுத்தினுர்.

மாலையில் தம்முடைய வில் வண்டியில் பண்ணைக்காரரும், சைக்கிளில் சப்இன்ஸ்பெக்டரும் தணிகாசலத்திடம் வந்தார்கள். பண்ணைக்காரர் எலும்பும் தோலுமாய்த் தம் உடல் வலிமையையெல்லாம் கீழ்த்தர உணர்ச்சிகளுக்குப் பலி



கொடுத்து [illegible]தின் வெளிமினுக்கோடு விளங்கினுர். தங்கத்தையே மனிதன் உருக்கி வார்த்துத் தின்ருல் கூட அவன் திருவிளையாடல்களுக்கு ஒரு எல்லை என்று உடலமைப்பை வைத்திருக்கிருரல்லவா கடவுள்? நோய்ப் படுக்கையும், சாவும், வயதுமே பலரை ஒழுக்க விஷயத்தில் சிறிதளவாவது யோக்கியர்களாக வைத்திருக்கின்றன. பண்ணைக்காரரைப் பார்க்கப் பரிதாபகரமாக இருந்தது. குழி விழுந்த கண்ணங்கள், மண்டையோடு போன்ற நெற்றி, விகாரமான தடித்த உதடுகள். வாலிபப் பருவத்தின் சேஷ்டைச் சுவடுகள் அப்பட்டமாகத் தெரிந்தன.

தணிகாசலத்தின் கட்டுக் காயங்களைக் கண்டவுடன் அவர் வெலவெலத்துப் போனுர். தணிகாசலத்துக்கு அவரைப் பார்ப்பதற்கே அருவருப்பு தட்டியது.

''உங்களை இன்னருன்னு தெரியாதுங்க; ஐயா சொன்ன பிறகுதான்...'' என்று இழுத்தார் பண்ணைக்காரர்.

''இன்னரென்று தெரிந்தால்தானு? மனிதன் என்று தெரிந்தால் போதாதா?'' என்று நகைத்தான் தணிகாசலம். ''தோட்டியின் குழந்தையும் பத்து மாதம் சுமந்து பெற்றதுதான். நாலுபேர்கள் சேர்ந்துகொண்டு கண்மண் தெரியாமல் அடித்தால் எல்லோருக்குந்தான் வலிக்கும்.''

''ஐயாவை அடித்தால் இவருக்கு வலிக்காது'' என்று சிரித்தார் இன்ஸ்பெக்டர் இப்ராஹீம். ''இவர் உடம்பில் ரத்த ஓட்டம் நின்று போய் இப்போது பணம் ஓடுகிறது.''

பணம் பாதாளம் வரையில் பாயும் என்று நம்பிக் கொண்டிருந்த மனிதர் அவர். இந்த இன்ஸ்பெக்டரிடம் அது பாயாமல் போகவே, அடுத்தாற்போல் தணிகாசலத்திடம் திரும்பினுர். சுற்றி வளைத்துத் தம்முடைய அநுதாபத்தைச் சொல்லி விட்டு, ''இந்தாருங்கள்; வைத்தியச் செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள்'' என்று ஒரு கற்றை நோட்டை எடுத்து அவனிடம் நீட்டினுர்.

தணிகாசலம் அதை வாங்கிக்கொண்டதைக் கண்டு இன்ஸ்பெக்டர் ஒரு கணம் திடுக்கிட்டுப் போனுர்.

''சரி, பணம் இருக்கட்டும், கல்யாணம்?'' என்று கேட்டான் தணிகாசலம்.

''ஊரறிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து விட்டேன். அதை நிறுத்தினுல் என்னுடைய மதிப்பெல்லாம் கெட்டுப் போகும். அதை மாத்திரம் தயவுசெய்து சொல்லாதீர்கள்.''

''இத்தனை நாட்களாய் வள்ளியைச் சுற்றிக்கொண்டிருந்தானே, அவனுக்கும் மதிப்பு என்று ஒன்று இருக்குமல்லவா?''

''நீங்கள் அவனிடம் சொல்லுங்கள். இதோ, இதை அவனிடம் கொடுத்து...''

மறுபடியும் தம் சட்டைப் பைக்குள் கையை விட்டார் அந்தப் பெரியதனக்காரர். தணிகாசலத்தின் பொறுமை இதற்குமேல் தாங்கவில்லை. கையிலிருந்த நோட்டுக் கற்றையைக் கீழே வீசி எறிந்தான். ''நல்ல உலகமைய்யா இது. நாசமாய்ப் போன உலகம்! உத்தமனை உயர்ந்த மனிதன் என்று கொண்டாடிய காலம் செத்துப்போய் விட்டது. நீங்கள் என்ன செய்வீர்கள், பாவம்! ஐந்து ரூபாய்க்குச் சாராயம் வாங்கி ஊற்றி என்னை அடிக்கச் சொன்னீர்கள்!

இப்போது ஐந்நூறு ரூபாய் கொடுத்து என்னை வைத்தியம் செய்து கொள்ளச் சொல்லுகிறீர்கள். நீங்கள் செத்துப் போனால் உலகத்துக்கோ, உங்கள் குடும்பத்துக்கோ நஷ்டமில்லை. என்னைப் போன்ற உழைப்பாளி ஒருவன் செத்துப் போனால் என் பிள்ளை குட்டிகள் எங்கே போய் நிற்பார்கள்?''

தணிகாசலம் தன்னுடைய முடிவைக் கூறினான்: ''வள்ளிக்கும் வேலாயுதத்துக்கும் கல்யாணம் செய்து வைக்காமல் இந்த ஊரைவிட்டு நான் கிளம்பமாட்டேன். நீங்கள் உங்களால் முடிந்ததைச் செய்து கொள்ளுங்கள்.''

பணக்காரர் பணத்தைப் பொறுக்கிக் கொண்டு திரும்பினார். இன்ஸ்பெக்டரும் தம்முடைய பயமுறுத்தல்களை நிறுத்தாததால், அவர் தணிகாசலத்தின் வழிக்கு வரவேண்டியிருந்தது.

வள்ளிக்கும் வேலாயுதத்துக்கும் இருமணம் இனிதாக நடந்தேறியது. செல்லையாவையும் வேலாயுதத்தின் நண்பர்களில் ஒருவனையும் சென்னைக்கு அனுப்பி வைத்தான் தணிகாசலம். அடிபட்ட செய்தி கேட்டுக் குடும்பம் முழுவதும் உமாவுடன் திரண்டு முல்லையூருக்கு வந்து சேர்ந்தது. கண்ணபுரத்திலிருந்து தேவகியும் சுப்பையாவும் வந்தார்கள். கல்யாணத் தேதிக்கு முன்னாலேயே தணிகாசலம் தன்னுடைய பழைய உடம்பைப் பெற்றான். ''இது எனக்குக் கிடைத்த கட்டாய ஓய்வு'' என்று பெருமையடித்துக் கொண்டான்.

''குப்புற விழுந்தாலும் என் மாமாவுக்கு மீசையில் மண் ஒட்டாது'' என்று பரிகாசம் செய்தாள் உமா. அத்துடன் அவள் குறும்புத்தனம் ஓயவில்லை. கல்யாணத்தன்றைக்குத் தணிகாசலத்திடம் சென்று, ''நீங்கள் கதைகளில் கல்யாணம் செய்து வைத்தால் உங்களுக்குப் பணம் கிடைக்கிறது; உண்மையில் கல்யாணம் செய்து வைத்தால் அடி கிடைக்கிறது!'' என்றாள்.

அடி தணிகாசலத்துக்குக் கிடைத்தது ஒரு புறம் இருக்கட்டும். உமாவுக்கே அது கிடைக்கும் போலிருந்தது!

இரண்டு வாரம் கழித்து அவர்கள் ரயிலில் சென்னைக்குத் திரும்பியபோது கௌரி இந்த விஷயத்தைச் சொன்னாள். ''கேட்டீர்களா சங்கதி?'' என்று ஆரம்பித்து, ''சௌந்தரத்தம்மாள் சொல்லச் சொல்லக் கேட்காமல் இவள் எங்களோடு வந்திருக்கிறாள்; கல்லூரியிலும் சம்பளமில்லாத விடுமுறை; அந்த அம்மாள் இவளை என்ன பாடுபடுத்தப் போகிறார்களோ!'' என்று கூறினாள்.

பையன் பரமசிவம் பாட்டியின் மடியில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்தான். குழந்தை கல்யாணி உமாவின் மடியில் உறங்கினாள். கணவனும் மனைவியும் சௌந்தரத்தம்மாளின் உக்கிர சொரூபத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தார்கள். உமாவை முல்லையூருக்கு அனுப்ப அவளுக்குத் துளிக் கூடச் சம்மதமில்லையாம்.

''அத்தையின் சொல்லைத் தட்டி நடக்கலாமா, உமா?'' என்று கேட்டான் தணிகாசலம்.

''நீங்கள் எங்கள் பேச்சைத் தட்டி நடக்கலாமா?'' என்று அவனையே திருப்பிக் கேட்டாள் உமா. ''உங்களை இங்கே



வரவேண்டாமென்று நானும் கௌரியும் தடுக்கவில்லையா? அடிபட்டுக் கிடக்கிறீர் என்று செய்தி வந்தால் நான் எப்படி வராமல் இருப்பேன்? பைத்தியம் பிடித்து விடும் எனக்கு.''

''எதற்காக இவளை அழைத்துக் கொண்டு வந்தீர்கள்?'' என்று தாயாரின்மீது பாய்ந்தான் தணிகாசலம்.

''எதற்காகவா? எல்லாம் உன்னை வழிக்குக் கொண்டு வருவதற்குத்தான்!'' என்று, இரண்டு வாரங்களாக அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை அவன்மீது கொட்டினாள் கல்யாணி அம்மாள். முல்லையூரில் மூன்றாவது மனிதர்களுக்கு எதிரில் அவன் ஒன்றும் பேசவில்லை. இப்போது சேர்த்து வைத்துப்

பேசினான். "உனக்கென்ன? நீ ஊர் ஊராய்ப் போய் அடி வாங்கிக்கொண்டு வருவாய்! பாவிப் பயல்கள் உன்னைக் கொன்று போட்டிருந்தாலும் அங்கே கேட்பதற்கு நாதியில்லை. உனக்கெல்லாம் பெண்டு பிள்ளை, வீடு வாசல் எதற்கு? உன் பெண்டாட்டி இருக்கிறாளே, ஒரு ஊமை! தூணில் கட்டிப் போட்டு வளர்ப்பதற்கு நீ என்ன சிறு பிள்ளையா? உமாவை நான்தான் அழைத்துக்கொண்டு வந்தேன். அவள் இடித்துக் காட்டுகிறாளே, அப்போதாவது உனக்குப் பொறுப்பு தெரிகிறதா?"

தணிகாசலத்தின் பாடு திண்டாட்டமாய்ப் போயிற்று. மூன்று பெண்களும் ஒன்றாய்ச் சேர்ந்து கொண்டு அவனை மொய்த்துப் பிடுங்கி விட்டார்கள். உமாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

"உன் காலைச் சௌந்தரத்தம்மாள் முறிக்கப் போகிறார்கள், பார்!" என்று கூறினான் தணிகாசலம்.

"உங்களுக்குக் கிடைத்ததில் சரிபாதி யாவது எனக்குக் கிடைக்க வேண்டாமா?" என்றாள் உமா.

சரிபாதி என்ன? அதற்கு மேலும் உமாவுக்குக் கிடைத்தது. அவளை அழைத்துக் கொண்டு போனவர்களுக்கும் நிறையக் கிடைத்தது.

மாம்பலத்துக்கு வந்தவுடன் கல்யாணி அம்மாள் முதலில் பேரனைத் தூக்கிக் கொண்டு மாடிக்குச் சென்றாள். தணிகாசலம் இரண்டாவதாகப் படிகளில் ஏறினான். பின்னால் கௌரியும் உமாவும் ஒன்றாக வந்து கொண்டிருந்தார்கள். உமாவின் தோளில் குழந்தை கல்யாணி சிரித்த வண்ணம் சாய்ந்திருந்தாள்.

சௌந்தரத்தம்மாளுக்குக் கௌரியும் உமாவும் ஒன்றாக வந்த காட்சி கண்களை உறுத்தியிருக்க வேண்டும். வெளி வாசலுக்கு ஓடிவந்தாள். "வாருங்கள், உமா தேவி!" என்று இலக்கணத் தமிழில் வரவேற்பு கூறினாள்.

உமாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"கல்யாணமெல்லாம் சிறப்பாக நடந்ததா?" என்று குத்தலாகக் கேட்டு விட்டு, "எங்கே உன் கழுத்தைக் காட்டு!" என்று உமாவின் தோளில் கையை வைத்தாள். "எங்கே தாலியைக் காணோமே? அப்படியே நீயும் ஒரு மணவறையில் உட்கார்ந்து உன் மாமாவைத் தாலி கட்டச் சொல்வதுதானே? அவருக்கென்ன இதனால் நஷ்டம்? ஒன்றுக்கு இரண்டாய் இருந்து விட்டுப் போகிறது! சோறும் சேலையும் கேட்கா விட்டால் பெற்ற பிள்ளையிலும் உற்ற பிள்ளையாய் உன்னை வைத்துக் கொள்ள மாட்டார்களா, என்ன?"

தணிகாசலம் கீழேயும் இறங்காமல், மேலேயும் ஏறாமல், இடையில் மரம் போல் செயலற்று நின்றான்.

கௌரியின் பக்கம் திரும்பினாள் சௌந்தரத்தம்மாள். "என்ன கௌரி! நீ பேசாமல் தெய்வானையாக மாறி விடேன். உன் வீட்டுக்காரரர் முருகனிடம் சொல்லி, இந்த வள்ளிக்கும் ஒரு மாலையிடச் சொல்லி விட்டால் நன்றாயிருக்குமே! அப்படிச் செய்து விட்டால் நானும் ஒரேயடியாகக் கை கழுவி விடலாம். நாலு பேர்களுக்கு மத்தியில் முகத்தைத் தொங்கவிட்டுக் கொள்ள வேண்டியதில்லை யல்லவா? எல்லாம் என் தலையெழுத்து!"

தணிகாசலத்துக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. உதட்டைக் கடித்துக் கொண்டு அதே இடத்தில் நின்றான். "இனிமேல் மரியாதையாக இந்த வீட்டைக் காலி செய்துவிடு!" என்று அவன் உள்மனம் எச்சரித்தது.

"இனி வேறு வீடு பார்த்துவிட வேண்டியதுதான்" என்று முணுமுணுத்தான் தணிகாசலம். (தொடரும்)



இந்திய வர்த்தகக் கழகப் பொன்விழா!

ஐம்பது ஆண்டுகள் இடைவிடாது மிகச் சிறந்த முறையில் செயல்புரிந்து வரும் இந்திய வர்த்தகக் கழகத்தின் பொன்விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

பம்பாயில் 1907-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தாபனம் இந்தியப் பொருளாதாரத் துறையில் நாடு முன்னேறுவதற்கான பல யோசனைகளை அவ்வப்போது எடுத்துச் சொல்லி, மாறுபட்ட கொள்கைகளைக் கடைப்பிடித்த அன்னிய அரசாங்கத்தாருடன் மன வேற்றுமைகள் ஏற்பட்ட காலத்திலும்கூட, மனந் தளராது நாட்டின் நலனுக்காக உழைத்துப் பெருமை பெற்றது. முக்கியமாக, பல தொழில்களுக்குக் காப்பு வரி சம்பந்தமாகவும், கப்பற் தொழில் சம்பந்தமாகவும் இந்த ஸ்தாபனம் செய்துள்ள சேவை பாராட்டத்தக்கது.

முதலாளிகளின் நலன்களையேதான் முக்கியமாகக் கருதிச் செயல் புரிந்ததோ என்ற எண்ணத்துக்கு இடமளிக்காமல் நாட்டின் பொதுநலத்துக்காகவும் இது இடைவிடாது பணியாற்றி வந்தது. சுமார் 120 பல்வேறு ஸ்தாபனங்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. பொன் விழாவை யொட்டி ஒரு ஞாபகார்த்த வெளியீட்டைத் தயாரித்து மக்களுக்கு அளித்திருக்கின்றனர். இதன் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த பல தலைவர்களுக்கும், விளம்பரத்தையும் பகட்டையும் உதறித் தள்ளித் திரைமறைவில் நின்று ஸ்தாபனத்தின் பல்வேறு அலுவல்களையும் திறம்பட நிர்வகிக்கும் காரியதரிசி ஏ. வி. ராமலிங்கம் அவர்களுக்கும் இப்பொன் விழா ஆண்டில் நம்முடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வர்த்தகக் கழகப் பொன்விழாவுக்குப் பிரதமர் நேருஜி வருவதையும், விழாவுக்கு வந்திருந்த தொழிலதிபர்களையும் படத்தில் காணலாம்.



நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

52. முடி விஷயம்

“போகணும்..........போகணும். இன்னும் போகணும். இன்னின்னும் போகணும்......

“எங்கே போகணும்......?”

“ஆகாசத்தில் போகணும்......வானத்திலே போகணும். அதற்கு அப்பாலும் போகணும். அதற்கும் மேலேயும் போகணும்......”

“எப்படிப் போகணும்......? ஸ்புட்னிக்கிலா?...... ‘ராக்கெட்’ கிகெட் ஏதாவது உந்திவிட்டுதா ?”

“உம் ... உம் ... அதெல்லாம் ஒன்றுமில்லே. தன் சொந்த வாகனத்திலே ஏறிக்கொண்டு போகணும். தானே போகணும். தனியே போகணும்......

“யார் போனது? அது என்ன வாகனம்......?”

* * *

அண்ணா ‘தொங்க ரங்கு’ தங்கச்சி பத்து என்னும் பத்மாவுக்கு இப்படி ஒரு கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

குழந்தைகளின் பாஷை என்ன அழகு! அதில் எத்தனை ஆச்சரியமான கற்பனை! பாஷையில் இல்லாத புதுப்புது சொற்களைச் சிருஷ்டித்து, பாஷையைப் பெருக்கிடும் — அரிய தொண்டைச் செய்திடும் திறமையை என்னென்பது!

அது எப்படியோ போகட்டும். கதை என்ன தெரியுமோ? ரொம்பப் பழைய கதை. சொல்லிச் சொல்லிக் கிரையாய்ப் போன கதை. கேட்டுக் கேட்டுத் திகட்டிப் போன கதை. ஹம்ஸத்தின் மேலே ஏறிக்கொண்டு பிரம்மதேவன் சிவபெருமானின் முடியைக் காணச் சென்ற கதை.

முடியின் கதை முடியாத - முடிவற்ற கதை. இதன் உட்கருத்து? மெய்ப் பொருளுக்கு — நித்தியமான ஸத்தியத் தத்துவத்துக்கு — அடி என்றும் முடி என்றும் — ஆரம்பம் என்றும் முடிவு என்றும் வரையறுத்திடல் சாத்தியமா...? இல்லை. இதுதான் இக்கதையின் உட்கருத்து.

* * *

நேயர்கள் கடிதங்களில் கேட்டிருக்கும் விஷயங்களில் முடி விஷயம் முடிவற்ற குவியலா யிருக்கிறது. ஆண்களும் பெண்களுங் கூடத்தான் அநேக கடிதங்கள் எழுதியுள்ளனர்.

“நிறைய இருந்த முடி இப்போது ஆறுமாதத்தில் பாதிக்குமேலே உதிர்ந்து எலி வால்போல்......” என்று எழுதுவோர் சிலர்.

“இந்த ஊருக்கு ‘இவ’ருக்கு மாற்றலாகி வந்து நாலு மாசந்தானாகிறது. அதற்குள்ளே — கொத்துக் கொத்தா முடி சீவும்போதெல்லாம் முடி ‘கழண்டு’ கொண்டே வருகிறது. இப்போ போகிற போக்கைப் பார்த்தால் இன்னும் நாலு மாஸத்திலே உதிர்வதற்குக்கூடத் தலையில் முடியிருக்காது போலத் தோன்றுகிறது. சில பேர் இந்த ஊர் ஜலத்தின் குணத்தால்தான் இப்படி என்கிறார்கள்.

[இதைக் குணமென்று கூறலாமா ? தோஷம் என்றோ குணக்கேடு என்றோ அல்லவா சொல்ல வேணும்? இச்சகோதரிக்குக் குணம், தோஷம் இரண்டுமே ஒன்றுதான் போலிருக்கிறதே!]

“முன் பக்கம் - நெற்றியின் மேல்வரம்பில் முடி உதிர்ந்து கொண்டே ‘போகிறது’ நெற்றியின் அகலம் அதிகமாகிக் கொண்டே போகிறது. ஸ்நானம் பண்ணினதும் சீப்பை எடுத்துக் கிராப்பை வாரவே பயப்படவேண்டி இருக்கிறது. வெகு சீக்கிரத்தில்......” என்று ஒரு சகோதரர் எழுதுகிறார்.

முடி உதிர்வதைப்பற்றி மாத்திரமா..?

‘தலையில் ஒரே அரிப்பு. வைத்த கையை எடுக்காமல் சொறிந்து கொண்டே இருக்க வேண்டும். சொறிந்தால் ஒருவிதத் தவிடுபோல் உதிரும் பொடுகு. ஒருநாளைக்கு ஒரு கூடை பொடுகு உதிரும். இதனால்தான் இப்படி முடி உதிருகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். இந்த இரண்டுக்கும் என்ன செய்வது? பொடுகு நீங்க வேணும். அரிப்பு தொலைய வேணும். முடி உதிர்வது நிற்க வேண்டும். உதிர்ந்தவைகளும் முளைக்க வேண்டும். இதற்கெல்லாமாக என்ன செய்ய வேணும்?’ என்று பல சகோதரர்கள் எழுதிக் கேட்டிருக்கின்றனர்.

‘இங்கொன்றும் அங்கொன்றுமாக நரை ஏற்பட்டது. நான்கு மாதங்களுக்குள் அரைக்கால்வாசி முடிகள் நரைத்தே போய்விட்டன. இதெல்லாம் இந்த ரவி பிறந்த பிறகுதான். கமதி

பிறக்கும் முன்பு, என் தலையில் சடை முடி இருந்தது. முதல் பிரஸவம் ஆன பிறகு பாதி முடி உதிர்ந்து விட்டது. அடுத்த பிரஸவமான பிறகு முக்கால் வாசி முடியும் உதிர்ந்துவிட்டது. அது வாவது எப்படியோ போகட்டும் என்றால் இந்த நரையும் வந்து—இருக்கும் கால்வாசி முடியும் என்னும் பச்சரிசியும் கலந்தமாதிரி யாகிவிட்டது. எனக்கு நாலுபேர்கள் முன்னால்போகவே வெட்கமாக இருக்கிறது.'

'......இப்பவே இப்படி நரைச்சு விட்டதே என்று ஒரே கவலையாக இருக்கிறது. எனக்கு வயது......இன்னும்... இல்லை....' என்று இப்படிச் சில சகோதரிகள் எழுதுகிறார்கள்.

மனுஷ்யனாய்ப் பிறந்தோம், காலையிலிருந்து மாலை வரையில் இந்த நோவு—அந்த நோவு என்று சொல்லிக் கொண்டு வரும் சுளித்த முகங்களையும்—சிணுங்கு மூஞ்சிகளையும்—வாடின வதனங்களையும் பார்த்துப் பார்த்து வாழ்க்கையே நரகமென்று தோன்றத் தொடங்கிவிட்டது. கடைசியாகச் சொன்ன ரகத்தைச் சேர்ந்த கடிதங்களைப் படிக்கும்போது மனத்திலேற்பட்ட கஷ்டம் கும்பீ பாகம் என்று சொல்லப்பட்டிருக்கும் நரகத்தில் ஏற்படும் கஷ்டத்தையும் மிஞ்சியது என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளான பெரியவாள் எங்களூருக்கு வந்திருந்த சமயம்......

நாலு பேர்—மூன்று பேர்—எட்டு பேர் என்று இப்படிச் சிறு சிறு கும்பலாகப் பல கும்பல்கள் ஒருநாள் சென்று சுவாமிகளின் அடிகளில் விழுந்து கும்பிட்டவண்ணமிருந்தனராம். சுமார் இரண்டு மணி நேரம் நின்றபடியே சுவாமிகளும் நிலைபெற்றிருந்தாராம். கும்பலில் இருந்தவரெல்லாரும் கல்யாணமாகாத சகோதரிகளாம். இக்கவலையும் குறையும் தீர ஆசிமொழிகளை அருளும்படி வேண்டிக் கொண்டவர்தான் யாவரும். இவர்களில் சிலர் வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்ல மாட்டாதவராய்...பெரு வெள்ளமாக வந்த கண்ணீரினால் நிலத்தைச் சூடேறச் செய்தனராம். இவர்களில் ஒரு சகோதரி கண்ணீர்ப் பிரவாகத்துடன் குனிந்த தலை நிமிராமல் வந்தவள்-சுவாமிகளின் அடிகளில் நமஸ்கரிக்க விழுந்தவள் எழுந்திருக்கவே இல்லையாம். நெடு நேரமா



தஞ்சை சீனிவாசபுரம் ஸ்ரீ சுந்தரவிநாயகர் கோவிலுக்குச் சமீபத்தில் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்குத் திரளாக விஜயம் செய்திருந்த மக்களையும், கோவிலின் அலங்காரமான கோபுரத்தையும் படத்தில் காணலாம்.

விற்று. 'வீழ்ந்தவள் அப்படியே விம்மிக் கொண்டே இருந்தாளாம். பின்னால் நின்ற 'க்யூ' வரிசை நெருக்கடி அதிகரித்தது. சுற்று முற்றும் இருந்தவரெல்லாம் தம்மை மறந்து நின்றனராம்.

''அம்மா! எழுந்திரு. குறையெல்லாம் சீக்கிரம் தீரும்'' என்று சுவாமிகள் அருளும்படி யிருந்ததாம்.

பிறகுதான் அங்கிருந்தவர்கள் யாவரும் ஏதோ ஒரு சொப்பன உலகிலிருந்து இகலோகத்துக்கு வந்தவர்கள் போல் விழிப்புற்றனராம். கும்பலில் இருந்த அத்தனை பேரும் ஏககாலத்தில் அச்சகோதரி எழுந்து அப்பாற் செல்வதைக் கண்டனர். உடனே அத்தனை கண்களும் சுவாமிகளின் முகத்தை நோக்கின. சுவாமிகளின் கண்களிலும் இரண்டிரண்டு துளி கண்ணீர் ததும்பிக் கீழே விழத் தயாராயிருந்தனவாம்.

என்ன ஆச்சரியம்! ஸந்யாஸி. அதிலும் அத்வைத ஸந்யாஸி! விருப்பு வெறுப்பு-சுகம் துக்கம் - சந்தோஷம்-ஸந்தாபம்-ஆசை பாசம் என்னும் தொந்தங்களே இல்லாத சுத்த ஸத்வப் பொருள். சுத்த சத்வத்துடன் பல்லாண்டுகளாய்ப் பயின்ற தொடர்பினால் ஸத்வமே சீலமாகி - தன்மயத்வமுண்டாகி-தானே அச்சத்வமாகி நிற்கும் ஸத்வக் குன்று. இவர்களுக்குக் கண்ணில் நீர் வரலாமா? பாமரராகிய நம்மளவில் தானா இவர்களும் இருக்கிறார்கள்? இல்லை. இல்லவே இல்லை.

அவ்வாறாயின் அக்கண்ணீர்?

அதுதானய்யா கனிவு! அதுதான் ஐயா, 'அருள்'; அதுதானய்யா அன்பு; அதுதானய்யா சிவம். போதுமா?

'' நீர்வாழுழவேலி ச நலங்கள்
நிர்மலாத்மா எடு வைத்தீரோ காவி ''

வாழும் வகையறியா இம்மனிதர்களைக் காண நேரிட்ட நிர்மலாத்மாக்களான-பெரியோர்கள் எப்படித்தான் தமது மனத் துயரைச் சகித்துக் கொண்டார்களோ! (என் போன்ற ஜடங்களுக்கே தாள முடியவில்லையே!) என்கிறார் தியாகப்பிரும்மம்.


மேலே சொன்ன 'கருணை சுரந்த கண்ண'வின் கதையைக் கேட்ட போது தியாகப்பிரும்மம் தெரிவித்த வாக்கியந்தான் நினைவுக்கு வந்தது. அன்று இவ்வாறு சொன்ன தியாகப்பிரும்மத்தின் மனத்திலுண்டான வேதனை தான் கடைசி ரகத்தைச் சேர்ந்த கடிதங்களைக் காண நேரிட்ட போது என் மனத்திலும் உண்டாயிற்று.

இன்னும், தலைமுடி எப்பொழுதும் பழம்புளி போல் என்றும், பேன் ஈர் தொலைவதே இல்லை என்றும், மயிர்க் காய்கள்; முடியைச் சீவிக் கொள்ளவோ சிடுக்கை விடுக்கவோ இயலவில்லை என்றும் அனேகமான தகவல்கள். முடியின் விஷயம் முடிவற்றதாய்த் தோன்றும்படி அன்பர்களின் கடிதங்கள்.

பரிகாரத்தை உடனே தெரிவிக்க வேண்டாமா?

''குறையெல்லாம் சீக்கிரம் தீரும்'' என்ற ஆசி மொழிகளால் இச்சகோதர சகோதரிகளின் குறையைத் தீர்த்துக் கட்ட எனக்கேது அந்த ஆன்ம சக்தி? ஆயினும்....

(தொடரும்)



1951-ம் ஆண்டில் முதல் ஐந்து வருஷத் திட்டம் தயார் செய்யப்பட்டது. அதற்காக ஒரு பிரத்தியேக இந்திய திட்டக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. அதன் தலைவர் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு. சில மத்திய மந்திரிகள் அங்கத்தினராக்கப்பட்டனர். மத்திய மந்திரி சபையில் அங்கத்தினரல்லாத சில பிரமுகர்கள் திட்டம் தயாரிப்பதிலும் அதை அமுல் செய்வதை மேற்பார்வை யிடுவதிலும் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தும்படி நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் உப அக்கிராசனராக இருந்து அரிய பணிசெய்து வருகிறார்.

முதல் திட்டம் தயார் செய்யும் பொழுது பாரதத்தின் பொருளாதாரம் நெருக்கடியான நிலைமையில் இருந்தது. இரண்டாவது உலக மகா யுத்தமும், பாகிஸ்தான் பிரிவினையும் அதைச் சீர்கெடுத்திருந்தன. முக்கியமாக உணவுப் பிரச்னை கடுமையாக இருந்தது. 1951-ல் 47 லக்ஷம் டன் தானியம் இறக்குமதி செய்யப்பட்டது. வெளிநாடுகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளில் ரூ. 163 கோடி துண்டு விழுந்தது. ஆதலால், பாரத சர்க்கார் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் பொறுப்பை முழுதும் ஏற்றுக்கொண்டு, எல்லாத் துறைகளிலும் முன்னேறக்கூடிய ஓர் திட்டம் வகுத்து, அதற்கு வேண்டிய நிதியைத் திரட்டித் துரிதமாக வேலை செய்யத் தீர்மானித்தார்கள். அத்திட்டத்தின் உத்தேசங்களும், 1951 லிருந்து 1956 வரையில் ஐந்து ஆண்டுகளில் சாதிக்கப்பட்ட காரியங்களில் போடப்பட்ட தொகைகளும் இவ்வாறு:

	திட்டத்தின் உத்தேசம் கோடி	1951-56 கொள்முதல் செய்யப்பட்ட தொகை கோடி.
விவசாயமும், சமூக முன்னேற்றமும்	354	299
நீர்ப்பாசனமும், மின்சாரமும்	647	585
தொழில்களும், சுரங்க வேலைகளும்	188	100
ரயில்வே, தபால் முதலிய போக்குவரத்து சாதனங்கள்	571	532
கல்வி, சுகாதாரம் முதலிய சமூக சேவைகள்	532	423
இதர பல்வகை வேலைகள்	86	74
	2,376	2,013

இவ்விதம் ரூ. 2000 கோடிக்கு மேல் கொள்முதல் செய்யப்பட்டதன் பலன் விவரங்கள்:

	1950-51	1955-56	% விருத்தி நூற்றுவிகிதம்
விவசாய உற்பத்தி			
உணவு தானியங்கள் (லக்ஷம் டன்கள்)	500	648	29·6
பஞ்சு (லக்ஷம் பேல்கள்)	29·1	40	37·5
சணல் (லக்ஷம் பேல்கள்)	32.8	42	28
கரும்பு (வெல்ல மதிப்பு லக்ஷம் டன்கள்)	56·2	59	5
எண்ணெய் விதைகள் (லக்ஷம் டன்கள்)	51	56·6	13·2
புகையிலை (லக்ஷம் டன்கள்)	2·57	2·59	0·8
தேயிலை (லக்ஷம் ராத்தல்)	6070	6680	10·5
உருளைக் கிழங்கு (லக்ஷம் டன்கள்)	16·34	18·39	12.5
தொழில் உற்பத்தி			
எஃகு (லக்ஷம் டன்கள்)	9.76	12·74	30·5
இரும்பு (லக்ஷம் டன்கள்)	15.72	17·87	13·7
சிமெண்டு (லக்ஷம் டன்கள்)	26·92	45·92	71·3
ரசாயன உரம் (லக்ஷம் டன்)	1.01	4·65	460
ரயில் எஞ்ஜின் (எண்)	3	179	
யந்திரக் கருவிகள் (ரூ. லக்ஷம் மதிப்பு)	32	78	143·7
டீஸல் எஞ்ஜின் (எண்)	5540	10369	80·7

மோட்டார் (எண்)	16519	25272	53
குழாய், கம்பி (டன்)	1349	9730	547·1
அலுமினியம் (டன்)	3677	7333	99·4
பஞ்சு நூல் (லக்ஷம் ராத்தல்)	11790	16330	39
மில் துணி (லக்ஷம் கஜம்)	37180	51020	37·2
கைத்தறித் துணி (லக்ஷம் கஜம்)	8100	14490	79
சணல் சாமான் (லக்ஷம் டன்)	8·24	10·54	28
சைகிள் (எண்)	97000	513000	429
தையல் மிஷின் (எண்)	33000	111000	236·3
மின்சார விளக்கு (லக்ஷம்)	150	242·28	61
பவர் ஆல்ககால் (லக்ஷம் காலன்)	50	104	108
சர்க்கரை (லக்ஷம் டன்)	11	18·60	70
வனஸ்பதி (லக்ஷம் டன்)	1·53	2·76	80·4
காகிதமும், காகித அட்டையும் (லக்ஷம் டன்)	1·14	1·87	64
தோல் கால் காப்புகள் (லக்ஷம் ஜோடி)	51.95	56.72	9.2

விவசாய உற்பத்தி நன்கு விருத்தியடைந்தது. ஆனால் மழை, காற்று, சீதோஷ்ண ஸ்திதிகளை அனுசரித்துப் பிரதி வருஷம் மாறி வந்தது. 1953-54ல் 688 லக்ஷம் டன் ஆகி உச்ச நிலை அடைந்து 1955-56ல் 648க்குக் குறைந்தது. ஆயினும் நிரந்தரமாக 1951-52க் காட்டிலும் 100 லக்ஷம் டன் அதிகமாயிற்று என்று மதிப்பிடலாம்.

தொழில் உற்பத்தி சில இனங்களில் மிகுந்தும், மற்ற இனங்களில் சுமாராகவும் அதிகரித்திருக்கிறது. சர்க்கார் தரப்பில் மூலதனம் செய்யப்பட்ட தொகையைத் தவிர தனி முதலாளி ஸ்தாபனங்கள் மூலம் யந்திரத் தொழிலில் 230 கோடி ரூபாய் புதிய மூலதனம் போடப்பட்டது.

நாட்டின் முன்னேற்றத்துக்கு மின்சார சக்தியின் மகிமையைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டிருக்கிறது. முதல் ஐந்து வருஷத் திட்டத்தில் அதன் உற்பத்தியில் 11 லக்ஷம் கிலோவாட் அதிகரித்தது. 68 லக்ஷம் ஏக்கரா நிலங்களுக்குப் பெரிய பாசனத் திட்டங்களிலிருந்து நீர்ப்பாசன வசதிகள் எதிர்பார்க்கப் பட்டன. 40 லக்ஷத்துக்கே அளிக்கப்பட்டது. கிணறு, குளம், பம்பு முதலிய சிறு பாசனத் திட்டங்கள் மூலம் 100 லக்ஷம் ஏக்கராக்களின் நீர்ப்பாசன வசதிகள் விருத்தி செய்யப்பட்டதாக மதிப்பிட்டிருக்கிறார்கள்.

சமூக சேவைகளிலும் பல துறைகளில் நாடு முன்னேறியது. ஆரம்பப்பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளின் தொகை 187 லக்ஷத்திலிருந்து 248 லக்ஷத்துக்கு அதிகரித்தது. 1956-ல் ஆறு வயதிலிருந்து பதினொரு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் ஏறக்குறைய பாதிப் பேர்கள் பள்ளிக்குப் போனார்கள். இஞ்சினீரிங் முதலிய உயர்தரத் தொழில் தேர்ச்சி பெற்றுப் பட்டம் பெறுவோரின் எண்ணிக்கை வருஷத்துக்கு 2800 அதிகமாயிற்று. சமுதாய அபிவிருத்தி தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களுக்காக 14,000 கிராம சேவகர்கள் விவசாயம், கூட்டுறவு முதலிய நிர்மாண காரியங்களில் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

1948-49 விலைப்படி, பாரதத்தின் வருஷாந்திர வருமானம் 1950-51-ல் 8870 கோடியிலிருந்து 1955-56-ல் 10420 கோடிக்கு அதிகரித்தது. இந்தியப் பிரஜையின் சராசரி வருமானம் ரூ. 246·3 லிருந்து ரூ. 272·1 ஆயிற்று. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் இதைவிட 10 லிருந்து 20 மடங்கு வரையில் சராசரி வருமானம் இருக்கிறது.

முதல் ஐந்தாவது திட்டத்தில் அரசாங்கங்கள் மூலம் செலவு, முதலீடு செய்யப்பட்டது மொத்தம் ரூ. 2012 கோடி. மத்திய சர்க்காரால் ரூ. 1115 கோடியும் ராஜ்ய அரசாங்கங்களால் ரூ. 897 கோடியும் கொள் முதல் செய்யப்பட்டது.

முன்னிருந்த ராஜ்ய வாரியாகச் செலவழிக்கப்பட்ட தொகைகள் :

ராஜ்யம்	செலவு முதலீடு கோடி	திட்டத்தின் % விகிதம்
ஆந்திரா, மதராஸ்	149.8	95·2
அஸ்ஸாம்	21·0	96·8
பம்பாய்	156·2	97·8
மத்தியப்பிரதேசம்	42·5	88·2
ஒரிஸ்ஸா	18·3	86·3
பஞ்சாப்	31·8	92·4
உத்தரப்பிரதேசம்	105·5	81·3
மேற்கு வங்காளம்	74·6	97·5
ஹைதராபாத்	34·4	73·2
மத்திய பாரதம்	21·3	94·2
மைசூர்	43·1	86·7
பெப்சு	9·9	97·1
ராஜஸ்தான்	20·3	79·6
சௌராஷ்டிரம்	25·8	94·9
திருவாங்கூர் கொச்சின்	26.1	83·3
ஜம்மு, காஷ்மீரம்	11·1	87·4
சி.டி.வகுப்பு பிரதேசங்கள்	32·6	73·6
மொத்தம்	824·3	84·6

செலவான ரூ. 2012 கோடியில் ரூ. 1277 கோடி வரி, உள்நாட்டுக் கடன் மூலமும், ரூ. 203 கோடி வெளிநாட்டு உதவி வாயிலாகவும், ரூ. 532 கோடி துண்டு தொகைக்காகச் சர்க்கார் ரிசர்வ் பாங்கி மூலம் நோட்டுகள் வழங்கியதன் வழியாகவும் பங்கீடு செய்யப்பட்டது.

திட்டக் கொள்முதலுக்குப் புது வரிகள் மூலம் ரூ. 740 கோடி எதிர்பார்க்கப்பட்டது. மத்திய அரசாங்கம் தனது பங்குக்கு மேல் ரூ. 145 கோடி அதிகமாக வரி வசூலித்தது. ராஜ்ய அரசாங்கங்களோ தமது சுவில் ஏறக்குறைய அதே தொகை வசூலிக்கத் தவறிவிட்டன. ராஜ்யங்களிடமிருந்து எதிர்

பார்த்த தொகைகளும், வசூலான தொகைகளும் பின்வருமாறு :

ராஜ்யம்	எதிர்பார்த்த தொகை (கோடி ரூ)	வசூலான தொகை (கோடி ரூ)
அஸ்ஸாம்	3·5	3·3
பீகார்	7·3	3·0
பம்பாய்	23·5	24.0
மத்திய பிரதேசம்	10·6	2·3
மதராஸ் (ஆந்திரா உள்பட)	39·3	8·0
ஒரிஸ்ஸா	9·4	2·0
பஞ்சாப்	5·0	4·5
உத்தரப்பிரதேசம்	50·2	11·0
மேற்கு வங்காளம்	36.9	4·5
ஹைதராபாத்	7·4	1·0
மத்திய பாரதம்	4·9	2·7
மைசூர்	9·2	3·0
பெப்சு	4·1	0·4
ராஜஸ்தானம்	3.3	2·6
சௌராஷ்டிரம்	4·7	2·1
திருவாங்கூர், கொச்சி	11·0	6·0
மொத்தம்	230·3	80·4

திட்டக் கொள்முதலுக்குச் சிறு தொகை சேமிப்பு முறைகள் மூலம் நல்ல உதவி கிடைத்து வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அதன் மூலம் வசூலான தொகை:

வருஷம்	தொகை (கோடி ரூ)
1951—52	38·5
1952—53	40·2
1953—54	37·8
1954—55	54·6
1955—56	66·1
மொத்தம்	237·2

பொதுஜனங்களிடமிருந்து கடன் பத்திரங்கள் மூலம் எதிர்பார்த்த தொகை ரூ. 115 கோடி. ஆனால் 89 கோடி ரூபாய் அதிகமாகவே கடன் கிடைத்தது.

வெளி நாடுகளிலிருந்து ஐந்து வருஷங்களில் ரூ. 296 கோடி உதவி கிடைத்தது. அதில் ரூ. 188 கோடி முதல் திட்டத்துக்கு உபயோகமாயிற்று. மீதி ரூ. 108 கோடி இரண்டாவது திட்டத்துக்கு உதவும்.

மொத்தம் ரூ. 2012 கொள்முதல் தொகையில் ரூ. 542 கோடி நடைமுதல் செலவுக்கும் மீதி ரூ. 1470 கோடி மூலதனமாகவும் விநியோகிக்கப்பட்டது. ஆனால் சிறு பாசனத் திட்டங்கள், குடிசைத் தொழில், கல்வி, சுகாதார திட்டங்களில் போட்ட மூலதனத்திலிருந்து நேரடியான வருமானம் கிடைப்பது சந்தேகம். ஆதலால் அதன் வட்டியை நிரந்தரமாகப் பொதுவரி வசூலிலிருந்தே செலுத்த வேண்டியிருக்கும்.

ஜனவரி மாதத்திய நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

பொய்யும் மெய்யானல்...!

“ “சாப்பிட்டீர்களாமே...?” ” என்று தன் வரவுக்குக் காரணம் சொல்லுபவன் போல் பட்டம்மாவின் பக்கத்தில் வந்து நின்று கொண்டான் சத்யம்.

“ “வா அப்பா, உட்கார். சாப்பிட்டதனால் தான் வந்தாயா?......இல்லாவிட்டால் வந்திருக்க மாட்டாயா? ம்...கோதை கடிதம் எழுதியிருக்கிறாள்!” ” என்றாள் பெருமையாக.

சந்தோஷமோ, துக்கமோ எதையும் வெளியில் காட்டிக் கொள்ளுபவளல்ல பட்டம்மா. என்றாலும் நீண்ட நாட்களுக்குப் பிறகு மகளிடமிருந்து வந்த கடிதம் அவள் முகம், பேச்சு எல்லாவற்றிலும் சந்தோஷத்தின் முத்திரையைப் பதித்திருந்தது.

“ “கோதையிடமிருந்து கடிதமா? என்ன ஆச்சர்யம்!” ” என்று சிறிது வியப்பும் ஏளனமும் கலந்தவாறு கேட்டான் சத்யம்.

“ “இந்தக் கடிதம் உனக்காகத்தான் எழுதியிருக்கிறாள்!...” ” என்ற புதிர் போட்டாற் போலச் சொன்னாள் பட்டம்மா. சத்யம் வாயைத் திறக்கவில்லை. ஆனால், அவன் விழிகளே ஒரு கேள்விக் குறியை வீசி எறிந்தன.

“ “உன் தங்கை ராஜிக்கு வரன் பார்த்து எழுதியிருக்கிறாள். ரொம்பவும் நல்ல இடமாம். பையனும் கண்ணுக்கு நன்றாயிருக்கிறானும். பெண்ணும் பிள்ளையும் ஒருவரையொருவர் பார்த்துத் திருப்தியடைந்து விட்டால், அடுத்த மாதமே கல்யாணத்தை நடத்தி விடலாமாம்...” ” என்று கூறியவாறு கோதையின் கடிதத்தை அவனிடம் கொடுத்தாள். அதை வாங்கிப் படித்த சத்யம் “ “சீ! கோதையைப் பற்றி எவ்வளவு தவறாக எண்ணியிருந்தோம்!...பாவம், எவ்வளவு அக்கறையாக அவள் எழுதியிருக்கிறாள்!” ” என்று மனம் வருந்தினான்.


பட்டம்மாவின் குடும்பத்துக்கும் சத்தியத்தின் குடும்பத்துக்கும் சுற்றி வளைத்துப் பார்த்தால் ஏதாவது உறவு சொல்லிக் கொள்ளலாமோ என்னவோ! ஆனால் நெருங்கிய உறவினர்களுக்கும் மேலாகவே அன்யோன்யமாகப் பழகினார்கள். பட்டம்மாளுக்குக் கோதை பிறந்த மறு மாதம் சத்யம் பிறந்தான். சத்யத்தையும் தன் குழந்தையாகவே நினைத்து வந்தாள் பட்டம்மா. சில சமயங்களில் ‘உண்மையாகவே இவன் நம்ம பிள்ளையாக இருக்கக் கூடாதா’ என்று அவள் உள்ளம் நினைத்ததுகூட உண்டு. அவ்விடம் அவ்வளவு வாஞ்சை!

இரு குடும்பங்களும் ஒரே தெருவில்தான் இருந்தன. ஒரு வருஷத்துக்கு முன்பு தான் சத்யத்தின் தந்தை திடீரென்று காலமாகி விட்டார். அவர் இருந்திருந்தால் ராஜியின் கல்யாணம் சென்ற வருஷமே நடந்திருக்கும். இப்பொழுது அதை நடத்தி வைக்கவேண்டிய பொறுப்பு அவனுடையதாயிற்று. சத்யமும் வரனுக்காகப் பல இடங்களில் சொல்லி வைத்திருந்தான். இப்பொழுது யாரும் சொல்லாமலே கோதை ஒரு நல்ல வரனுக்குச் சிபாரிசு செய்திருக்கிறாள்.

★

வீட்டுக்கு வந்ததும் தாயாரிடம் விஷயத்தைச் சொன்னான் சத்யம். பட்டம்மா சொன்னதைத்தான் அவனும் கூறினான். மேற்கொண்டு பிரயாணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தனர் எல்லோரும்.

அன்றைக்கு மூன்றும் நாள் மாலை மைசூருக்குப் போவதற்காகத் திருச்சி ஜங்ஷனில் வண்டி ஏறினர் சத்யமும் ராஜியும்.



ராஜி, பருவப் பெண். கூடிய சீக்கிரத்தில் ஒருவன் கையைப் பிடிக்கப் போகிறவள்; அல்லது, ஒருவன் கைக்குள் பிடிபடப் போகிறவள். அந்தப் பேதை உள்ளம் இது நாள் வரையில் என்னவெல்லாம் கனவு கண்டுவந்ததோ, இப்பொழுது எந்த வித விசித்திரக் கற்பனைகளில் மூழ்கியிருந்ததோ, நமக்குத் தெரியாது.

ஆனால், சத்யத்தின் சிந்தனை எந்தத் திசையில் ஓடிய தென்பதை வேண்டுமானால் ஓரளவு ஊகித்துப் பார்த்துச் சொல்லலாம்.

ஸ்ரீரங்கம் நரஸிம்மன்

முதல் முறை அவன் இதே மார்க்கத்தில் மைசூருக்குச் சென்றதிலிருந்து நினைத்துப் பார்த்தான் சத்யம். அது மூன்று வருஷங்களுக்கு முன்பு நடந்தது. அப்பொழுது சத்யம் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய நண்பன் சிவகுரு விடுமுறைக்கு மைசூருக்குப் போவதென்று கிளம்பினான். குஷியாக ஊர் சுற்றிப்பார்த்து விட்டு வரலாமென்று சத்யத்தையும் அழைத்தான். சத்யத்தின் தந்தையும் சந்தோஷத்துடன் அனுமதிக்கவே சிவகுருவுடன் முதன் முறையாகச் சென்றான்.

சிவகுருவுக்கு அங்கு யாரோ உறவினர்கள் இருந்தார்கள். அவர்கள் வீட்டில்தான் இருவரும் தங்கினார்கள். அங்கேதான் சத்யத்துக்கும் சுந்தரேசனுக்கும் முதன் முதலாகப் பழக்கம் ஏற்பட்டது. அப்பொழுது சுந்தரேசனுக்குச் சுமார் இருபத்தைந்து வயது இருக்கலாம். நல்ல வாட்டசாட்டமான ஆள். யாரையும் எளிதில்



கவரக்கூடிய வசீகரத் தோற்றம். அப்பொழுதுதான் ஏதோ ஒரு நல்ல உத்தியோகத்தில் சேர்ந்திருந்தான். அத்துடன் அவன் எல்லோரிடமும் பழகிய விதம் சத்யத்தை மிகவும் கவர்ந்துவிட்டது. ஊருக்குச் சென்றதும் தந்தையிடம் சத்யத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்துத் தன் தங்கை ராஜிக்குப் பார்க்கச் சொல்ல வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

அப்படியே ஊருக்கு வந்ததும் தகப்பனிடம் சுந்தரேசனைப் பற்றி வானளாவப் புகழ்ந்தான். அவரும் சுந்தரேசன் ஜாதகத்தை வரவழைத்துப் பார்த்தார். எல்லாம் சரியாக இருக்கவே, ஒரு நடை திருச்சிக்கு வந்து பெண்ணைப் பார்த்துவிட்டுப் போகும் படி சுந்தரேசனுக்கு எழுதினார். உடனே வருவதற்கு இல்லை யென்றும், ஆனால் கூடிய சீக்கிரத்தில் ஒரு நாள் வருவதாகவும் சுந்தரேசன் பதிலளித்திருந்தான்.

அதன்படி இரண்டு மாதங்கள் கழித்து ஒரு நாள் திடீரென்று வந்து நின்றான் சுந்தரேசன். சிவகுருவின் வீட்டில்தான் தங்கியிருந்தான். அவன் வந்த சமயம் ராஜி ஊரில் இல்லை. தன் தாயாருடன் ஒரு கல்யாணத்துக்காக ஊருக்குப் போயிருந்தாள். எனவே, அவர்கள் வருகைக்காகச் சுந்தரேசன் நாலைந்து நாட்கள் திருச்சியிலேயே தங்கும்படி யாயிற்று.

அந்த நாட்களில் கதையே வேறு திசையில் திரும்பி விட்டது!

ஒரு நாள் மாலை, மலைவாசல் மாணிக்க விநாயகர் சன்னிதியின் முன்பு சுந்தரேசனும், பட்டம்மாவின் பெண் கோதையும் சந்தித்துக் கொண்டனர். வெறும் சாதாரணச் சந்திப்பு அல்ல; அந்த முதல் சந்திப்பிலேயே இருவர் இதயங்களும் இடம் மாறிக் கொண்டன! கோதைக்குத் துணையாகச் சத்யம் வந்திருந்தான். கோதையைக் காண்பித்து, "உன் தங்கையா?" என்றான் சுந்தரேசன். சத்யம் கோதையைப் பற்றிச் சொன்னான். அவர்கள் என்ன பேசிக் கொண்டார்களென்ற விஷயம் கோதைக்குத் தெரியாது. ஆனால், 'அவர்' சத்யத்துக்கு அறிமுகமானவர் என்பதை மட்டும் புரிந்துகொண்டாள்.

இரண்டு நாட்களுக்கெல்லாம் ராஜி ஊரில் இருந்து திரும்பி விட்டான். முறைப்படி பெண் பார்த்து விட்டுப் போனான் சுந்தரேசன். சத்யத்தின் தந்தைக்குச் சுந்தரேசனை மிகவும் பிடித்து விட்டது. அவனுக்கு ராஜியைப் பிடித்திருக்கிறதோ இல்லையோவென்று மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனால், சுந்தரேசனைத் தனக்குப் பிடிக்கவில்லையென்று ராஜி கூறி விட்டான்!

துருவாச முனியாக மாறி விட்டார் அவள் தந்தை. 'ஏன்?' 'எதனால்?' என்று ஆயிரம் கேள்விகளைக் கேட்டார். ராஜி வாயைத்



திறக்கவில்லை. ''எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்'' என்று ஒரே வார்த்தையைத் திருப்பித் திருப்பிச் சொன்னான். ''ஒருவனை இவ்வளவு தூரம் வரவழைத்து விட்டு, 'உன்னைப் பிடிக்கவில்லை போ' என்றால் நன்றாயிருக்குமா?'' என்று கத்தினார். அதற்குச் சத்யம்தான் சமாதானம் கூறினான்.

''போனால் போகிறது விடுங்கள் அப்பா... வந்ததுதான் வந்தான். கோதையையாவது பார்த்து விட்டுப் போகச் சொல்லுங்களேன்...'' என்றான்.

''வேறு வேலையில்லை! அவன் வேறு மூக்கை உடைக்கவா?......பெண்களைப் பையன்கள் பார்க்கும் காலம் போய் இப்பொழுது பையன்களைப் பெண்கள் பார்க்கும் காலமாகி விட்டது!...'' என்று இரைந்தார்.

கோபத்தில் அவர் அப்படிச் சொன்னாலும் சும்மா இருந்து விடவில்லை. கோதையின் தகப்பனாரிடம் அவனைப் பற்றிச் சொன்னார்.

அடுத்த மாதத்திலேயே சுந்தரேசன் கையைப் பற்றினாள் கோதை!

★

கோதை, புருஷன் ஊருக்குச் செல்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். வீட்டில் வேறு யாருமில்லை. அந்தச் சமயம் பார்த்துச் சத்யம் அவளிடம் வந்தான்.

''நான் ஊருக்குப் போய்விட்டு வரட்டுமா, சத்யம்?......என்னை மறக்க மாட்டாயே?'' என்றாள் குரலில் அன்பு தொனிக்க.

சத்யம், பதிலொன்றும் சொல்லாமல் அவளை வெறிக்கப் பார்த்தான்.

''நீ ஒரு முறை மைசூருக்கு வருகிறாயா?'' என்றாள் அடுத்தபடியாக. சத்யம் அதற்கும் பதில் சொல்லவில்லை.

''எனக்கு என்னவோப்பா, உன்னை விட்டுப் பிரியணுமென்னு இருக்கு!......'' என்றாள் கோதை, உண்மையான வருத்தத்துடன். சத்யத்தின் இதழ்க்கடையில் ஒரு முறுவல் தோன்றி மறைந்தது.

''நாளை முதல் இந்த வீட்டில் அம்மா மட்டும் பாவம், தனியாக நடமாடிக் கொண்டிருப்பாள். நீ அடிக்கடி வந்து அம்மாவைக் கவனித்துக் கொள்கிறாயா சத்யம்?.........'' என்றாள் நீர் துளித்த விழிகளுடன்.

சத்யம், அந்த விழிகளைப் பார்க்க முடியாதவன்போல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு விட்டான்.

''பேசவே மாட்டேன்கிறாயே சத்யம்...... என்னிடம் ஏதாவது கோபமா?'' என்றாள் கெஞ்சாக் குறையாக.

சத்யம் சிறிது நேரம் ஏதோ யோசிப்பவன் போல் இருந்தான். பிறகு திடீரென்று ''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா, கோதை?'' என்று கேட்டான். என்னவென்று கேட்கும் பாவனையில் அவனைப் பார்த்தாள் கோதை.

''உன்னுடைய இந்தக் கல்யாணம் நடந்ததற்கு யார் காரணம், தெரியுமா?'' என்றான்.

''பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீரங்கநாதர்தான்!...'' என்று கூறியவாறு கண்களை ஒருமுறை மூடித் திறந்தாள்.

''இருக்கலாம். ஆனால், அந்த ரங்கநாதர் யார் உருவில் வந்து இதை நடத்தி வைத்தார் என்பது உனக்குத் தெரியுமா?'' என்றான்.

''தெரியாதே? யார் மூலமாக?'' என்று ஏதோ விளையாட்டை ரஸிப்பதைப் போலப் பேசினாள் கோதை.

''என்னைத்தான் பயன்படுத்திக் கொண்டார். இல்லாவிடில், இந்தக் கல்யாணம் சுந்தரேசனுக்கும் ராஜிக்கும் நடைபெற்றிருக்கும்!'' என்றான் சத்யம்.

''அது எப்படி? ராஜிக்குத்தான் அவரைப் பிடிக்கவில்லையே!''

''பிடிக்காமல் போனது எப்படி? உன் கணவரைப் பற்றி அவளிடம் குறைவாகப் பேசினேன். அவர் சுத்தக் காலி யென்றும், மருந்துக்குக்கூட நல்ல பழக்கங்கள் கிடையாதென்றும் அளந்துவிட்டேன். 'ஏன் இவரைப்பற்றி அப்பாவிடம் பிரஸ்தாபித்தாய்' என்று கேட்டாள். ''அப்பொழுது ஒன்றும் தெரியாது; இப்பொழுது தான் எல்லாம் தெரிகிறது. இனிமேல் அப்பாவிடம் சொன்னால் எரிமலையாகச் சீறுவார். ஆதலால் நீயே மெள்ள ஒதுக்கி



விடு......' என்றேன். எதனால் அப்படிப் புளுகினேன், தெரியுமா? அன்றொரு நாள், நீ பிள்ளையார் கோவிலில் அவரைச் சந்தித்து விட்டு என்னிடம் அவரைப் பற்றிக் கிண்டிக் கிண்டிக் கேட்டாயே நினைவிருக்கிறதா? அப்பொழுதே உன் மனத்தைப் புரிந்து கொண்டேன். உன் சந்தோஷத்தை விடவா எனக்கு ஒன்று பெரிது?'' என்றான்.

''நிஜமாகவா?'' என்று கேட்ட கோதையின் கண்களில் நீர்த்திரை யிட்டிருந்தது.

''என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கையில்லையா?'' என்றான்.

''உனக்கு என்ன கைம்மாறு செய்வேன்? சத்யம்? உன்னைப் பயன்படுத்திக் கொண்ட அந்த ரங்கநாதர் உனக்கு எல்லா நலன்களையும் தரவேண்டும்!'' என்று மனதார வாழ்த்தினாள். அன்று இரவே விடைபெற்றுக் கொண்டு கணவனுடன் சென்றாள்.

ஊருக்குச் சென்றதும் இரண்டு மாத காலம் தாயாருக்கு ஒழுங்காகக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தாள் கோதை. ஒவ்வொரு கடிதத்திலும் சத்யத்தை விசாரிக்காமல் இருக்கமாட்டாள். பிறகு நான்கு மாதங்கள் கழித்து ஒரு கடிதம் எழுதியிருந்தாள். பிறகு கடிதம் எழுதுவதையே அடியோடு நிறுத்தி விட்டாள். கடைசியாக ஆறு மாதங்களுக்கு முன்பு 'உயிரோடுதான் இருக்கிறேன்' என்று நினைவுறுத்துவது போல் ஒன்று எழுதியிருந்தாள். கடிதத்தில் ஏதாவது ஒரு மூலையில் தன் பெயர் காணப்படுகிறதா வென்று திருப்பித் திருப்பிப் பார்த்தான் சத்யம். கோதை அவனை மறந்து விட்டாள்!

'கோதை இவ்வளவுதானா?' என்று எண்ணிக் கொண்டான் சத்யம். எப்பொழுதாவது அவளைப் பற்றிய பேச்சு எழுந்தாலும் தனக்குச் சம்பந்தமில்லாததுபோல் இருப்பான் சத்யம்.

★

ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த சத்யத்தின் சிந்தனை பழைய சம்பவங்கள் அனைத்தையும் கவனத்துக்குக் கொண்டு வந்து பார்த்தது. இப்பொழுது தன் எண்ணத்தை அடியோடு மாற்றிக் கொண்டு விட்டான். கோதை தன்னை மறக்கவில்லை. அது மட்டுமல்ல; தான் செய்ததற்குப் பிரதி செய்யவும் முயலுகிறாளென்பதை நினைக்கும்போது அவளிடம் அவனை யறியாமல் ஒரு உயர்ந்த எண்ணமே அவனுக்கு உண்டாயிற்று.

அவர்கள் மைசூரை அடைந்த இரண்டாம் நாள், ராஜியைப் பெண் பார்க்கும் வைபவம் நடந்தது. பையனும் ராஜியைப் பிடித்திருக்கிறதென்று சொல்லி விட்டான். ராஜிக்கும் திருப்திதான். அடுத்த மாதமே முகூர்த்தத்தை வைத்துக் கொள்ளலாமென்று கூறிச் சென்றார்கள் பிள்ளை வீட்டார்கள். ஊருக்குச் சென்றதும் அது விஷயமாக முனைய வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான் சத்யம்.

அதற்கு மறுநாள் மாலை, பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தியுடன் ஜகன்மோகன் சித்திர சாலையைக் காண்பதற்காகச் சென்றிருந்தாள் ராஜி. சத்யம் ஏற்கனவேயே பார்த்திருந்ததால் வரவில்லையென்று கூறி விட்டான்.

அதோடு கோதையிடம் தனிமையில் சிறிது நேரம் பேசித் தன் நன்றியைத் தெரிவிக்க வேண்டுமென்பது அவன் அவா. கோதையின் கணவன் சுந்தரேசனும் எங்கோ வெளியில் சென்றிருந்தான்.

கூடத்தில் உட்கார்ந்திருந்த சத்யத்துக்கு எப்படிப் பேச்சை ஆரம்பிப்பதென்று தெரியவில்லை. கையில் ஒரு புஸ்தகத்தை வைத்துக் கொண்டு ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தான். கோதையும் எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு திண்டாடுவதைப் போல நடமாடிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் முதல்நாளிலிருந்தே அப்படித் தானிருந்தாள்.

''கோதை!'' என்று மெள்ளக் கூப்பிட்டான் சத்யம்.

''என்ன வேணும், சத்யம்?'' என்று கேட்டவாறு அவன் பக்கத்தில் வந்து நின்றாள் கோதை. அவள் முகம் எப்பொழுதும் போலப் பிரசன்னமாயில்லை.

''உட்காரு. உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்...'' என்று பக்கத்திலிருந்த நாற்காலியைக் காண்பித்தான். கோதை அதில் உட்கார்ந்தவாறு, ''எனக்குக்கூட உன்னிடம் சாவகாசமாகப் பேச வேண்டுமென்றுதான்... ஆனால் நீ வந்ததிலிருந்து ஒழியவேயில்லை'' என்று ஏதோ ஒப்புக்குச் சொல்வதைப் போலச் சொன்னாள்.

''உன்னைப் பற்றி எவ்வளவு தவறாக எண்ணிக் கொண்டிருந்தேன், தெரியுமா? நீ என்னை மறந்து விட்டாயென்றே நினைத்தேன்'' என்று கூறி விட்டு மன்னிப்புக் கேட்கும் முறையில் அவளைப் பார்த்தான். கோதை பதிலே சொல்லவில்லை. அவள் முகத்தில் இலேசாக ஒரு இருள் படர்ந்தது. சத்யம் தொடர்ந்து, ''ராஜியின் கல்யாணத்தை எப்படி நடத்தப் போகிறோமென்று ரொம்பவும் கவலையாயிருந்தது...உன் கடிதம் வந்ததிலிருந்து என் அம்மா உன்னை வாழ்த்திக் கொண்டேயிருக்கிறாள்'' என்றான். அவன் குரல், பார்வை எல்லாவற்றிலும் நன்றி நிறைந்திருந்தது.

கோதை ஒருகணம் பேசவேயில்லை. ஏதோ யோசிப்பவள் போல் இருந்தாள். பிறகு மெதுவான குரலில், ''அப்படியானால் இந்த வரனை ராஜிக்கு நிச்சயம் செய்து விட்டாயா?'' என்றாள்.

''ஏன், அதிலென்ன சந்தேகம்?''

''ராஜிக்கும் திருப்திதானா?''

''அதிருப்தி எதையும் அவள் காட்டவில்லையே!...ஏன் இப்படிக் கேட்கிறாய்?''

''ஏதோ கேட்டேன்...'' என்றாள் குரலில் உயிரே இல்லாமல்.

''எதையோ மறைக்கிறாயே கோதை?... ஏன்?......பையனுக்குப் பெண்ணைப் பிடிக்கவில்லையாமா?'' என்று சிறிது கவலையோடு கேட்டான் சத்யம்.

''கண் படைத்த எவனாவது ராஜியைப் பிடிக்கவில்லை யென்பானா?''

''பின்னே?...சீர்வரிசையில் ஏதாவது...''

''அதை அவர்கள் லட்சியம் செய்யக் கூடியவர்களே அல்லவே.''

''பின் ஏன் ஒரு மாதிரியாயிருக்கிறாய்?...''

கோதை தரையைப் பார்த்தபடி ஒருகணம் உட்கார்ந்திருந்தாள். ஆவலும் கவலையுமாக அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் சத்யம். மெள்ளத் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். பிறகு ஈனசுரத்தில் ''எனக்குத்தான் இதில் விருப்பமில்லை...'' என்றாள். அவள் பேச்சு சத்யத்தைத் தூக்கி வாரிப் போட்டது. ஒன்றும் கேட்கத் தோன்றாமல் அவளைப் பார்த்து விழித்தான்.

''இந்த வரன் விஷயத்தை மறந்து விடு, சத்யம்!'' என்றாள் மீண்டும்.

''ஏதானால்?'' என்ற சத்யத்தின் குரலில் சிறிது கண்டிப்பு தொனித்தது.

''உன் தங்கை நீண்ட நாட்கள் வாழ வேண்டாமா? அதற்காகத்தான்!'' என்றாள் பளிச்சென்று.

''நீ என்ன சொல்லுகிறாய்?'' என்றான் ஒன்றும் புரியாதவனைப் போல்.

''ராஜிக்குப் பார்த்திருக்கும் இந்தப் பையன் வேண்டாம். அவனுக்குக் கல்யாணமே செய்யக் கூடாதென்று டாக்டர் கூறியிருக்கிறாராம். இதயத்தில் ஏதோ கோளாறென்று தெரிகிறது. ஆனால், அவர்களுக்கு எப்படியும் பிள்ளைக்குக் கல்யாணம் செய்து பார்த்து விட வேண்டுமென்று ஆசை'' என்று ஏதோ சொல்லிக் கொண்டு போனவளைச் சத்யத்தின் பேச்சு தடுத்து நிறுத்தியது.

''இந்த விஷயம் உனக்கு எப்பொழுது தெரிந்தது?'' என்றான்.

''முன்பே தெரியும்!''

''முன்பே என்றால்?''

''உங்களுக்குக் கடிதம் எழுதுவதற்கு முன்பே தெரியும்?''

''தெரிந்துதானா எழுதினாய்?''

''தெரிந்ததனால்தான் எழுதினேன்!'' என்று சிறிது கடுமையான குரலில் சொன்னாள் கோதை. பேயறைந்தவன் போல அப்படியே ஸ்தம்பித்து விட்டான் சத்யம். மேற்கொண்டு அவன் உதடுகள் அசையவில்லை. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது.

'நீதானா இப்படிப் பேசுகிறாய்?' என்று கேட்பதைப் போல் அவளைப்பார்த்தான். கோதையின்உருவம் மெள்ள மறைந்து கொண்டே வந்து அங்கே காளிதேவி பிரசன்னமானாள். அமிர்த கலசம் போன்ற அவள் கண்களிலிருந்து இப்பொழுது கொடும் விஷம் வடிந்தது.

''தெரிந்தும் ஏதானால் எழுதினேனென்று நினைக்கிறாயா?...உன்னைப் பழி வாங்குவதற்



டாக்டர் யோசனை !



பெண்மணி: டாக்டர் என்னைச் சமைக்கக் கூடாது என்று கூறியிருக்கார் !

மற்றொரு பெண்மணி: — உங்களுக்கு உடம்பு சரியில்லையா?

முதல் பெண்மணி:- இல்லை ! என் வீட்டுக்காரருக்கு உடம்பு சரியில்லை !

காகத்தான் எழுதினேன் !'' என்று நெருப்பைக் கக்கினாள் கோதை.

''என்னைப் பழி வாங்கவா ? நான் என்னம்மா துரோகம் செய்தேன் உனக்கு ?'' என்றான் சத்யம் தீனக் குரலில்.

''இன்னும் என்ன செய்ய வேண்டும் ? தெரிந்திருந்தும் என்னை ஒரு பாழுங்கிணற்றில் தள்ளி விட்டாயே, இது போதாதா ?''

''பாழுங்கிணறு ? நீ எதைச் சொல்லுகிறாய் ? எனக்கு விளங்கவில்லையே!'' என்று வியப்புடன் கேட்டான் சத்யம்.

''ஆகா ! என்ன நடிப்பு ! துர்நடத்தைகள் உள்ளவரென்று ஒரு மனிதரைப் பற்றித் தெரிந்த பிறகு எனக்குச் சிபாரிசு செய்தாயே! உன் தங்கையை மட்டும் அந்த ஆபத்திலிருந்து மீட்கத் தெரிந்தது அல்லவா? உனக்கு நான் செய்த தீங்கு என்ன ? என் அம்மா உன்னையும் தன் பிள்ளையாக நினைத்துக் கொண்டிருக்கிறாளே ; அவள் பெண்ணுக்கு நீ செய்யும் உபகாரம் இதுதானா ? இங்கு வந்தது முதல் ஒவ்வொரு நாளும் என் மனம் படும்பாடு உனக்கு என்ன தெரியும்?...இதோ, என்னைப் பார் ! என் கை, காது, கழுத்து எல்லாவற்றையும் நன்றாகப் பார் ! மருந்துக்குக் கூடக் குந்துமணித் தங்கம் கிடையாது ! எல்லாம் எங்கேயென்று தெரியுமா? சீட்டாட்டத்திலும், குதிரைப்பந்தயத்திலும் மறைந்து விட்டன ! நகைகள் போனதற்காக நான் வருந்தவில்லை. எதிர்காலத்தில் என் மானம் போகாமல் இருக்க வேண்டுமே! என் மனம் எப்படி எரிகிறது, தெரியுமா ? அதற்காகத் தான் இந்த வரனைப் பற்றி உனக்குத் தெரிவித்தேன்...'' என்று ஏதோ ஆவேசம் வந்தவளைப் போலக் கத்தி விட்டு நிறுத்தினாள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழியத் தொடங்கியது. ஒரு விநாடி அங்கு தாங்கவொண்ணாத பேரமைதி நிலவியது.

''பின் ஏன் இப்பொழுது தடுத்து விட்டாய் ?'' என்றான் சத்யம்.

''என்ன செய்வது ! இந்தப் பாழும் மனம் கேட்கவில்லையே ! உன்னிடமிருந்த கோபம், உன் தங்கையைப் பார்த்ததும் எங்கோ போய் விட்டது. நீதான் நீசத்தனமாய் நடந்து கொண்டாயென்றால் என்னாலும் அப்படி முடியவில்லையே...'' என்று கூறியவாறு புடவைத் தலைப்பால் தன் இரு கண்களையும் துடைத்துக் கொண்டாள் கோதை.

''உன் நிலைக்காக நான் மிகவும் வருந்துகிறேன், கோதை. உன் கதை எனக்கு மிகுந்த அதிர்ச்சியைத் தருகிறது. அதைவிட அதிர்ச்சியைத் தருகிறது, நீ என்னைப் பற்றித் தவறாகக் கொண்டிருக்கும் முடிவு ! என் மீது ஆணையாகச் சொல்லுகிறேன்: நீ, நன்றாயிருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன்தான் என் தங்கையிடம் அப்படிப் புளுகினேன். ஒரு பொய் இவ்வளவு விபரீதத்தில் கொண்டு போய் விடுமென்று நான் நினைக்கவேயில்லை. நீ செய்ய இருந்த காரியம் எப்படிப்பட்டதென்று யோசித்துப் பார்த்தாயா? நாளைக்கே உன் கணவர் நல்லவராக மாறலாம். ஆனால், ராஜிக்கு இந்தக் கல்யாணம் நடந்திருந்து, பின்னால் ஏதாவது நேர்ந்து விட்டால் அப்புறம் அதை மாற்ற யாராலாவது முடியுமா ? அந்தத் தாயின் வயிற்றில் பிறந்த உன் புத்தி எப்படி இவ்வளவு மோசமாகப் போயிற்றென்றுதான் ஆச்சரியமாயிருக்கிறது !'' என்றான் சத்யம் வருத்தம் நிறைந்த குரலில்.

''அப்படியானால் உண்மையாகவே உனக்கு இவரைப் பற்றி முதலில் ஒன்றும் தெரியாதா?'' என்றாள் கோதை.

''எந்தக் கோவிலில் வந்து சத்தியம் செய்ய வேண்டும், கோதை ?''

கோதை ஒரு கணம் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். பிறகு, ''என்னை மன்னித்து விடு, சத்யம்! ஆத்திரத்தில் புத்தி கெட்டு விட்டது. யாரிடமும் இதைப் பற்றி எதுவும் சொல்லாதே. கூடிய சீக்கிரத்தில் உண்மையிலேயே நல்ல இடமாகப் பார்த்து ராஜிக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன். ஆனால், இனி நீ என்னை நம்ப மாட்டாய். இல்லையா?'' என்றாள் கண் கலங்க.

''நிச்சயமாக நம்புவேன் !'' என்றான் சத்யம். பிறகு சிறிது நேரம் தன் குடும்ப விஷயங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்து விட்டு உள் காரியங்களைக் கவனிக்கப் போய் விட்டாள் கோதை. சத்யம் வெளியில் புறப்பட்டான்.

நாலு வீடு தாண்டியதும் ''சத்யம்!'' என்று கூப்பிட்டுக்கொண்டே அவன் பின்னால் வந்தான் சுந்தரேசன்.

''எங்கிருந்து வருகிறீர்கள் ?'' என்றான் சத்யம் மிகுந்த வியப்புடன்.

''உங்கள் சம்பாஷணையை யெல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன், சத்யம், இன்று முதல் நான் அடியோடு மாறி விட்டேனப்பா. என் செய்கை என் மனைவியை எவ்வளவு தூரம் கொண்டு விட்டிருக்கிறதென்பதை நினைத்தாலே நடுக்கமாயிருக்கிறது. எனக்கு இப்பொழுது ஒரு விஷயம் நன்றாகப் புரிகிறது. ஒரு பெண்ணுக்கு அவள் தாயின் குணம் இருக்குமா, தந்தையின் குணம் இருக்குமாவென்று அடிக்கடி நான் நினைத்துப் பார்ப்பதுண்டு. இப்பொழுது தான் விடை கிடைத்தது. இருவர் குணமும் இருக்கலாம். கோதை முதலில் பழி வாங்க நினைத்தது அவள் தந்தையிடமிருந்து வந்த குணம் ! அதைத் தடுத்தது அவள் தாயின் குணம். பாற்கடலில் முதலில் கிடைத்தது நஞ்சுதானே ! ஆனால், அதற்காக அமிர்தம் வெளிவராமலா போய்விட்டது ?'' என்றான்.



நான் மிகவும் விரும்புவது....
பிரிபெக்ட்
அழகு சோப்
லட்சக்கணக்கான மக்கள் அதிசயிக்கத் தக்க, ஆனந்தமடையக் கூடிய நறுமணத்தைப் பெற்றிருக்கிறது
எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் பொலிவுடனும் திகழச் செய்கிறது
Perfect
PERFECT BEAUTY
மோடி சோப் ஒர்க்ஸ், மோடிநகர் (U. P.)
MS/NF/10
சென்னை நகர ஏஜெண்டுகள்
மெஸர்ஸ் பாப்புலர் டிரேடிங் கார்ப்பொரேஷன், 4, நாராயண முதலித் தெரு, சென்னை -1



நடுநிசி: குப்த சாம்ராஜ்யத்தின் தலைநகரான பாடலிபுத்ரம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது: தன்னைக் காக்கப் பேரரசரான சமுத்ர குப்தர் இருக்கிறார் என்ற நினைப்பில். ஆனால் பேரரசரோ—அந்தரங்க மாளிகையிலே அமைதியற்று அங்குமிங்குமாகநடை போட்டுக் கொண்டிருந்தார். அவரால் அழைக்கப்பட்டு வந்திருந்த அமைச்சரும், தளபதியும் திக்விஜயம் செய்தும், அச்வமேத யாகத்தை முடித்தும், பாரத நாட்டுச் சிற்றரசர்களை யெல்லாம் தம் ஆணைக்குட்படுத்திய அஞ்சா நெஞ்சம் கொண்ட அரசர் பெருமானைக் கலங்கச் செய்துவிட்ட விஷயம் என்னவாக இருக்குமென்று ஊகிக்க மாட்டாமல் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

தீவிர யோசனையில் ஈடுபட்டிருக்கும் அரசர் திடீரென்று ஏதாவது கட்டளை பிறப்பிக்கக் கூடும் என்று எதிர்பார்த்தவர்களாய் அரசருடைய முகத்தை நோக்கிய வண்ணம் நின்றிருந்தனர். அரசரோ விநாடிக்கு ஒரு முறை வாசற்புறத்தை நோக்கினாரே தவிர, அருகில் நின்று கொண்டிருந்த அமைச்சரையும் தளபதியையும் ஏறெடுத்தும் பார்க்க வில்லை.

டக்! டக்!! டக்!!!

குதிரையின் குளம்பொலி மூவருடைய சிந்தனைக்கும் முத்தாய்ப்பு வைத்தது.

குதிரை வீரனின் ஆடை அலங்காரத்தில் இருந்தும், குதிரையினின்று அவன் மிடுக்குடன் இறங்கிய தோரணையிலிருந்தும் அவன் அரச வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதை யாரும் எளிதில் ஊகித்துவிட முடியும்.

ஆம்; சமுத்திரகுப்தரின் மூத்த புதல்வனான ராமகுப்தன்தான், கட்டுப்படுத்த முடியாத படபடப்புடன் உள்ளே நுழைந்தான்.

''தந்தையே! என்னை அவசரமாக அழைத்தீர்களாமே?''

''ஆமாம், ராமகுப்தா! உன் தந்தையின் நெஞ்சிலே தங்க தோய்ந்த ஈட்டியைப் பாய்ச்ச எத்தனை காலமாகத் திட்டமிட்டு வந்தாய் என்பதைக் கேட்க அழைத்தேன்!''

சாந்தத்துக்குப் பெயர்போன சமுத்ரகுப்தர் சீறியதைக் கேட்டு மூவருமே திடுக்கிட்டனர்.

''பகைவனும் செய்யக் கூசும் காரியத்தை மகன் செய்வான் என்று நீங்கள் நினைப்பதிலிருந்தே மகனிடம் உங்களுக்குப் பாசம் நன்கு புலப்படுகிறதே!''

''உண்மையை மறைக்கும் அளவுக்குப் பாசத்தை வளர்ப்பவன் அரசாளத் தகுதியற்றவன், ராமகுப்தா!''

''அத்தகைய பாசம் இளைய மகனிடம் மட்டும் இருக்கலாம் என்று அர்த்த சாஸ்திரம் கூறுகிறது போலும்!''

''குறிப்பிட்ட விஷயத்தை விட்டு விட்டுக் குதர்க்கவாதம் செய்வதே உன்னைக் குற்றவாளியாகக் காட்டுகிறதே!''

''குதர்க்கவாதமில்லை தந்தையே! குடிமக்கள் பேசிக் கொள்கிறார்கள்—உங்களுக்கு இளைய மகனிடம் பாசம் அதிகமென்றும், அவனையே பட்டத்தரசன் ஆக்க யோசித்து வருகிறீர்கள் என்றும் கூறுகிறார்கள்.''

''இன்றுவரை எனக்கு அத்தகைய அபிப்பிராயம் கிடையாது. ஆனால் உன் புத்தி போகும் போக்கைப் பார்க்கும்போது புனராலோசனை செய்வதுதான் சரியோ என்று தோன்றுகிறது!''

''தங்கள் அதிருப்திக்கு நான் ஆளானது எப்படி என்று தெரிந்து கொள்ளலாமா, தந்தையே?'' என்று ராமகுப்தன் பணிவாய்க் கேட்டான். சமுத்திரகுப்தரின் கோபம் சற்றுத் தணிந்தது.

''நீ அறிவாளி, வீரன்; குப்த சாம்ராஜ்யத்தை மகோன்னத நிலைக்குக் கொண்டு வருவாய் என்றெல்லாம் கனவு கண்டேன்...''

''அதற்கு எந்த விதத்திலும் பங்கம் விளைவித்ததாகத் தெரியவில்லையே! அச்வமேத யாகம் செய்ய நினைத்தீர். முடித்து வைத்தேன். பொற்காசுகளை வெளியிட்டு வெற்றியைக் கொண்டாட விரும்பினீர். தேவையான பொன்னைத் தென்னாட்டிலிருந்து கொண்டு வந்து குவித்தேன்.''

''உண்மை, மைந்தா! சாம்ராஜ்யத்தின் புகழைக் குன்றின்மேல் உயர்த்திய கரத்தாலேயே இகழ் என்னும் படுகுழியில் இழுத்து விட நினைக்கிறாய்.''

''மன்னிக்கவேண்டும், சக்கரவர்த்தி! இளவரசர் செய்துவிட்ட தவறு என்னவென்பதை நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?'' என்று இடைமறித்தார் அமைச்சர்.

''அப்படிக் கேளுங்கள், அமைச்சரே!'' என்று ஆமோதித்தான் ராமகுப்தன்.

''ராமா! நள்ளிரவில் இப்படி அழைத்ததன் காரணம் அமைச்சருக்கும் சேனாபதிக்கும் தெரியாமலிருக்கலாம். ஆனால் சம்பந்தப்பட்ட உனக்குத் தெரியவில்லை யென்பதை நான் நம்பத் தயாராயில்லை. இருந்தும் வெளிப்படையாகவே கூறி விடுகிறேன். தன்னை அச்சுதவர்மரின் மகள் என்று கூறிக் கொள்ளும் ஒருத்தியை நீ காதலிப்பதாகவும், மணம் செய்து கொள்வதாகச் சொல்லி வந்திருப்பதாகவும் தெரிகிறது. இது பொய்யில்லையே?''

சுவர்ணலேகா



''இந்தச் சின்ன விஷயத்தைப் பற்றிக் கேட்கத்தானா நடுநிசியில் அழைத்தீர்கள்? தந்தையும் மகனும் பேசித் தீர்க்க வேண்டிய விஷயத்துக்கா அமைச்சரையும் சேனாதிபதியையும் அழைத்துக் கலவரப்படுத்தினீர்கள்?''

''கேட்டீரா, அமைச்சரே! நமது ராஜ்யத்தின் மேற்கெல்லைப் புறத்தில் தனிப் புகழுடன் அரசு செலுத்தும் வாகடக மன்னரான பிருத்விசேனரின் மகளை இவனுக்கு மணம் செய்து கொள்வதாக நாம் வாக்களித்ததை நீர் அறிவீர்; நாடறியும். இப்பொழுது அதை மறுத்தால், நமது சாம்ராஜ்யமும், அதன் கௌரவமும் என்ன ஆகும்? மகனே! அச்சுதவர்மரின் மகள் என்று சொல்லிக் கொள்ளும் சுவர்ணலதாவை நீ மணந்து கொள்வது என்பது நடவாத காரியம்.''

''ஏன்? அவள் ஒரு சிற்றரசரின் மகள் என்பதாலா? தந்தையே! இளவரசர்களையும் இளவரசிகளையும் சொக்கட்டான் காய்கள் என்று நினைத்துச் சாம்ராஜ்ய விஸ்தரிப்புக்குப் பயன்படுத்தும் வழக்கத்தை நான் அடியோடு வெறுக்கிறேன். அவர்களுக்கும் தனிப்பட்ட அபிலாஷை உண்டு என்பதை மறக்காதீர்கள். மணந்தால் நான் சுவர்ணலதாவை மணப்பேன். இல்லையென்றால்......''

''இல்லை யென்றால் என்ற சொல்லுக்கு இடமே யில்லை. என் எண்ணத்துக்கு நீ இணங்கி வரவில்லையென்றால் குப்த சாம்ராஜ்யத்தின் உரிமை உனக்கு இல்லை!''

''அதைச் சொல்ல நீங்கள் யார்? என் கைவாள் தீர்மானிக்கும்!'' என்று கூறியவன் அடுத்த கணம் அங்கே நிற்கவில்லை. வாசலில் நின்றுகொண்டிருந்த குதிரையின் மேல் தாவி ஏறிவிட்டான்.

தமது உடைவாளை உருவியவாறு சீறினார் சமுத்திர குப்தர்: ''கைது செய்யுங்கள் அவனை'' என்று! அவர் ஆணையை ஒருவன் முன்வந்து நிறைவேற்றும் வரையில் அவன் அங்கே நின்றால் அல்லவா? ''அப்பா! ஏன் இந்தக் கோபம்?'' என்று அன்புடன் கேட்டவாறே மற்றொரு வாயில் வழியாக உள்ளே நுழைந்தான் சந்திரகுப்தன்.

''சந்திரா! உன் அருமைச் சகோதரன் சற்று முன் கூறிய வார்த்தைகளை நீ கேட்டாயா?''

''கேட்டேன். ஆனால் அவனையே இவ்விஷயத்துக்கு முற்றிலும் பொறுப்பாளியாக்கிவிட முடியாது.''



"பின்னே?"

"அவள் உள்ளம் கவர்ந்த லதாவும் அதற்குப் பொறுப்பானவள். தன்னிடம் கொண்ட காதல் காரணமாக சாம்ராஜ்ய உரிமையை உதறிவிடக் கூடாது என்று வாக்குறுதி பெற்றிருக்கிறாள். அண்ணனைவிடத்திலும், நாட்டின் நன்மையிலும் அவ்வளவு அக்கறை அவளுக்கு!"

"நீ சொல்வதைப் பார்த்தால் இவர்கள் காதல் திரைக்குப் பின் குப்த சாம்ராஜ்யத்தைக் கவிழ்க்கும் சதித் திட்டம் உருவாவது போல் அல்லவா தோன்றுகிறது!"

"உங்கள் ஊகம் முற்றிலும் சரிதான். நேற்றைக்கு முன் தினம் அச்சுதவர்மர் விஷ்ணுகோபனைச் சந்தித்து விட்டு வந்ததாகக் கேள்விப்பட்டேன்!"

"இவ்வளவு தெரிந்துமா உன் சகோதரனைக் கைது செய்யாமல் விட்டு விட்டாய்!"

"அண்ணாவுக்கு அரண்மனையிலேயே காவல். அவர்களது சூழ்ச்சியை அழிப்பதொன்றும் பிரமாதமில்லை. நமக்கு முக்கியமானது யுவராஜரின் மனமாற்றம். அதற்கு அச்சுதவர்மரைக் கைது செய்தால் மட்டும் போதாது. அவரைக் குற்றவாளியென்று நிரூபிக்கத் தேவையான சான்றுகள் வேண்டும். அவையும் அண்ணா நம்பத் தகுந்தவையாக இருக்க வேண்டும். இவற்றைச் செய்து முடிக்கச் சிறிது அவகாசம் தேவை. அத்துடன் என் செயல் திறமையில் உங்களுக்கெல்லாம் நம்பிக்கையிருக்க வேண்டும்."

"சந்திரா! இம் மண்ணாளும் உரிமை கொண்ட மூத்த மகனாக நீ பிறந்திருக்கக் கூடாதா?" —மகனைத் தம்மருகில் இழுத்து அணைத்துக் கொண்டார் சமுத்திரகுப்தர்.

"தந்தையே! சாம்ராஜ்ய நலனில் அக்கறை கொண்டு செயலாற்றச் சக்ரவர்த்தியாக முடிசூட வேணுமென்ற அவசியமில்லையே!" இதைக் கூறியபொழுது சந்திரனின் முகத்திலே பெருமிதம் தோன்றியது.

★

சூரியாஸ்தமனத்துக்கு இன்னும் ஒரு நாழிகைப் பொழுதான் இருந்தது. நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த ரதமொன்று குவலாபுரக் காட்டை வெகு துரிதமாகக் கடந்து கொண்டிருந்தது. முன்னும் பின்னும் காவலாகக் குதிரை வீரர்கள் சுமார் இருபது பேர்கள் சென்று கொண்டிருந்தனர். சுவர்ண மாளிகை வாசலில் அவை வந்து நின்றன.

அச்சுத வர்மர் சத்தத்தின் காரணமறிய வாசலுக்கு வந்தாரே தவிர, வந்திருப்பவர்களை எதிர்பார்க்கவில்லையென்பதை அவர் முகம் பறைசாற்றியது.

"என்ன, வர்மரே! ஆச்சரியப்படுகிறீரா அல்லது அச்சப்படுகிறீரா?" என்று ராமகுப்தன் கேட்கவும் தம்மைச் சமாளித்துக் கொண்டார் அச்சுதவர்மர்.

"அச்சப்படுவானேன், யுவராஜரே! எல்லா ஏற்பாடுகளுடன் இவ்வளவு விரைவில் தாங்கள் வருவீர்கள் என்று எதிர்பாராத காரணத்தால் சிறிது தடுமாறினேன்."

"நானும் இவ்வளவு விரைவில் எல்லாம் முடிந்துவிடும் என்று எதிர் பார்க்கவேயில்லை. என் விருப்பத்தைச் சக்ரவர்த்தியிடம் தெரிவித்தபோது எப்படி வெகுண்டார், தெரியுமா? ராஜ்ய உரிமை எனக்கில்லையென்று சீறினார். அரண்மனையிலேயே என்னைக் காவலில் வைக்கவும் உத்தரவிட்டார். ஆனால் என்னிடம் சுவர்ணலதா பெற்ற வாக்குறுதியை நான் தெரிவித்தபோது அவர் மனம் முற்றிலும் மாறி விட்டது..."

"என்ன மறதியப்பா உங்களுக்கு? விருந்தாளியை வாசலில் நிற்க வைத்தே பேசுகிறீர்களே!" வாசற்புறம் ஒலியாக வந்து நின்ற லதா இருவர் கவனத்தையும் கவர்ந்தாள். குரல் வந்த திசையை நோக்கினான் ராமகுப்தன். "அச்சுதவர்மரே! என் கண்கள் என்னை ஏமாற்றுகின்றன. நான் இவ்விடம் வந்தடைவதற்குச் சற்று முன்னால் சந்தன மரங்களுக்கிடையே ஆதவன் ஓடி ஒளிவதைக் கண்டேன். இப்போது என்னவென்றால் உதயசூரியன் தன் செங்கதிர்களைப் பரப்பிக் கொண்டு என் முன் காட்சி தருகிறான்!"

"ராஜன்! தாங்கள் கூறுவது முற்றிலும் தவறு. லதா வெறும் சந்திரன். அவளுக்கு ஒளி தரும் ஆதவன் தாங்கள்தான். தங்கள் அன்புக் கிரணங்கள் என்றென்றைக்கும் அவள் மேல் பொழிய வேணுமென்பதே என் விருப்பம்" என்றார் அச்சுதவர்மர்.

"அது நிச்சயம் நிறைவேறும் என்பதற்கு இதோ அரசர் அனுப்பியுள்ள தேரும் படையும், ஆடை ஆபரணங்களுமே தகுந்த சான்றுகளாகுமே!"

"தேர் எதற்கு, யுவராஜ்?"

"ஆகா! எனக்குள்ள பரபரப்பில் உங்களிடம் சக்ரவர்த்தியின் உத்தரவைக்கூடச் சரிவரக் கூறவில்லை. எங்கள் விவாக ஏற்பாடு நடந்து முடியும் வரை, விஷயம் ரகசியமாயிருக்க வேணுமென்று நினைக்கிறார் சக்ரவர்த்தி. ஏமாற்றமடையப் போகும் பிருத்விசேனரின் தாக்குதலைச் சமாளிக்க எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கிற தென்றாலும், விவாகத்துக்கு முன் அது நடைபெறுவதை அவர் விரும்பவில்லை. எனவே, இன்றிரவே லதாவை அழைத்துக் கொண்டு தலைநகர் திரும்ப வேண்டும். விவாக தினத்தன்றே மகுடாபிஷேகமும் நடைபெறுமென்று சக்ரவர்த்தி தெரிவிக்கச் சொன்னார்!"

"யுவராஜரே! என் மகள் பாக்கியசாலி. பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை நான் உடனே கவனிக்கிறேன்.'''

"வர்மரே! லதாவுடன் தாங்களும் வருகிறீர்கள் அல்லவா?"

"மன்னிக்க வேண்டும்; எனக்குள்ள சில வேலைகளை முடித்துக் கொண்டு, சீர் வரிசைகளுடன் சமயத்திற்கு வந்து விடுகிறேன்!"

★

"பிரபு! நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்"

"உத்தரவுக்குக் காத்திருக்கும்போது உதவி என்ற சொல் எதற்கு, கண்ணே?"

"எனக்கு வெற்று ஓலைச் சுருளும். அதைக் கொண்டு செல்லும் அதிகாரம்பெற்ற குதிரை வீரனும் தேவை!"

"இவ்வளவுதானே? இதோ ஏற்பாடுகள் செய்கிறேன்" என்று கூறி ஆசனத்தை விட்டெழுந்தான் ராமகுப்தன்.


எக்லா
தென் இந்தியா விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப் போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம்... மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால். குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE
EC/G/3R


நரஸூ காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான ருசியை
அனுபவியுங்கள்
நரஸூஸ் மானுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.,
சேலம் & சென்னை

''ஓலை யாருக்கென்று கூடக் கேட்கவில்லையே?''

''சேச்சே; இந்தக் கேள்வி குப்த சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷியை நோக்கிக் கேட்கக் கூடியதா? என் பாட்டனார் தம் தேவியிடம் கொண்டிருந்த அபரிமிதமான அன்பு காரணமாக நாணயங்களிலெல்லாம் மகாராணியின் உருவைப் பொறித்து மகிழ்ந்தார். நான் என்ன செய்யப் போகிறேன், தெரியுமா? குப்த சாம்ராஜ்யத்தையே உன் காலடியில் இடத்திவிடப் போகிறேன். அப்போது எந்த நாட்டரசர்களுக்கெல்லாம் ஓலை யெழுதி யனுப்பப் போகிறாயோ, யார் கண்டது?'' என்றான் ராமகுப்தன் குறுநகை செய்தவாறு.

லதா சிந்தனையில் ஆழ்ந்தாள்......

''சக்கரவர்த்தி! பெரிய தவறு நேர்ந்து விட்டது; யுவராஜர் ராமகுப்தர் காவலினின்று தப்பித்துக் கொண்டு போய் விட்டார்!'' - உடல் வியர்க்க, கை கால்கள் பதற நாக்குழற விஷயத்தைக் கூறினான் காவலாளி.

''ஆகா! காரியமெல்லாம் விபரீதமாய்ப் போய்க் கொண்டிருக்கிறதே. உடனே போய்ச் சந்திரனை அழைத்துவா!''

''அது வீண்வேலை தந்தையே! விஷயம் விபரீதமாகப் போய்விட்டது. உங்கள் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான சந்திரன், எங்கள் இருவருக்கும் உள்ள உருவ ஒற்றுமையைப் பயன்படுத்திக் கொண்டு கவர்ணலதாவுடன் எங்கோ கண் காணாத இடத்தில் சரச சல்லாபமிடுகிறான். அவன் அரண்மனையில் மட்டும் இருந்திருந்தால் ஒரு கொலையே நடந்திருக்கும்'' என்று கூறினான் சிறையிலிருந்து தப்பி ஓடிவந்த ராமகுப்தன்.

''நான் அங்கே போகாவிட்டால் நம் நாடே அல்லவா பறிபோயிருக்கும்?'' — சந்திரனின் குரலைக் கேட்டு எல்லோரும் திரும்பினர்.

''சந்திரா! நாவை அடக்கிப் பேசு. 'சக்கரவர்த்தியின் எதிரில் இருப்பதால் என் ஆத்திரத்துக்கு அணைபோட்டிருக்கிறேன். அதைத் தகர்க்காதே! என் அருமைக் காதலி லதாவைக் கவர்ந்தாய். அதோடு நீ என்னைச் சிறை வைக்கக் காரணம்?''

''அப்படிக் கேளுங்கள். அந்த அரும் பெரும் பணியை இந்த ஓலைகள் செய்யும்!'' என்று ஏளனமாகக் கூறிய சந்திரன் தன் சகோதரனின் முன் ஒரு கத்தை ஓலைச்சுருளை வீசினான். ஆத்திரத்துடன் அவற்றை எடுத்துப் படிக்கத் தொடங்கினான் ராமகுப்தன்.

''ஆருயிர்க் காதலர் விஷ்ணுகோபருக்கு அடியாள் லதா எழுதிக்கொண்டது: தாங்கள் என் அழகை வர்ணிக்கும் போதெல்லாம் அதை 'மோகத்தின் உளறலாகத்' தான் மதித்தேன். அது தவறு என்பதை, என் அழகு என்னும் மகுடிக்குக் கட்டுப்பட்டு ஆடும் ராமகுப்தனைக் கண்ட பின்பு உணர்ந்தேன். மகுடிநாதம் நின்றுவிட்டால் பாம்பு சீறுமே! அதற்குள் அதன் நச்சுப்பல்லைப் பிடுங்கிவிட வேண்டாமா? மகத நாட்டின் அந்தரங்கம் அனைத்தும் எனக்குத் தெரியும். இக் கடிதம் கண்டவுடன், அச்சுதவர்மரை உடன் அழைத்துக் கொண்டு மாறுவேடத்தில் அந்தரப்புரத்தில் என்னை வந்து சந்திக்கவும். இப்படிக்கு —லதா.''

ஓலையைப் படித்த ராமகுப்தனின் அங்கம் ஒவ்வொன்றும் அவமானத்தாலும் ஆத்திரத்தாலும் துடித்தது. பற்களை நறநறவென்று கடித்தவாறு ஓலைச்சுருளை விட்டெறிந்து விட்டுக் கத்தியை உருவினான்.

''ஏன் அண்ணா, பாக்கி ஓலைகளையும் படிக்காமல், வீசியெறிந்து விட்டீர்கள்?''

''வெந்த புண்ணில் வேலை ஏன் பாய்ச்சுகிறாய், சந்திரா! அந்தச் சண்டாளியை இந்தக் கத்திக்குக் காவு கொடுத்து விட்டுத் தான் மறு காரியம்.''

''அண்ணா! ஆள் மாறாட்டம் காரணமாக அந்தச் சண்டாளி ஏமாந்து விட்டாள். அதை அச்சுதவர்மர் மூலம் அறிந்ததும் அந்த மோதிரக்கல்லை விழுங்கித் தன் முடிவைத் தானே தேடிக் கொண்டு விட்டாள். உங்களைப்போல் வேடந்தாங்கி நான் சென்றதனால் தான் சதி அம்பலமாகியது'' என்றான் சந்திரன்.

ஆ! வென்ற சப்தம் எங்கிருந்தோ மிகமிக இலேசாக ஒலித்தது. சக்ரவர்த்தி, சந்திரன், ராமகுப்தன் மூவரும் சுற்றுமுற்றும் பார்த்தனர். அப்போது......

சாளரத்தின் வழியாக விர்ரென்று பாய்ந்து வந்தது ஒரு கத்தி சந்திரனை நோக்கி; அந்தக் கத்தியினும் கடுவேகமாகப் பாய்ந்து வந்து மைந்தனை மறைத்துக் கொண்டார் தந்தை. குறிதவறாது வந்த கூரிய கத்தி தர்மராஜரின் அஞ்சா நெஞ்சைப் பதம் பார்த்து விட்டது!

''ஆ!'' ''அப்பா!'' என்று அலறினர் அண்ணனும் தம்பியும்.

''ராமா! சந்திரா!'' என்று மெல்லிய குரலில் அழைத்தார் சமுத்ர குப்தர்: ''என் பிரிவுக்காக நீங்கள் மனம் வருந்தக் கூடாது. நீங்கள் இணைபிரியாமல் வாழ்ந்து நான் எடுத்த காரியத்தை முடிக்க வேணும்!'' என்று கூறிச் சகோதரர்களின் கரங்களைப் பிணைத்து வைத்துப் பெருமூச்செறிந்தார். அதற்குப் பிறகு பெருமூச்சோடு உயிரும் வெளிவந்து வான வெளியில் கலந்தது.

''அண்ணா! துயரத்தில் ஆழ்ந்து இடிந்திருப்பதைக் காட்டிலும், அமைச்சரை அழைத்து வரச் செய்து சக்ரவர்த்தி தேக வியோகமானதைத் தெரிவிப்பதுடன் நடக்க வேண்டிய மகுடாபிஷேகத்துக்குரிய ஏற்பாடுகளையும் செய்யச் சொல்ல வேண்டாமா?''

''பொறு, சந்திரா! என்னைப் பேசவிடு. மரணத் தறுவாயில் சக்ரவர்த்தி என்ன கூறினார்? தாம் எடுத்த காரியத்தை முடித்து வைக்கும் படிதானே? அவர் முடிக்காமல் விட்ட காரியம் வாகடக மன்னருடன் சம்பந்தம் செய்து கொள்வது. அதை என்றால் நிறைவேற்ற முடியாது. லதா என்னை வஞ்சித்தது உண்மைதான்; ஆனால் நான் அவளிடம் கொண்ட அன்பு பவித்ரமானது. மேலும் தந்தையின் அகால மரணத்துக்கு ஒருவகையில் நான்தான் காரணம் என்பது உனக்குத் தெரியும். அது என் மனத்தை உறுத்திக் கொண்டேயிருக்கும். என்னால் நிம்மதியாக ஆட்சி செய்யவே முடியாது. எனவே மகத்தான குப்த சாம்ராஜ்யத்தின் ஆட்சிப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்து விட்டு நான் விலகிக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன்'' என்று கூறி, அரண்மனையை விட்டு வேகமாக வெளியேறினான்.

இளங்கோவனைப் பின்னால் நின்று தாக்கிய முரடன் அடுத்த கணமே அங்கிருந்து ஓடிப் போய் விட்டான். மலர்விழி அவன் சென்ற திக்கையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். மறுகணம் இளங்கோவனைப் பார்த்தாள். அவன் முகத்தில் வழிந்து கொண்டிருந்த ரத்தத்தைப் பார்த்தாள். பேச்சு மூச்சற்று அவன் சோர்ந்து விழுந்து கிடக்கும் பரிதாபமான கோலத்தைப் பார்த்தாள்.

பூப் போன்ற அவள் உடலை யாரோ இறுக்கிப் பிழிவதுபோல வேதனைப்பட்டாள். உடம்பிலுள்ள எலும்புகள் எல்லாம் 'நற நற' வென்று நொறுங்கி ஒடிவது போலத் துடி துடித்தாள்.

அவள் நெஞ்சின் மீது யாரோ பெரிய பாறாங்கல்லை வைத்து அமுக்குவது போல் இருந்தது. இரண்டு கைகளாலும் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

அவள் குரல் வளையை யாரோ துணியைப் போட்டு முறுக்குவது போலத் தோன்றியது. கழுத்தைப் பிடித்துக் கொண்டு அலறினாள்; கண்ணீர் விட்டாள்.

ஒருகணம் தன்னை நிதானித்துக் கொண்டு இளங்கோவனுக்கு



4

பொன்னி எங்கே?

ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று எண்ணினாள். புடவைத் தலைப்பைக் கிழித்து இளங்கோவனின் தலையில், அடிபட்டு இரத்தம் பொங்கி வரும் இடத்தில் கட்ட வேண்டும் என்று நினைத்தாள். புடவைத் தலைப்பைக் கிழித்தாள். கிழித்த துணியைக் கொண்டு இளங்கோவன் தலையில் கட்டுப் போட முயன்றாள். அவள் கைகள் கிடு கிடு என்று நடுங்கின. "ஐயோ, இளங்கோவே!" என்று அழுதாள். இளங்கோவனின் பரந்த மார்பில் சோர்ந்து விழுந்தாள். அவன் உறுதியான தோளைப் பிடித்துக் கொண்டு கதறிக் கதறி அழுதாள்.

தன்னைச் சுற்றிலும் ஒரே இருள் சூழ்வது போலிருந்ததை அவள் உணர்ந்தாள். மறுகணம் இருளைக் கிழித்துக் கொண்டு அவள் தலைக்குள்ளே ஆயிரமாயிரம் மின்னல்கள் பாய்ந்தன.

பகீரதன்

இளங்கோவன், தோப்பு, துரவு, வயல், வரப்பு எல்லாம் அவள் கண் முன்னால் கரகர வென்று சுழன்றன.

கீழே கீழே இன்னும் கீழே அதள பாதாளத்தை நோக்கி மலர்விழி விழுந்து கொண்டிருந்தாள். ஆகா! இவ்வாறு விழுவதிலிருந்து தப்ப முடியாதா? இதற்கு முடிவே கிடையாதா? இப்படி இடை விடாமல் கீழே கீழே போய்க் கொண்டிருக்க வேண்டியதுதானா?

"மலர்விழி! மலர்விழி!" என்று எங்கேயோ இருந்து யாரோ அழைத்தார்கள்.

அது இளங்கோவனின் குரல் அல்ல; நிச்சயம். முகத்தின் அருகே ஏதோ சீறுவது போலச் சத்தம் கேட்டது. உஷ்ணமான மூச்சுக் காற்று முகத்தின் மீது விழுந்தது.


மலர்விழி கண்களைத் திறந்தாள். ஐயோ! கொடிய வேங்கைப் புலியின் முகம். நெருப்புத் தணல் போல் பளபளவென்று ஜொலித்தன வேங்கையின் கண்கள்!

இல்லை. இல்லை. மலர்விழியின் வளர்ப்புத் தந்தை பெரியசாமியின் முகம். அவர் விடும் மூச்சுத்தான் முகத்தின் மேல் படுகிறது.

மலர்விழி ஒரு பெரும் பிரயத்தனம் செய்து பளிச்சென்று எழுந்து உட்கார்ந்தாள். அவள் தேகமெல்லாம் படபட வென்று நடுங்கியது.

பெரியசாமி அவளைக் கருணையுடன் பார்த்தார். "மலர்விழி! இப்பொழுது உனக்கு எப்படி இருக்கிறது? ஏன் இப்படி உன் உடலெல்லாம் நடுங்குகிறது?" என்று அன்போடு கேட்டார்.

மலர்விழி பதில் ஒன்றும் சொல்லாமல் சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் தன்னுடைய வீட்டில் இருப்பதை உணர்ந்தாள். பொழுது விடிந்திருப்பதையும் அறிந்து கொண்டாள். திக்பிரமை பிடித்தவள் போல் திகைத்தாள். வாய் பேசாமல் பொல பொல வென்று கண்ணீர் விட்டாள். தைரியத்தையெல்லாம் வரவழைத்துக் கொண்டு பேசுவதற்கு ஆரம்பித்தாள். "அவர் எங்கே?



என் இதயம் கவர்ந்த இளங்கோ எங்கே? எங்கே அப்பா அவர்?'' என்று கேட்டாள்.

''இளங்கோவனுக்கு ஒன்றும் அபாயம் இல்லை அம்மா! அவனும் இப்பொழுது நம்முடைய வீட்டில்தான் இருக்கிறான்'' என்று சொல்லிக் கொண்டே மலர்விழியின் மிருதுவான முதுகில் இரும்பை யொத்த தம்முடைய கரத்தினால் மெதுவாகத் தடவிக் கொடுத்தார்.

அப்போது மலர்விழியின் உடம்பு மறுபடியும் நடுங்கியது. கொடிய கண்களையுடைய வேங்கை தன்னை நோக்கி வேகமாகப் பாய வருவது போன்ற பிரமை ஒருகணம் ஏற்பட்டது. சட்டென்று சமாளித்துக் கொண்டு தன் தந்தை பெரியசாமியின் பிடியிலிருந்து நகர்ந்தாள்.

''இளங்கோ எங்கே இருக்கிறார் அப்பா?'' என்று கனிவும் காதலும் பொங்கக் கேட்டாள்.

''அவனுக்கு இன்னும் நினைவு வரவில்லை. கூடத்தில் கயிற்றுக் கட்டிலில் படுத்திருக்கிறான். நம்முடைய வைத்தியர் வந்து அவனுடைய காயத்தில் மருந்து வைத்துக் கட்டுப் போட்டிருக்கிறார். அவனாகக் கண்ணைத் திறந்து பேசும் வரையில் அவனை ஒருவரும் தொந்தரவு செய்யக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்'' என்றார் பெரியசாமி.

''நான் அவரைத் தொந்தரவு செய்யாமல் பார்க்கிறேன்'' என்று சொல்லி விட்டு வில்லிலிருந்து கிளம்பிய அம்பு போல இளங்கோவன் படுத்துக் கிடக்கும் கூடத்தை நோக்கிப் பறந்தாள் மலர்விழி.


இளங்கோவன் தலையில் கட்டுடன் கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடந்தான். அவன் கண்கள் மூடிக் கிடந்தன. இப்போதுகூட அவன் உதடுகளில் புன்னகை நெளிந்தது. அவனுக்கு அருகில் வயது முதிர்ந்த அம்மையார் ஒருத்தி அமர்ந்திருந்தாள். வயதாகி விட்டதால் அவள் சற்றுக் கூனிக் குறுகிப் போயிருந்தாள். அவள் கண்கள் மங்கியும் ஒளியிழந்தும் காணப்பட்டன. தன்னுடைய நடுங்கும் கைகளில் உள்ள உலர்ந்த விரல்களால் இளங்கோவன் முகத்தை அன்போடு தடவி விட்டுக் கொண்டிருந்தாள்.

கிழவி வெள்ளையம்மாளை இளங்கோவன் கட்டிலில் பார்த்ததும் மலர்விழிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் இங்கே எப்படி வந்தாள் என்று எண்ணினாள். எல்லாம் கண் இமைக்கும் நேரம்தான். உடனே இளங்கோவன் அருகில் போய் அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் கன்னத்தில் கையை வைத்துப் பார்த்தாள். அவனது கைகளைத் தன்னுடைய கைகளில் எடுத்து வைத்துக் கொண்டாள். கண்ணீர் பொங்க வெள்ளையம்மாளைப் பார்த்தாள்.

''மலர்விழி! உன்னைப் பற்றித்தான் அவன் இரண்டு நாட்களாக ஓயாமல் கேட்டுக் கொண்டே இருந்தான். உன் அதிர்ஷ்டம் அவனை என்ன பாடு படுத்தி விட்டது பார்த்தாயா?'' என்றாள் வெள்ளையம்மாள்.

வெள்ளையம்மாள் இவ்வாறு சொன்னதும் மலர்விழிக்கு மேலும் துக்கமாகி விட்டது. "நான் என்ன செய்வேன், பாட்டி! தயவு செய்து நீங்கள் வேறு என்னை வேதனைப் படுத்தாதீர்கள்" என்று கிழவியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறி விட்டாள்.

"உங்கள் காதல் இப்படிப் பயங்கரமான விபரீதத்தில் கொண்டு வந்துவிடப் போகிறது என்று நானாகக் கற்பனை செய்து கொண்டிருந்தேன். நான் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் பார்த்தவள். பெரியவர்களுக்குத் தெரியாமல், நடைபெறும் காதலில் ஏற்படும் கஷ்டநஷ்டங்களையெல்லாம் நன்றாக உணர்ந்தவள்" என்றாள் வெள்ளையம்மாள்.



"உங்களைப் பற்றி இவா ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லையே. இவர் உங்களுக்கு என்ன உறவு?" என்று கேட்டாள். சட்டென்று "அதிருக்கட்டும். இளங்கோவன் எப்பொழுதாவது கண் விழித்துப் பார்த்தாரா? என்னைப் பற்றி ஏதாவது கேட்டாரா? அவர், 'அவர்......" என்று வார்த்தையை முடிக்காமலே இழுத்தாள் மலர்விழி.

வெள்ளையம்மாள் புன்னகை செய்தாள். இளங்கோவன் மீது அவள் கொண்டிருக்கும் காதலை அறிந்து மகிழ்ந்தாள். "நீ ஒன்றும் கவலைப் படாதே மலர்விழி. அவனுக்கு அபாய மில்லை. திடீர் என்று எதிர்பாராது ஏற்பட்ட அதிர்ச்சிதான் காரணம். இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் கண் விழித்து விடுவான். இப்பொழுது நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். அவ்வளவுதான்" என்றாள்.

"என் இதயத் துடிப்பை, என் மனம் படும் பாட்டை, நான் பட்டுக்கொண் டிருக்கும் வேதனையை நீங்கள் அறிய மாட்டீர்கள், பாட்டி!" என்றாள் மலர்விழி.

மலர்விழியின் பேச்சு நிதானமாகஇருந்தது. குரலிலும் ஊக்கமிருந்தது. இளங்கோவனுக்காக எதையும் செய்யத் துணிந்தவள் என் பதை வெள்ளையம்மாள் அறிந்து கொண் டாள். மலர்விழியின் கண்ணைப் பார்த்தாள். அதில் இளமை நகை புரிந்துகொண்டிருந்தது. ஆனால் முகம் கவலையால் வாடிக் கிடந்தது.

"உன் மனம் படும் பாட்டை நான் அறிய வில்லையே என்று கேட்கிறாய்! நன்றாக உணருகிறேன். சகித்துக் கொண்டிருப்பது கஷ்டம்தான். நீ ஒன்றும் மனம் தளர வேண்டியதில்லை. இளங்கோவன் தனியாக இல்லை; பலர் அவனுக்குத் துணையாக இருக்கிறார்கள். நீயும் தனியாக இல்லை. நான் கூடத் தனியாக இல்லை என்பதும் இப்போது எனக்குத் தெரிந்துவிட்டது. இல்லாவிட்டால் மிகவும் மனக் கஷ்டமாகத்தான் இருக்கும்" என்று சொல்லி விட்டு வெள்ளையம்மாள் அவள் உடல் நிலையைப் பற்றி விசாரித்தாள்.

"சில தினங்களுக்கு முன்னால்தான் இளங்கோவனுடன் பழகினேன். ஆனால் அந்தப் பழக்கத்திலேயே அவர் எனக்குச் சொந்தமாகி விட்டார். அவரோடு வெகு நாட்கள் பழகியது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டு விட்டது. எனக்குக் கூச்சமோ பயமோ ஏற்படவில்லை. மனத்திலே தோன்றியதை யெல்லாம் அவரிடம் சொல்லி விடுவேன். அப்படித்தான் நேற்று அவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். யாரோ பாவி அவரைப் பின்னால் இருந்து தாக்கி விட்டான். அப்படியே நான் மூர்ச்சையாகி விட்டேன். பிறகு நடந்தது ஒன்றும் எனக்குத் தெரியாது. இப்பொழுது என் உடம்புக்கு ஒன்றுமில்லை. நான் நன்றாகவே இருக்கிறேன்" என்றாள் மலர்விழி.

''இப்பொழுதுதான் நான் ஒரு விஷயத்தை நன்றாகப் புரிந்து கொள்கிறேன். ஒருவனை ஒருத்தியையோ, ஒருத்தி ஒருவனையோ முழு மனத்துடன் காதலிக்க ஆரம்பித்து விட்டால் அதுவே அவர்களுக்கு எல்லையற்ற சக்தியை அளித்து விடுகிறது. நம்பிக்கை ஊட்டுகிறது. அதில் ஈடுபட ஆரம்பித்ததும், அந்தக் காதல் தூய்மையானது என்ற எண்ணத்தில் அவர்களுக்கு இன்பம் பிறக்கிறது. அத்தகைய அன்பு, காதல், உலகில் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. அதில்தான் எல்லாமே அடங்கி யிருக்கின்றன. அந்த அன்பு கொள்ளமுடியாத மனித ஜன்மமே கிடையாது'' என்றாள் வெள்ளையம்மாள்.



''பாட்டி! உங்கள் ஆசிர்வாதம்தான் எங்களுக்கு வேண்டும். இளங்கோவனை உங்களுக்கு முன்னமேயே தெரியுமா?'' என்று கேட்டுக்கொண்டே எழுந்து கட்டிலுக்கு அப்புறமாகச் சென்றாள். இளங்கோவனின் இனிய முகத்தை மீண்டும் ஆசையுடன் பார்த்தாள் மலர்விழி.

கன்னங் கரேல் என்று நெளி நெளியாக மின்னிக் கொண்டிருந்த மலர்விழியின் கூந்தல், அலை அலையாக அவள் முதுகுப் புறத்தில் அமிழ்ந்து விழுந்து கிடந்தது. மிகுந்த ஆவலுடன் அவள் இளங்கோவனின் மூடியிருந்த கண்களைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். வெள்ளையம்மாளின் கண்கள் அவளையே பின்பற்றிச் சென்றன. பிறகு கொட்டாவி விட்டுக் கொண்டே சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள். அவள் சிந்தனை தேங்கி நின்று விட்டது. அசதி நிறைந்த ஓர் அமைதியுடன் வெள்ளையம்மாள் தனக்கும் இளங்கோவனுக்கும் உள்ள சம்பந்தத்தை மலர்விழிக்கு விளக்கிச் சொன்னாள்:

*** *** ***

வெள்ளையம்மாள் செல்வந்தர் வீட்டில் தான் பிறந்து வளர்ந்தாள். இவள் குடும்பம் ஒருகாலத்தில் சீரும் சிறப்பும் செல்வாக்கும் பெற்றுத்தான் இருந்தது. இவள் கணவன் மிகவும் தந்திரமுள்ளவன். அன்பும் அருளும் அறியாதவன். அவன் கொடுமையைப் பற்றி இன்றுகூட ஊரில் கதை கதையாகப் பேசுவார்கள். அவன் பெரியமுன்கோபி. மோசடிக்காரன். வாட்டசாட்ட,தோற்றமுடையவன். சொற்களை அழுத்தி உச்சரிப்பான். அவன் குரல் எவ்வளவுக்கு எவ்வளவு தாழ்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு எல்லாரும் நடுங்கிச் சாவார்கள். அவன் மனைவி வெள்ளையம்மாளும் அவனுக்கு எல்லா விதத்திலும் பொருத்தத்துடனே இருந்தவள். வெள்ளையம்மாள் தன் கணவனுக்கு என்றுமே பணிந்ததில்லை. அவள் அவனுடன் வாழ்ந்ததெல்லாம் நாயும் பூனையும் போன்ற சச்சரவு மிகுந்த வாழ்க்கைதான். இருந்தாலும் கணவன் இறந்தபின் வெள்ளையம்மாள் எவ்வளவோ மாறிவிட்டாள். அவள் வாழ்க்கையே மாறிவிட்டது.

அதுபோலவே அவளுடைய செல்வமும் மாறிவிட்டது. இருந்த நிலபுலன்களை எல்லாம் கடன்காரர்கள் கைப்பற்றி விட்டனர். வேறு வழியின்றி அவள் சோற்றுக்கும் துணிக்குமாகச் சொந்தக்காரர்களை நாட வேண்டி வந்தது. கடைசியில் தன் தூரத்து உறவினர்களான இளங்கோவனின் தாய் தந்தையரை நாடி வந்தாள். அவர்களும் வெள்ளையம்மாளைத் தங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே எண்ணி ஆதரித்தனர். வெள்ளையம்மாளுக்கு இளங்கோவன்மீது உயிர். இளங்கோவனுக்கும் வெள்ளையம்மாள் மீது உயிர். 'பாட்டி! பாட்டி!'' என்று அவன் ஓயாமல் வெள்ளையம்மாளைச் சுற்றி வருவான்.

வெள்ளையம்மாளின் அதிர்ஷ்டம் இளங்கோவனின் குடும்பத்தாரையும் பிடித்தது. வெள்ளையம்மாள் அந்த வீட்டில் அடி எடுத்து வைத்த நாளிலிருந்தே அந்தக் குடும்பத்துக்குக் கஷ்ட காலமும் ஆரம்பமாயிற்று. இளங்கோவன் பத்து வயதுப் பையனாக இருக்கும்போது அவன் தாய் காலமானாள். தாய் இறந்த சோகத்தில் தந்தையும் நோயில் விழுந்தார். அவர் நோயைத் தீர்ப்பதற்கு, இருந்த சொத்தை யெல்லாம் விற்று வைத்தியம் பார்த்தாய் விட்டது. சொத்தும் தொலைந்தது. இளங்கோவன் தந்தையும் காலமானார். கடைசியில் வெள்ளையம்மாளும் இளங்கோவனும்தான் மீந்தனர். எல்லாம் போய் விட்டது. சாப்பாட்டுக்கே வழியில்லாமல் போய் விட்டது. வெள்ளையம்மாள் அந்த ஊரைவிட்டே புறப்பட்டு, பூங்குளம் கிராமத்துக்கு வந்தாள் இரண்டு வீட்டில் வேலை செய்து இளங்கோவனுக்குச் சோறு போட்டாள். தானும் சாப்பிட்டாள். இளங்கோவனின் களை பொருந்திய முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு அழுகை அழுகையாக வரும். இளங்கோவனைப் பார்த்து 'கிராமத்திலே பிழைக்க முடியாது. பட்டணத்துக்குப் போ' என்று இளங்கோவனைப் பட்டணத்துக்குப் போகும்படி செய்து விட்டாள்.

இளங்கோவன் பட்டணத்துக்குச் சென்று நாலு காசு சம்பாதிக்க ஆரம்பித்ததும் வெள்ளையம்மாளைச் சென்னைக்கு அழைத்தான். 'அப்பா! நான் இந்தக் கிராமத்திலேயே இருந்து விடுகிறேன். நான் அங்கு வந்தால் உன்னுடைய வாழ்வும் நாசமாகி விடும். நான் போன இடம் ஒன்றும் உருப்படவில்லை' என்று சொல்லி வெள்ளையம்மாள் சென்னைக்கு வர மறுத்து விட்டாள். வெள்ளையம்மாள் இனி யார் வீட்டிலும் வேலை செய்து வயிறு வளர்க்க வேண்டாம் என்று சொல்லி இளங்கோவன் அவளுக்கு மாதா மாதம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். இப்படி ஒன்று, இரண்டு என்று பத்து ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. திடீரென்று ஒரு நாள் இளங்கோவன் பூங்குளம் கிராமத்துக்கு, வெள்ளையம்மாள் வீட்டுக்கு வந்தான்.

இளங்கோவனைப் பார்த்ததும் வெள்ளையம்மாளுக்கு முதலில் அடையாளமே தெரியவில்லை. யாரோ பெரிய மனிதர் வந்திருக்கிறார் என்று எண்ணிக் கையெடுத்துக் கும்பிட்டாள். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தாள். வெள்ளையம்மாளின் திகைப்பைப் புரிந்து கொண்ட இளங்கோவன் தான் யார் என்பதை விளக்கிச் சொன்னான். இதைக் கேட்டதும் வெள்ளையம்மாள் ''அடா! என் செல்வம்! நீயா! நீயா?'' என்று சொல்லி அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். அவன் முகத்துடன் தன் முகத்தைச் சேர்த்துக் கொண்டு கொஞ்சினாள். இளங்கோவனை உச்சி முகந்து முத்தமிட்டு ஆசீர்வதித்தாள்.

அவளுக்கு என்னமோ இளங்கோவன் கிராமத்துக்கு வந்ததே பிடிக்கவில்லை. ஒவ்வொரு நாளும் அவன் வெளியில் போய்விட்டு வரும் வரையில் அவளுக்குத் 'திக்திக்' என்று அடித்துக் கொள்ளும். ஒரு நாள் வெளியில் போய் வந்த இளங்கோவன் மலர்விழியைப் பற்றியும் அவளைத் தான் காதலிப்பதைப் பற்றியும் சொன்னவுடனே வெள்ளையம்மாளுக்குப் பகீர் என்றது. எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டுமே என்று பிரார்த்தித்தாள்.

வழக்கம்போல வீட்டுக்கு வரும் இளங்கோவனை அன்று காணவில்லை. அவனை எதிர்பார்த்து அவள் ஏங்கி நிற்கும் போது இளங்கோவனை யாரோ அடித்து விட்டதாயும், அவன் காதலி மலர்விழியும் அவன்மீது மூர்ச்சித்துக் கிடப்பதாயும் சொன்னார்கள். வெள்ளையம்மாள் 'ஐயோ; பத்து வருஷமாக நல்லா இருந்தானே! இந்தப் பாவியிடம் வந்தவுடனேயே அவனுக்குப் பொல்லாங்கு வந்துவிட்டதே!' என்று அலறி அடித்துக் கொண்டு ஓடினாள். வழியில் பெரியசாமியும் இன்னும் சில ஆட்களும் மலர்விழியையும், இளங்கோவனையும் தூக்கிக் கொண்டு வருவதைப் பார்த்தாள். பெரியசாமியிடம் தனக்கும் இளங்கோவனுக்கும் உள்ள சம்பந்தத்தைச் சொன்னவுடன் பெரியசாமிக்கே இளங்கோவனின் பெற்றோர்களைப் பற்றிக் கேள்விப்பட்டது போல் நினைவுக்கு வந்தது.



பெரியசாமி இளங்கோவனைத் தம்முடைய வீட்டுக்கே கொண்டுபோனார். அவசரம் அவசரமாக கிராமத்துப் பெரிய வைத்தியரை அழைத்துவரச் செய்தார். இளங்கோவன் தலையில் அடிபட்ட இடத்துக்கு மருந்து போட்டுக் கட்டச் செய்தார்.

மலர்விழியின் மூர்ச்சையைத் தெளியவைப்பதற்கு எவ்வளவு முயன்றும் முடியவில்லை. அவள் மூர்ச்சை தெளியவில்லை. வைத்தியர் அவளை அப்படியே சும்மா விட்டுவிடச் சொன்னார். வைத்தியர் விருப்பப்படியே மலர் விழியைப் படுக்க வைத்து விட்டு அவள் அருகிலேயே பெரியசாமி உட்கார்ந்திருந்தார். இளங்கோவன் அருகிலேயே கிழவி வெள்ளையம்மாள் உட்கார்ந்திருந்தாள்.

இந்தக் கதையை யெல்லாம் கிழவி வெள்ளையம்மாள் சொல்லி முடிப்பதற்கும் பெரிய சாமி வாசலிலிருந்து வெள்ளையம்மாளைக் கூப்பிடுவதற்கும் சரியாக இருந்தது. ''இதோ வந்தேன்!'' என்று சொல்லிக் கொண்டே வெள்ளையம்மாள் கைத் தடியுடன் குமரி போல எழுந்து போனாள்.

''வெள்ளையம்மா! கேட்டீங்களா சேதியை. நம்ம பள்ளிக்கூட வாத்தியார் சேது இப்பொழுதுதான் வந்துவிட்டுப் போனார். இளங்கோவனைப் பற்றியும் அவனுடைய பெருமையைப் பற்றியும் வானளாவப் புகழ்ந்தார். இளங்கோவனை அடித்தது யாரா யிருந்தாலும் அவர்களைச் சும்மாவிடப் போவதில்லை என்று சொன்னார். மலர்விழியை இளங்கோவனுக்குத்தான் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லி விட்டுப்போயிருக்கிறார்'' என்றார் பெரியசாமி.

கிழவி ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் வீரப்பன் அங்கு வந்தான். அவனைப் பார்த்ததுமே பெரியசாமிக்குக் கோபம் கோபமாக வந்தது. கூடவே பயமாகவும் இருந்தது. தன்னுடைய கோபத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு, ''வா வீரப்பா!'' என்று வரவேற்புக் கூறினார்.

வீரப்பன் கைகளைக் கட்டிக் கொண்டு பதில் ஒன்றும் பேசாமல் முற்றத்துத் தூணில் சாய்ந்த வண்ணம் கூடத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். கூடத்தில் இளங்கோவன் படுத்துக் கிடந்த கட்டிலின்மீது மலர்விழி உட்கார்ந் திருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு மீசை துடித்தது. ''என்ன இருந்தாலும் ஒரு பெண்ணை இப்படி வளர்க்கக் கூடாது. யாரோ நாடோடிப் பயலிடம் மலர்விழி இவ்வாறு நெருங்கி உட்கார்ந் திருந்தால் நாளைக்கு யார் அவளைக் கல்யாணம் செய்து கொள்ளுவார்கள்?'' என்றான்.

'' தலைக்கு வந்தது ஏதோ தலைப்பாகையோ போயிற்று என்று இருக்கிறேன். இப்பொழுதுதான் நம்ம வாத்தியார் சேது எல்லாவற்றையும் வந்து சொல்லிவிட்டுப் போனார். இளங்கோவன் பிழைத்து எழுந்ததும் மலர்விழியை அவனுக்குத்தான் கொடுக்கப்போகிறேன்'' என்றார் பெரியசாமி. அவருடைய குரல் உறுதியுடன் இருந்தது.

வீரப்பன் பெரியசாமியை ஒருதரம் உருட்டி விழித்துப் பார்த்தான். ஏதோ வாய்க்குள்ளாகவே முனகிக் கொண்டான். ''வாத்தியார் சேது இந்தக் கல்யாணத்தை நடத்தப் போகிறாரா? சரி சரி, பார்க்கலாம்'' என்று

சொல்லிக் கொண்டே சென்றான் வீரப்பன். அவன் நடையிலே ஒரு துடிப்பு இருந்தது.

***　　　***　　　***

திடீரென்று மண்டையில் ஏதோ தாக்கியதும் இளங்கோவனுக்கு முன்னால் பார்வையை அழிக்கும் திறனுள்ள பகைமையான காந்தி தோன்றியது. அவன் காதுகள் இடியால் தாக்குண்டன! பழுக்கக் காய்ச்சிய இரும்பு அவன் கபாலத்தைச் சுட்டது. பூமி விசித்திரமாகவும் விசாலமாகவும் வேகமாகவும் சுழல்வதைப் போன்ற ஒரு உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அவன் கண் முன்னால் காரிருள் சூழ்ந்து விட்டது.

ஏதோ பயங்கர மிருகத்தின் கண். செக்கச் செவேல் என்று சிவந்திருக்கும் அந்த நேத்திரத்தின் நடுவில் உள்ள கருவிழி பளிர் பளிர் என்று மின்னுகிறது. அந்த மிருகம் மெதுவாக வளைந்து நெளிகிறது. அப்பொழுது கரடு முரடாக வளர்ந்திருக்கும் அதன்தோல் கரகரவென்று ஒலித்து அச்சத்தையும் அருவருப்பையும் உண்டாக்குகிறது. இப்பொழுது அது தன்னுடையநீண்ட கொடுக்கை நீட்டி இளங்கோவனைக் கொட்டுகிறது. ஏதோ ஒரு பயங்கரமான ஆயுதத்தைக் கொண்டு தன்னைத் தாக்குவதைப் போல இளங்கோவனுக்கு வேதனை உண்டாகிறது. அவனால் அதைச் சகிக்க முடியவில்லை. துடி துடித்துப் போனான்.

ரொம்ப ரொம்பத் தூரத்துக்கு அப்பால் ஏதோ ஓரிடத்தில் இருந்து ஒரு இளம் பெண் பேசுவதை அவனால் இப்போது கேட்க முடிகிறது.

தன்னை வேதனைப்படுத்திய பயங்கர மிருகம் சட்டென்று மறைந்து விட்டது. ஆனால் வேதனை நீங்கியபாடில்லை. யாரோ தன்னுடைய கைகளைத் தொடுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவன் கண்களைத் திறக்க முயன்றான். இமைகள் பாரமாக அழுத்தியதால் அவற்றைத் திறக்கும் சக்தி இளங்கோவனுக்கு ஏற்படவில்லை. ஏன் திறக்க முடியவில்லை? மீண்டும் அந்தக் கருணை நிறைந்த பெண்ணின் இனிய குரல் இலேசாகக் காதில் விழுகிறது. "இளங்கோவே! இளங்கோவே! கண்ணைத் திறந்து என்னைப் பாருங்கள்."

இளங்கோவன் தன் இமைகளைத் திறக்க முயன்றான். அவனால் முடியவில்லை.

நாக்கு ஒரே வறட்சியாக இருந்தது. உடனே எழுந்திருந்து தண்ணீர் சாப்பிட வேண்டும்போல் தோன்றியது. ஆனால் அவனால் எழுந்திருக்க முடியவில்லை. கை கால்களை நகர்த்த முயன்றான். முடியவில்லை. "மலர்விழி! எனக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும்" என்று அவன் அவளிடம் கூறுவதாக நினைத்தான். ஆனால் அவனுடைய வாயிலிருந்து வார்த்தைகள் வந்தால்தானே!

தூரத்திலிருந்து மீண்டும் அதே மென்மையான பெண் குரல் கேட்கிறது.

"இளங்கோவே! இளங்கோவே! கண்ணைத் திறந்து என்னைப் பாருங்கள்."

இது யாருடைய குரல் என்பதை அவனால் நினைவு படுத்திக் கொள்ள முடியவில்லை. மீண்டும் அவனைக் காரிருள் சூழ்ந்துகொண்டது. இப்பொழுது வெகு விரைவில் அந்தக் காரிருள் நீங்கிவிட்டது. "தாங்க முடியாத தாகமாயிருக்கிறது" என்பதை அவன் நினைவுபடுத்திக் கொண்டான்.

"அவன் உணர்வு பெற்றுக் கொண்டிருக்கிறான்" என்று தெளிவான ஒரு பெண் குரல் சொல்வதை அவன் கேட்டான்.

அந்த மென்மையான குரல், கேட்டுக் கேட்டுப் பழகிய மதுரமான இனிய குரல் இப்பொழுது அவனுக்கு வெகு அருகில் கேட்டது; மிக மிகத் தெளிவாகக் கேட்டது.



"இளங்கோவே! இளங்கோவே! கண்ணைத் திறந்து என்னைப் பாருங்கள்."

"அந்தக் குரல் என்னைத் தான் கேட்கிறதா? நான் பேச முடியாமல் படுத்திருக்கிறேனா? ஆம்; ஆம். யாரோ என் மண்டையில் அடித்து விட்டானே." இளங்கோவன் மூன்றாவது தடவையாகக் கண்களைத் திறக்க முயற்சி செய்தான். இறுதியில் வெற்றியடைந்தான்.

கண்ணைத் திறந்ததும் அவன் கண்டகாட்சி என்ன? அவன் இதயத்தைக் கொள்ளை கொண்ட காதலி; மலர்விழி அவன் எதிரில் சோகமே உருவாக உட்கார்ந்திருந்த காட்சிதான். இளங்கோவன் கண்களைத் திறந்து விட்டதைப் பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது. "ஆ! கண்களைத் திறந்து விட்டீர்களா? என்னைத் தெரிகிறதா?" என்று கேட்டாள். அவன் முகத்துக்கு அருகில் தன் முகத்தை வைத்துக் கொண்டு மலர்விழி இதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டாள்.

"மலர்விழி!" என்று கூப்பிட்டுக்கொண்டே அவள் கைகளைப் பற்றினான் இளங்கோவன். "என்னால் பார்க்க முடிகிறது; கேட்க முடிகிறது" என்றான். "நான் எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டான். தண்ணீர் அருந்தாமலே அவன் தாகம் தணிந்தது.

மலர்விழிக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைச் சொல்லி முடியவில்லை. "அப்பா! அப்பா! இவர் கண்விழித்துப் பார்க்கிறார், அப்பா!" என்று குதூகலத்துடன் கூறினாள். "வெள்ளையம்மா பாட்டி! வெள்ளையம்மா பாட்டி! இங்கே வந்து பாருங்களேன். இளங்கோவன் கண் விழித்துப் பார்க்கிறார்" என்று சிறு குழந்தை போலக் கூச்சலிட்டாள். அவள் இளங்கோவனைப் பார்த்துச் சிரித்தாள். அவள் உதடுகள் புன்னகை செய்து நெளிந்தன. கண்களில் ஒளி சிதறின. கன்னங்களில் குழி

விழுந்தன. இளங்கோவன் வியப்போடு, மகிழ்ச்சியோடு அவளைப் பார்த்தான்.

மலர்விழியின் கூச்சலைக் கேட்டுப் பெரியசாமி, கிழவி வெள்ளையம்மாள் எல்லாரும் இளங்கோவன் படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் ஓடோடியும் வந்தார்கள்.

ஒரு இரவு முழுதும் உணர்விழந்து கிடந்த இளங்கோவன் மீண்டும் உணர்வு பெற்றான். அவன் இளமையான உடல் சாவை விரும்பவில்லை. ஒவ்வொரு கணமும் தன் பலத்தை மீண்டும் பெறுவதை உணர்ந்தான். ஒவ்வொன்றும் புதுமையாகக் காட்சி அளித்தது. அவனது தலை மட்டும் நகரவில்லை. மண்டையில் போட்டிருந்த கட்டு பலமாக இருந்ததால் அவனால் தலையை நகர்த்த முடியவில்லை. ஆனால் மிச்சமுள்ள உடலில் உணர்ச்சி உண்டாகி விட்டது. சீக்கிரத்திலேயே தலையைத் தூக்கிச் சாய்ந்துகொண்டு உட்காருவது சாத்தியமாயிற்று. அவனைப் பார்க்க இப்பொழுது கிராமத்தில் உள்ளவர்கள் எல்லாருமே வந்து விட்டனர். வாத்தியார்; இல்லை எழுத்தாளர் சேதுதான் இளங்கோவனிடம் மிகுந்த மரியாதையுடன் இருந்தான். ஒவ்வொரு நாளும் சேது இளங்கோவனைப் பார்க்க வருவான். சேதுவுக்கு இளங்கோவனின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பதே பெரிய இலக்கியமாக இருந்தது. தினம் தினம் இளங்கோவனிடம் பேசிய விவரங்களை யெல்லாம் தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் நேர்த்தியான கையெழுத்தில் எழுதி வைத்துக் கொண்டான்; படித்து அனுபவித்தான்.



ஒருநாள் அவசரத்தில் சேது தன்னுடைய குறிப்புப் புத்தகத்தை மலர்விழியின் வீட்டில் வைத்துவிட்டுப் போய்விட்டான். மலர்விழி அந்தக் குறிப்புப் புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள். அதில் மலர்விழியின் பெயரும் இளங்கோவன் பெயரும் எழுதியிருப்பதைப் பார்த்ததும் அந்த நோட்டுப் புத்தகத்தில் எழுதியிருந்ததைப் படிக்க விரும்பினாள்.

தைமீ 20உ

இன்றுதான் முதன் முதலில் இளங்கோவனைப் பார்த்தேன். தலையில் அடிபட்ட கட்டுடன் கயிற்றுக் கட்டிலில்தான் படுத்துக் கிடந்தார். அடாடா! அந்த முகத்திலே தான் என்ன களை. கண்ணிலேதான் என்ன ஒளி. ஒரு சமயம் பார்த்தால் முகத்திலே வீரம் துள்ளுகிறது. இன்னொரு சமயம் பார்த்தால் பெண்மைக் களை தவழ்கிறது. கஷ்டங்களையும், துக்கங்களையும், துயரங்களையும் கண்டு அனுபவித்த காம்பீரியம் மிளிர்கிறது. அவரைப் பார்க்க மலர்விழி வந்தாள். அவளை நான் எத்தனையோ முறை பார்த்திருக்கிறேன். ஆனால் இப்பொழுது தான் தலையிலிருந்து கால்வரை அவளைப் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. தங்கமயமாக மின்னிய அவள் உடல் அழகைப் பார்த்ததும் "ஆ!" என்று என்னையறியாமல் சொல்லி விட்டேன். இதைக் கேட்டு அவள் என்னைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தாள். அடாடா! அந்த இளம் முறுவலை எப்படி வர்ணிப்பேன்? இளங்கோவனைப் பார்க்கும் போதெல்லாம் அவள் கண்களில் காதல் குமுறி நிற்கிறது. இது தான் உண்மையான காதலுக்கு லட்சணமோ என்னவோ! இவ்வளவு அழகுள்ள பெண்ணை இந்தக் கிராமத்தில் வைத்துக் கொண்டு அவளைப் பார்க்கக் கொடுத்து வைக்காமல் இருந்து விட்டோமே! அவள் தலை மயிர் தான் எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது! அவள் கண்களில் தோன்றும் ஒளிக்குத்தான் எத்தனை கவர்ச்சி. இந்த முகத்தைப் பார்ப்பதற்கு இளங்கோவன் மண்டையில் சாதாரண அடி மட்டுமா படலாம்; மண்டையையே உடைத்து நொறுக்கி அதை விரும்பியவர்கள் கையில் கொடுத்து விடலாமே! அவளது தோள்களின் அழகைக் கூறுவதா? வனப்பான இடையைக் கூறுவதா? அந்தப் பாதங்கள் தான் எத்தனை எழில் மயமாக இருக்கின்றன? அவள் அழகு வர்ணனை கிடக்கட்டும். இளங்கோவனிடம் மலர்விழி கொஞ்சிப் பேசும் போது தான் எத்தனை அன்பு? மலர்விழியைப் பார்த்ததும் இளங்கோவன் உடல் மகிழ்ச்சியால் பூரித்து விடுகிறது. அவளைப் பரவசத்தோடு பார்த்துச் சிரிக்கிறான். மின்வெட்டைப் போல் பார்வையை அவன் பக்கம் அள்ளி அள்ளி வீசுகிறாள் மலர்விழி.

"உடம்பு எப்படி இருக்கிறது?" என்று பொங்கி வரும் அன்போடு கேட்டாள்.

"வா. வந்து என் பக்கத்தில் உட்கார். என் உடம்புக்கு இப்பொழுது ஒன்றுமில்லை" என்றான் இளங்கோவன். மிக நெருக்கமாக அந்தக் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு ஒருவருக்கொருவர் மாறி மாறிப் பார்த்துக் கொண்டனர்.

இந்தச் சமயத்தில் பெரியசாமி வைத்தியரை அழைத்து வந்து இளங்கோவன் காயங்களுக்குக் கட்டுப் போட்டார். கிழவி வெள்ளையம்மாள் மலர்ந்த முகத்துடன் வந்து இளங்கோவனையும் மலர்விழியையும் அன்போடு விசாரித்து விட்டுப் போனாள்.

தைமீ 21உ

இந்த நாள் எனக்கு ஒரு அற்புதமான திருநாளாகும். என் வாழ்வில் எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்து விட்ட நல்ல நாளாகும். இந்த நம்பிக்கையை ஏற்படுத்திக் கொடுத்த இளங்கோவனை நான் எப்படி மறக்க முடியும்? இவ்வளவு நாள் என்னுள் கட்டுண்டு கிடந்த பல்வேறு சக்திகள் இளங்கோவனின் பேச்சால் சீறிக் கொண்டு வெளிக் கிளம்புகின்றன. எனக்குத் தோழர்களே கிடையாது; கிடைக்க மாட்டார்கள்

என்று எண்ணியிருந்தேன். யாருடைய நட்பும் அன்பும் இல்லாமல் பாலை வனத்திலே அலைய வேண்டும் என்றுதான் நான் எண்ணியிருந்தேன். அந்த எண்ணங்கள் செத்து விட்டன.

தைமீ 22உ காலை ஏழு மணி

இன்று வைத்தியர் இளங்கோவனின் காயத்தைப் பரிசோதித்தார். ஆழமான காயம் தான். தலையின் வலது பக்கத்தில் பெரிய வடுவை ஏற்படுத்தி இருந்தது. அந்தக் காயத்தைப் பார்த்து மலர்விழி துடிதுடித்துப் போய்விட்டாள். ஏன் நானே நடுநடுங்கி விட்டேன். வைத்தியர் இன்னும் சில தினங்களுக்கு இளங்கோவன் படுக்கையிலேயே இருக்கவேண்டும் நடமாடக் கூடாது என்று உத்தரவு போட்டுச் சென்றார்.



தைமீ 25உ மாலை ஐந்துமணி

இளங்கோவன் இன்று சிரித்துச் சிரித்துப் பேசினார். அதிலிருந்து அவருடைய காயம் நன்றாகக் குணமாகி விட்டது என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அவருடைய பேச்சு மிகவும் கண்யமாக இருந்தது. சாதாரணமாக வாலிபர்களிடம் உள்ள விளையாட்டோ விஷமமோ இல்லை. வயதும் அனுபவமும் நிறைந்தவர் மாதிரியே நடந்து கொள்கிறார். மலர்விழியிடம் என்னைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கூறியிருக்க வேண்டும். ஏனென்றால் மலர்விழி இப்போது என்னை முக மலர்ச்சியுடன் வரவேற்கிறாள். அடிக்கடி இளங்கோவன் தன்னம்பிக்கையைப் பற்றியும், உழைப்பின் உயர்வைப் பற்றியும், சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

தைமீ 30உ

இளங்கோவன் நோய் முற்றிலும் குணமாகி விட்டது. வைத்தியர் அவர் தலைக் கட்டை அவிழ்த்து விட்டார். அடிபட்ட இடத்தில் மட்டும் ஒரு வடு இருந்தது. ஆமாம்! அழியாத காதல் வடு அது. அவரை இனி மேல் அவர் இஷ்டப்போல் இருக்கலாம் என்று கூறி விட்டார். இதைக்கேட்ட மலர்விழி மகிழ்ச்சியால் துள்ளினாள். பெரியசாமியும் வெள்ளையம்மாளும் விரைவில் மலர்விழிக்கும் இளங்கோவனுக்கும் திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று சொல்லிக் கொண்டனர். நானும் அதை விரைவில் முடிப்பதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். பெரியசாமிக்கு மட்டும் உள்ளூற ஒரு பயம் இருந்து கொண்டிருக்கிறது.

*** *** ***

சேதுவின் நாட்குறிப்பில் இருந்த இந்த விஷயங்களைப் படித்ததும் மலர்விழிக்கு ஒரு புறம் ஆச்சரியமும் ஒருபுறம் திகைப்பும் ஏற்பட்டன. இளங்கோவனை முன்னைவிட இன்னும் அதிகமாக நேசிக்க ஆரம்பித்துவிட்டாள். சேதுவைத் தன்னுடைய சொந்த சகோதரன்போலப்பாவிக்கத் தொடங்கிவிட்டாள். இளங்கோவனுக்கும் சேதுவிடம் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டது. சேதுவின் முகத்தில் இப்பொழுது ஒரு புது ஒளியே வீசத் தொடங்கி விட்டது. வாழ்வை வெறுத்துப் பேசிக் கொண்டிருந்தவன், சாவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தவன், 'இந்த உலகம் சத்தியம். நாம் வாழத்தான் பிறந்திருக்கிறோம்' என்று உணர்ச்சியோடு பேச ஆரம்பித்து விட்டான்.

அன்று இளங்கோவனிடம் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, கொள்ளிடத்துப் பக்கம் உலாவச் சென்றான் சேது. நாணற் புதருக்கு அருகில் அமர்ந்து மலர்விழியைப் பற்றியும் இளங்கோவனைப்பற்றியுமே நீண்ட நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தான். நன்றாக இருட்டி விட்டது. 'சரி போகலாம்' என்று எண்ணி எழுந்திருந்தபோது நாணற் புதருக்குள்ளிருந்து ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்டன. இருட்டிய பிறகு அவர்கள் அங்கு வந்திருக்க வேண்டும். பேச்சில் 'மலர்விழி'யின் பெயர் அடிபடவே சேது காது கொடுத்துக் கவனித்தான். குரலிலிருந்து பேசியவர்கள் வீரப்பனின் ஆட்கள்தான் என்று தெரிந்தது.

'இளங்கோவன் இப்போது வெளியில் கிளம்புவதில்லை. மலர்விழியும் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. அவர்கள் இருவரும் அவர்கள் வீட்டிலேயே ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசிக் கொள்ளும்படி செய்து விட்டோம். அவனுக்கு வாத்தியார் சேது வேறு பக்க பலமாக இருக்கிறார். அவர்கள் கல்யாணத்தை முடித்துவைக்கப்போகிறாராம். சேதுவை முதலில் ஒழித்துக் கட்ட வேண்டும். மலர்விழியைத் தூக்கிக் கொண்டு போய்விட வேண்டும்.' இவ்வாறு அவர்கள் பேசியதைக் கேட்கக் கேட்கச் சேதுவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. "அட பாவிகளா!" என்று வாய்விட்டே கத்தி விட்டான்.

"யார் அங்கே?" என்று குரல் கேட்டது. சேது பதில் சொல்லவில்லை.

"யார் அங்கே? நகர்ந்தால் காலை முறித்து விடுவோம்" என்று கத்திக்கொண்டே மூன்று பேர்கள் சேதுவைச் சூழ்ந்து கொண்டார்கள். வீரப்பன் தன் இடையிலிருந்த பிச்சுவாவைக் கையில் எடுத்துக் கொண்டான். "வாத்தியாரே! இதைப் பாருங்கள். இது பல உயிரைக் குடித்திருக்கிறது. தெரியுமா?" என்றான்.

அந்த இருட்டில் வீரப்பன் பேச்சைக் கேட்டதும் அவன் கையிலிருந்த உயிர் குடிக்கும் பிச்சுவாவைப் பார்த்ததும் சேதுவுக்கு நடுக்கம் உண்டாகி விட்டது. கைகால்கள் வெடவெடத்தன. "நாங்கள் பேசியது உன் காதில் விழுந்திருக்க வேண்டும். இதைப்பற்றி வெளியில் தெரிந்தால் உன் தலையை வெட்டிக் கொள்ளிடத்து மணலில் புதைத்து விடுவேன். ஜாக்கிரதை!" என்றான் வீரப்பன்.

சேது அசையாமல் நின்று கொண்டிருந்தான். எங்கும் இருள் சூழ்ந்திருந்ததால் அவன் முகத்தில் ததும்பிய உணர்ச்சிகளை வீரப்பனால் பார்க்க முடியவில்லை.

"சுற்றி நில்லாதே போ! — பகையே!
துள்ளி வருகுது வேல்!"

என்று கம்பீரமான குரலில் யாரோ பாடுவது நாணற்புல் வானடக் காற்றிலே 'அபயக்குரலாக' மிதந்து வந்தது. (தொடரும்)

பாங்க் ஆப் மதுரை
லிமிடெட்
தோற்றம் : 1943

மதுரை

கிளைகள் :

கோயமுத்தூர், சேலம், புதுக்கோட்டை ராயவரம், கீரனூர், கண்டனூர் அறந்தாங்கி, பொன்னமராவதி தேவகோட்டை, திருப்பத்தூர் (வட ஆற்காடு மாவட்டம்) தர்மபுரி ஆத்தூர், எடப்பாடி (சேலம் மாவட்டம்)

இயக்குநர் :

ஸ்ரீ கருமுத்து தியாகராசன் — தலைவர்
ஸ்ரீ வ. ராம. வள்ளியப்ப செட்டியார்
ஸ்ரீ நா. அ. அண்ணாமலை செட்டியார்
ஸ்ரீ உ. ராம. மெ. சுப. சேவு. அ. அண்ணாமலை செட்டியார்

எல்லாவிதமான வங்கி அலுவல்களும் கவனிக்கப்படும்

பி. எஸ். விஸ்வநாதன்
காரியதரிசி



சகிக்க முடியாத உபாதை: தூக்கமும் கிடையாது: சுகமான நித்திரைக்கும் உபாதை நிவர்த்திக்கும்

எஃப்ரிலைம்
EPHRILIME

நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.

U.D

யூனியன் டிரக் கம்பெனி லிட்.
மதராஸ் டிப்போ :
2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1

குறைந்த விலையில் சிறந்த பதிப்புகள்!

மகாகவி காளிதாசனின்
சாகுந்தலம் மேகதூதன்
தமிழாக்கம் :
க. சந்தானம், எம்.ஏ., பி.எல்.
(முன்னாள் லெப்டினெண்ட் கவர்னர்)
200 பக்கங்கள் - மூவர்ண அட்டை
விலை ரூ. 1
22-3-58ல் வெளிவருகிறது!

★

கம்பராமாயண வசனம்
(பால காண்டம் - அயோத்யா காண்டம்)
பதிப்பாசிரியர் :
மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை
மூவர்ண அட்டை - விலை ரூ. 1-50
ஸ்ரீ ராம நவமியன்று வெளிவருகிறது!

★

விற்பனையாகிறது!
பேராசிரியர் ஆ. முத்துசிவன், எம்.ஏ.
எழுதிய
கலிங்கத்துப்பரணி
விளக்கம்
300 பக்கங்கள் - விலை ரூ. 1-50

★

ஜவஹர்லால் நேரு
சுய சரிதை
இரண்டு பாகங்கள்
ஒவ்வொரு பாகமும் — விலை ரூ. 2

★

புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.
135, பவழக்காரத் தெரு, சென்னை-1
சென்னை நகர விற்பனையாளர்கள் :
நேரு நியூஸ் மார்ட், மயிலாப்பூர், சென்னை 4



ஹ.. ஹ.. ஹா. ஐயோ, என்னால் சிரிக்கவே முடியவில்லையே.. ஓ.. ஹோ.. ஹோ.. அப்பா ஹ.. ஹா.. ஹா!
விசித்திரச் சலங்கை
-கதை- வாண்டு மாமா
படம்- பாபு
14
நீ கொடுத்த மூலிகை மகிமையே மகிமை! சிரித்துச் சிரித்து அவன் தெம்பிழந்து கீழே விழுந்து விட்டான். அவனைக் கட்டிப் போட இதுவே தக்க தருணம்.


அதோ... அதோ! தேவதத்தன் ராட்சதன் தாமகேதுவைத் தோற் கழுத்துக் கட்டி இழுத்துக் கொண்டு வருகிறான்.. அதோ பாருங்கள்.....
தாளங்கேன் அந்த மந்திர இறகின் ஸ்பரிசத்தால் அடக்க முடியாத சிரிப்பு உண்டாகி மயங்கி விழுந்த தாமகேதுவைக் கயிற்றால் பிணைத்துக் கிராமத்துக்கு இழுத்து வந்தான் தேவதத்தன். தாமகேது ஒரு தடவை கயிற்றினால் கட்டப் பட்டால் அவன் பலமெல்லாம் போய் விடும். அப்படி ஒரு சாபம் அவனுக்கு... தேவதத்தனின் வெற்றியை அறிந்த பொறாமைக்கார சகோதரர்கள் 'கடவுளே அவன் பக்கம் இருக்கிறார்' என்று பயந்து கிராமத்தை விட்டு ஓடிப்போனார்கள்.
கிராமமக்கள் வெற்றி வீரனை-ராட்சதனைக் கட்டி இழுத்து வந்த தேவதத்தனுக்கு விருந்து வைத்துக் கொண்டாடினார்கள்.
(தொடரும்)



அன்று பள்ளிக்கூடத்து விளையாட்டு மைதானம் ஆலவட்டங்களாலும் இளி வட்டங்களாலும், அழகழகான தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கூட்டம் 'ஜே ஜே' என்றிருந்தது. அந்த மைதானத்தில் உள்ள குறிக் கற்கள் எல்லாம் வெள்ளையடிக்கப்பட்டுப் பளிச்சென்று காட்சி அளித்தன. துப்பு-தூசி இல்லாமல் மைதானம் வெகு சுத்தமாகக் காட்சி அளித்தது.

காரணம், அன்று ஸ்போர்ட்ஸ் தினம். கோடை விடுமுறை நெருங்குகிற தென்றால் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இந்தக் காட்சி காணப்படுவது இயல்புதானே? விளையாட்டுப் பந்தயங்களும் நடைபெறுவது வழக்கம்தானே?

ஸ்போர்ட்ஸ் மாஸ்டர் அதற்கான ஏற்பாடுகளை யெல்லாம் கனகச்சிதமாகச் செய்து வைத்திருந்தார்.

ஓட்டப் பந்தயம், கயிறு இழுத்தல், வாலிபால், பாட்மிண்டன், மெது சைக்கிள், வேக சைக்கிள், தவளைப் பாய்ச்சல், இரண்டு பையன்களின் மூன்றுகால் ஓட்டப் பந்தயம், சாக்குக்குள் கால்களை விட்டுக் கொண்டு தாவித் தாவி ஓடுவது, கண்களைக் கட்டிச் சட்டி உடைப்பது-இன்னும் என்ன என்ன வேடிக்கையான விநோதப் பந்தயங்கள் உண்டோ, அவ்வளவும் அந்த மைதானத்தில்தான் நடக்க இருந்தன.

ஸ்போர்ட்ஸ் மாஸ்டருக்குத் தமது பள்ளிப் பையன்கள் விளையாட்டுக்களில் மட்டும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால் போதாது. அறிவாற்றல் மிக்கவர்களாகவும் நாகரிகப் பிரஜைகளாக விளங்குவதற்கான பண்புகள் நிரம்பப் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்று ஆசை. அதற்காக அவர் தேக பலத்தைப் பரிசோதிக்கும் போட்டிகள் மட்டும் அல்ல; அறிவை விருத்தி செய்து, நாகரிகப் பண்பை நலமுறக் கற்றுத் தரும் பல போட்டிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்.

போட்டிப் பந்தயங்கள் ஆரம்பிப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்பே மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில்கூடிவிட்டார்கள். அவ்வளவு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த மைதானத்திலே, அவர்கள் கண்ட காட்சி, அவர்களது ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது.

'திருஷ்டிப் பரிகாரம் போல் எதற்காக இதைக் கொண்டு வந்து இந்த மைதானத்தில் போட்டிருக்கிறார்கள்? விளையாட்டு ஜோரில் கையில் காலில் மோதிக் கொண்டு காயப்படுத்திக் கொள்வதற்கா? விளையாட்டு ஆர்வத்தில் கண்-மண்கூடத் தெரியாதே! அதோடு இந்த ஒரு மைதானத்தில்தானே எல்லா விளையாட்டுகளும் நடைபெற்றாகவேண்டும்?'

பையன்கள் அந்த இடத்தில் சென்று கூட்டம் போடத் தொடங்கி விட்டனர். அது மட்டுமா? தங்களது கசமச மொழியில் கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றத் தொடங்கி விட்டனர்.

அங்கே அவர்கள் கண்ட பொருள் வேறு ஒன்றும் இல்லை. ஒரு பெரும் பாறாங்கல் தான். அதை ஓரிருவரால் நகர்த்தி அப்புறப் படுத்தவும் முடியாது. அப்புறப் படுத்த முடிந்தாலும் அதற்கு மனம் வேண்டாமா?

''ஓட்டப் பந்தயத்தில் ஓடி வரும்பொழுது, நாம் ஜயிக்க வேண்டும் என்று ஒரே எண்ணம் இருக்குமேயொழிய, இந்தக் கல்லைப் பார்த்து ஓட வேண்டுமென்று தோன்றுமாடா? காலில் இடறிக் கொண்டு குப்புற விழுந்து அடிபட்டுக் காயம் பட்டால்......'' என்றான் ஒரு பையன். அவன் ஓட்டப் பந்தயத்துக்குத் தன் பெயரைக் கொடுத்திருந்தான்.

''ஓட்டப் பந்தயமாவது பரவாயில்லையடா, ஒதுங்கிப் போய் ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். இந்தச் சைக்கிள் பந்தயம் இருக்கிறதே, இதுதாண்டா தொந்தரவு கொடுப்பது. மெதுவாக வரும் முயற்சியில் ஹாண்டில்பாரில் கண் இருக்குமேயொழிய இந்தக் கல்லில் இராது. எனவே, இதில் வந்து மோதிக்கொண்டு சைக்கிளுக்குச் சைக்கிளும் போய், பரிசுக்குப் பரிசும் போய்...''

இப்படி ஆரம்பித்தவன் யாராயிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? சைக்கிள் பந்தயத்தில் கலந்து கொண்ட இன்னொரு பையன்தான்.

''சைக்கிளைக் கூடப் பார்த்து ஜாக்கிரதையாக ஓட்டி விடலாம். இந்தச் சாக்குக்குள் காலைவிட்டுக் கொண்டு குதித்துக் குதித்து ஓடுவது இருக்கிறதே, அது ரொம்ப ரொம்பக் கஷ்டம். முன்னாடியே முப்பது தடவைகள் நமஸ்காரம் செய்து விடுவோம். இந்தக் கல்லுக்கு அருகில் வந்ததும், அந்தக் கைங்கரியத்தைச் செய்துவைத்தோமானால் மூக்கு



மூகரை உடைபட்டு......'' சாக்குப் போட்டியில் கலந்துகொண்டிருந்த சங்கரன் தன் பிரமத்தை எடுத்துரைத்தான்.

''அது ஒன்றும் பிரமாதமில்லையடா! ஒரு சாக்குக்கு ஒருவன் வீதம்தானே போகப் போகிறோம். இந்த மூன்று கால் ஓட்டம் இருக்கிறதே, இதற்கு இரண்டு பையன்கள் ஒன்றாக இணைந்து ஓடவேண்டும். தப்பித் தவறி அந்தக் கல்லின் அருகில் ஷெல்லும் பொழுது விழுந்து வைத்தால் ஒருவருக்கு இருவராகக் காயம் பட்டுக் கைகள் முறிந்து கிடக்க வேண்டும்!'' இரட்டைக் குரல் பேசிற்று ஏக காலத்தில். மூன்று கால் போட்டிக்கு அந்த இரண்டு பேரும் தான் ஜோடி என்பதை அவை சொல்லாமலே சொல்லி விளங்க வைத்து விட்டன.

''இந்த ஆட்டங்கள் எல்லாம்கூடப் பரவாயில்லை. ஏனென்றால், எதிரில் இருக்கும் பொருளைப் பார்த்து நாம் நடக்கலாம், ஓடலாம். ஆனால் இந்தக் கயிறு இழுத்தல் பந்தயம் இருக்கிறதே, இது படுமோசம். இந்தக் கட்சிக்கு ஏழு பேர், அந்தக் கட்சிக்கு ஏழு பேர் என்று போட்டி போட்டுக் கொண்டு இழுப்பார்கள். தோற்கும் கட்சி நடுக் கோட்டைத் தாண்டிவிட்டால் கயிற்றை நழுவ விட்டுவிடும். ஜயிக்கும் கட்சி ஆசாமிகள் படபடவென்று பின்னால் சாய்வார்கள். அப்பொழுது கல்லில் விழுந்தால், எத்தனை பேர் ரணகாயத்துக்கு உள்ளாக நேரிடும்?'' என்றான் ஒருவன். அவன் கட்சிக்கு ஆள் அதிகம் சேர்ந்து விட்டது.

''நீங்கள் சொல்வது சரி. இந்தக் கயிறு இழுக்கும் பந்தயத்தைக் கல்லுக்கு அருகில் இல்லாமல் கொஞ்சம் அங்கு இங்கு என்று தள்ளி வைத்துக் கொண்டு விடலாம். மற்றப் பந்தயங்கள் போல் இல்லை இது! உதாரணமாக எலுமிச்சம் பழ ரேஸ் இருக்கிறதே...'' என்று ஆரம்பித்தான் எலுமிச்சம் பழம் போல் இருந்த ஒருவன்.

''இதெல்லாம் கூடப் பெரிய விஷயம் இல்லை, அப்பா! கண்களைத் திறந்து கொண்டே ஆடும் ஆட்டங்கள் இவை. கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்தால் தப்பி விடலாம். ஆனால் கண்களை இறுகக் கட்டி விட்டுக் கரகரவென்று பிடித்துப் பம்பரமாகச் சுழற்றி மயக்கத்தை உண்டு பண்ணி, கையிலே கம்பைக் கொடுத்துச் சட்டியை உடைத்து விட்டு வா என்று சொன்னால்......ஆள்பாடு அரோகராதான்! என்ன நான் சொல்வது......?''

சுழற்றிப் பேசினான், கண்களைக் கட்டிக் கொண்டு சட்டியை உடைக்கும் போட்டிக்குப் பெயர் கொடுத்திருந்த சாரநாதன்.

அவரவர் சிரமத்தைச் சொல்லிக் கொண்டே வந்த அவர்களது ஆத்திரம் ஸ்போர்ட்ஸ் மாஸ்டர் மீது திரும்பியது.

''ஸ்போர்ட்ஸுக்கென்று சந்தா வாங்கவில்லை? ஸ்போர்ட்ஸ் மாஸ்டர் கவனிக்க வேண்டிய வேலைதானே இது? கல்லையெல்லாம் எடுத்து நகர்த்திப் போட்டு, விளையாடுவதற்குச் சௌகரியமாக இடத்தை வைத்துக் கொள்ள வேண்டாம்? துளிக்கூடப் பொறுப்பில்லாத இந்த ஸ்போர்ட்ஸ் மாஸ்டர் இருந்து என்னடா பிரயோசனம்? கல்லை நகர்த்தினால் ஒழிய ஸ்போர்ட்ஸில் சேர மாட்டோம் என்று நாம் சத்தியாக்கிரஹம் செய்தால் என்னடா?''

காரசாரமான இந்தப் பேச்சு தீர்மானமாக நிறைவேறவும், ஸ்போர்ட்ஸ் மாஸ்டரின் ஊதல் சப்தம் கேட்கவும் சரியாக இருந்தது. எல்லாப் பையன்களும் அச்சத்துடன் அவரைத் திரும்பிப் பார்த்தனர்.

அப்பொழுது தூரத்தில் இரைக்க இரைக்க மூச்சு வாங்கிக் கொண்டு சோனி ஓடிவந்து கொண்டிருந்தான். பஸ் கிடைத்து அவன் பள்ளியை அடைவதற்கு அத்தனை நேரமாகிவிட்டது.

பையன்கள் கும்பலை முண்டியடித்துக் கொண்டு முன்னேறிய சோனி பாறாங் கல்லைப் பார்த்தான். விளையாட்டுக்குக் குந்தகமாக அது இடையூறு அளித்துக் கொண்டிருப்பதையும் உணர்ந்தான். ஒரே பாய்ச்சலில் ஓடி அதைப் புரட்ட முயன்றான்.

சோனியையும், பாறாங்கல்லைப் புரட்ட அவன் ஏற்றுக் கொண்டுள்ள பெரு முயற்சியையும் கண்டு மாணவர் கும்பல் கொல்லென்று நகைத்தது.

புன் முறுவலுடன் அவன் செயலைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்போர்ட்ஸ் மாஸ்டர் 'ஸைலன்ஸ்' என்று உரக்கக் கூவி விட்டுச் சோனிக்கு உதவியாகத் தாமும் கல்லை நகர்த்த முன் வந்தார். அருகில் இருந்த இரண்டு பியூன்கள் வேறு ஓடி வந்து கை கொடுத்து உதவினர். பாறாங்கல் நகர்ந்தது. அதன் கீழே ஒரு அதிசயம் புதைந்து கிடந்தது. அந்த அதிசயமும் பிரமாதமான பொருள் இல்லை; வெறும் காகிதம்தான். அதில் எழுதியிருந்த விஷயம்



தான் அதிசயத்திலும் அதிசயமாக மற்ற மாணவர்களைத் தலைகுனிந்து நிற்கும்படி செய்து விட்டது.


"மக்களுக்கு இடையூறாக இருப்பவற்றைக் களைவது பண்பாட்டுக்கு அறிகுறி. நடுத் தெருவிலே கிடக்கும் கல்லையும் முள்ளையும் தூக்கித் தூர எறிந்து மக்களுக்கு நலம் செய்வது பெரும் பண்பு; நல்ல காரியம். இது போல் இன்னும் எத்தனை எத்தனையோ நற்பணிகள் இருக்கின்றன. அத்தகைய நல்ல காரியங்களுக்கு ஆக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காக நமது பள்ளி ஸ்போர்ட்ஸ் மாஸ்டர் ஒரு புதிய பரிசை ஏற்படுத்த விரும்பினார். உங்கள் விளையாட்டுக்கே குந்தகமாக இருக்குமாறு இந்தக் கல்லை வைத்தவரும் அவரே. உங்களுக்கு இடையூறாக இருக்கும் இதை நீங்களாகவே களைய முற்படுகிறீர்களா என்பதைப் பார்க்கவே இந்தச் சோதனையை வைத்தார். இந்தச் சோதனையில் வெற்றி கண்ட இப்பள்ளி மாணவனுக்கு, 'முதல் மாணவன்' என்னும் பட்டமும் அத்தாட்சிப் பத்திரமும் வழங்குவதுடன், தங்கப் பதக்கம் ஒன்றையும் பரிசாக அளிக்கவிருக்கிறோம். இந்தப் பரிசைத் தட்டிக்கொண்டு போகும் பாக்கியசாலி யாரோ, பொறுத்திருந்து பார்ப்போம்!"

ஸ்போர்ட்ஸ் மாஸ்டரின் இந்தப் புதிய சோதனைப் பந்தயத்தில் சோனி வெற்றி பெற்றவனாகத் தேர்ந்தெடுக்கப் படவே, மற்ற மாணவர்களின் முகம் சுண்டத்தான் செய்தது. இருந்தாலும் நம் பள்ளி மாணவர்களில் ஒருவனாவது 'முதல் மாணவன்', என்ற பட்டத்தைப் பெறும் தகுதியுள்ளவனாகக் கிடைத்தானே என்பதை நினைத்த பொழுது அவர்களுக்குப் பெருமிதமும் உண்டாயிற்று. அப்புறம் 'ஜாம் ஜாம்' என்று பந்தயங்களும் துவங்கின.

அன்று மாலை பரிசு வழங்கும் விழா நடைபெற்றபொழுது, ஒரு மாணவன் தலைவரின் அனுமதி பெற்று மேடையேறி, "நண்பர்களே! மாணவர்களின் மானத்தைக் காப்பாற்றிய சோனிக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்; நமது மாணவ சமூகத்துக்குப் பெருமை தேடித் தந்த அவருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் முறையில் நாம் சேர்த்த சந்தாவில் இந்த வெள்ளித் தட்டை வழங்கிப் பெருமை கொள்கிறோம்!" என்று கூறிப் பளபளவென்று மின்னிய வெள்ளித் தட்டு ஒன்றைச் சோனிக்குப் பரிசாக அளித்தான்.

ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் ஏககாலத்தில் மகிழ்ச்சியுடன் கை தட்டவே, வானம் அதிர மைதானம் கலகலத்தது.

நானாக இருந்தால்...!



டாக்டராக நானிருந்தால்
நாடி பிடித்துப் பார்த்திடுவேன்.
'நாக்கை நீட்டு' என்றிடுவேன்.
நன்றாய் ஊசி போட்டிடுவேன்.

வாத்தியாராய் நானிருந்தால்
வகுப்பில் பாடம் நடத்திடுவேன்.
பார்த்துப் பரீட்சை எழுதுகிற
பையனுக்குச் சுழித்திடுவேன்.

வக்கீலாக நானிருந்தால்
வழக்கை எடுத்து நடத்திடுவேன்.
'டக்டக்' கென்று பொய்யர்களை
நாலே கேள்வியில் மடக்கிடுவேன்.

நடிகனாக நானிருந்தால்
நாடக மேடையில் தோன்றிடுவேன்.
'அடடா, அற்புதம்!' என்றேதான்
அனைவரும் கூறச் செய்திடுவேன்.

சிப்பாயாக நானிருந்தால்
துப்பாக்கியுடன் இருந்திடுவேன்.
எப்போதும்தான் அஞ்சாமல்,
எதிரிகளை ஓடச் செய்திடுவேன்.

போலீஸாக நானிருந்தால்
பொல்லாத் திருடனைப் பிடித்திடுவேன்.
காவல் சிறைக்குள் தள்ளிடுவேன்.
கம்பி எண்ணச் செய்திடுவேன்!

அழ. வள்ளியப்பா


2
வழிகளால் நரையை
ஒழிக்கலாம்...
'சிரசாஸனம்' ஒழுங்காகச் செய்துவந்தால், நரைமயிர் நாளடைவில் கருப்பாக மாறும் எனச் சொல்லப் படுகிறது. ஆனல் அதைப் பழக, ஓய்வு நேரமும், மன நிம்மதியும் அவசியம்.
தற்காலத்தில் "லோமா"வைத் தவருமல் உபயோகிப்பதுவே, நரையை ஒழிக்க நிச்சயமானதும், பத்திரமானதும், சுலபமானதுமான வழியாகும்.
"லோமா" இப்பொழுது திருட இயலாத மூடியுள்ள பிரத்தியேகமாகத் தயாரித்த பாட்டிலில் வழங்கப்படுகிறது.
லோமா
சோல் ஏஜெண்டுகள்: எம். எம். கம்பாட்வாலா, ஆமதாபாத்-1
ஏஜெண்டுகள்: வி. நரோட்டம் அண்ட் கோ., பம்பாய்-2 போன்: 30575
சென்னை ஏஜண்டுகள்: ஜே பாலபாய் அண்டு கம்பெனி 260, எஸ்பிளனேட், மதராஸ் 1
இலங்கை ஏஜண்டுகள்: செர்குல் கதிர் & கோ., 41&43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11



ஓவியமும் காவியமும்

நான் ஸ்டுடியோவை அடைந்த பொழுது உமாகாந்தன் தனது சிறிய அறையில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய உதடுகளில் அணைந்துபோன சிகரெட் ஒன்று காட்சியளித்தது. கையிலே ஒரு தினத்தாளைப் பிடித்திருந்தான். அவனைப் பார்த்ததுமே அவனது கவனம் வேறு எங்கோ இருக்கிறது என்று எனக்குப் புலனாகியது. உமாகாந்தனின் பார்வை தினத்தாளில் புதைந்திருந்தபோதிலும் அதிலே உள்ள பெரிய பெரிய தலைப்புகளாவது அவன் மூளைக்கு எட்டியிருக்குமா என்பதே சந்தேகமாக இருந்தது. அறையினுள் நுழைந்த நான் சிறிது நேரம் அவனையே பார்த்தவாறு நின்றேன். அப்பொழுதும்கூட அவன் இருந்த நிலையில் ஒரு மாறுதலும் ஏற்படக் காணோம்.

''யோசனை பலமாக இருக்கிறதே!'' என்று கேட்டவாறே அவனை அணுகினேன்.

''யோசனையா?'' என்று திடுக்கிட்டுத் திரும்பினான் அவன்.

''ஆமாம்! நீ இல்லையென்று சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்.''

''நீ எழுதும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறாயே! அதனால் மக்களின் மனத்தைப் படிக்கும் வித்தைகூட உனக்கு வந்து விட்டதாக எண்ணமோ?''

''இல்லையப்பா! அவ்வளவு தூரம் போக வேண்டிய அவசியமில்லை. உன்னுடைய வாயிலே சிகரெட் இருக்கிறது. ஆனால் அணைந்து இருக்கிறது. இது உனக்குத் தெரியாது. கையிலே தினத்தாள் இருக்கிறது. ஆனால் இன்றைய தினத்தாளா? நேற்றைய தினத்தாளா? நான்கு மாதங்களுக்கு முந்தியதா? இந்த விவரம்கூடக் கட்டாயம் உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.''

''நிஜமாக...என்றைய பேப்பர் இது?''

சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் எறிந்து விட்டு ஆச்சரியத்துடன் கேட்டான். பத்திரிகையின் முதற் பக்கத்தில் உள்ள தேதியை ஒரு முறை பார்த்து விட்டுத் தூக்கி எறிந்துவிட்டான்.

மராட்டிக் கதை:
ஸ்ரீகுஸுமாக்ரஜ்

தமிழாக்கம்:
ரா. வீ.

''நான்கு மாதங்களுக்கு முந்திய பத்திரிகை தானே?'' பக்கத்திலுள்ள ஆசனத்தில் அமர்ந்தவாறே கேட்டேன்.

''இல்லே, இல்லே. அவ்வளவு பழையதல்ல.''

''இருக்கலாம். ஆனால் என்னுடைய ஞாபகம் சரியாகி விட்டதல்லவா?''

''ஆமாம்!'' என்று உமாகாந்தன் மனமின்றி ஏதோ பதில் சொன்னான்.

''ஆமாம்! என்ன யோசித்துக் கொண்டிருந்தாய், சொல்!'' என்று கேட்டேன்.

''அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லே. இருந்தாலும் என்னை ஒரு பெரிய கவலை வாட்டிக் கொண்டிருக்கிறது'' என்றான்.

''கவலையா?''—வியந்தேன் நான்.

பேச்சு நடந்த தோரணை அபூர்வமாய் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. கவலைப்படுபவர்கள், படாதவர்கள் என்று மனிதர்களை இரு வகுப்பாகப் பிரித்தால் உமாகாந்தனுடைய பெயர் எப்பொழுதும் இரண்டாவது வகுப்பிலேயேதான் இருக்கும். ஆனந்தமாகச் சிரித்து, பேசிப் பொழுது போக்கும் ஒரு 'சைத்ரிகன்' உமாகாந்தன். அவனுடைய தொழில் நன்றாக நடந்து கொண்டிருந்தது. உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த கலைஞர்களின் குழுவிலே அவனுக்கு மரியாதையும், மதிப்பும் அமோகமாகக் கிட்டி வந்தன. ஒன்றிக் கட்டையாக இருந்ததினால் குடும்பப் பொறுப்புகளோ, கவலைகளோ அவன் தலையில் சுமந்ததில்லை. உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் அவன் சைத்ரீகக் கண்களோடுதான் பார்த்து வந்தான். அதனால் எங்கும், தான் காணும் பொருள்களின் ஆழத்தை அவனால் சரிவரக் காண முடிவதில்லை. எனவே சாதாரண மனிதனுக்கு ஏற்படும் உணர்வுக் களைப்புக்கும் அப்பாற்பட்டவனாக அவன் விளங்கினான். துயரம், சோகம், கவலை போன்ற சொற்கள் அமங்களமானவை என்பது அவன் எண்ணம். கலைஞன் தன் வாழ்க்கையிலே இவற்றுக்கெல்லாம் சிறிதும் இடம் கொடாமல் விலக்கியே வைக்க வேண்டுமென்பதும் அவன் அபிப்பிராயம். அதனால்தான் அவன் கவலை என்று சொன்னபொழுது எனக்கு மிகுந்த ஆச்சரியமாகப் போய் விட்டது.

''என்ன கவலை உனக்கு?''—அவனை ஊடுருவிப் பார்த்தவாறே கேட்டேன்.

''அதுவா? ஒரு பெண்ணைப் பற்றியது'' என்று அவன் உடனே பதில் சொன்னான்.

மறுபடியும் நான் திடுக்கிட்டேன். உமாகாந்தன் ஒரு பெண்ணின் பிரேமையில் சிக்குவது என்பதும் அற்புதமான விஷயம். பெண்ணைப் பற்றி அவனது மன எழுச்சிகள் உதார நோக்கம் பெற்றவை அல்ல. அவனுக்கு அறிமுகமான படித்த பெண்களைப் பற்றி அவன் பேசத் தொடங்கி விட்டால் 'நல்ல வேளை! அந்தப் பெண்கள் அவன் பேச்சைக் கேட்கப் பக்கத்தில் இல்லாமற் போனார்களே' என்றுதான் எனக்குத் தோன்றும். அவன் பேச்சிலே ஆபாசமும், பரிகாசமும் ததும்பி நிற்கும். பெரும்பாலும் அநியாயமாகக் குற்றம் சாட்டப்படுவதாகவும் தோன்றும். ஒரு வேளை அவனும் பண்டைய காலத்து முகம்மதியர்களைப் போல, ஆண்டவன் பெண்களுக்கு ஆத்மா என்பதையே வைக்க மறந்து விட்டான் போலும் என்று எண்ணி வந்தானோ, என்னவோ? அவன் பெண்களின் உடலமைப்பை மட்டுமே கவனித்து வந்தான். ஒரு நாள் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி தன் குழந்தையை எடுத்துக் கொண்டு ஏதோ அலுவலாக ஸ்டுடியோவுக்கு வந்திருந்தாள். அவள் சென்றதும் அவன் என்னிடம் சொன்னான்:

''தேவைக்கு அதிகமாக மார்பகம் அகன்றிருக்கிறது.''


எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

''உன்னைப் போன்ற கல்லினும் கடிய நெஞ்சினருக்காக ஆண்டவன் அவற்றை நிர்மாணிக்கவில்லை. குழந்தைகளின் பசியைப் போக்குவதற்கென்றே அவற்றை உண்டாக்கியிருக்கிறான்'' என்று அவனுக்குக் கடகடப் பதில் சொன்னேன்.

''கட்டாயம் இவ்வுலகத்தைப் படைத்த ஆண்டவன் ரசிக உணர்ச்சி பெற்றவனாகவே தான் இருக்க வேண்டும். அழகைச் சிருஷ்டிப்பதற்கு முன்னால் அழகின் அருமையைப் பற்றி அவன் நல்லறிவு பெற்றிருக்க வேண்டாமா?'' என்றான் அவன்.

பெண்களைப் பற்றி இத்தகைய நோக்கம் கொண்ட மனிதன் ஒரு பெண்ணைப் பற்றிக் கவலை காட்டுவதென்றால் உண்மையில் அது எத்தனை வியக்கத் தக்க விஷயம்!

''நீ ஒரு நாள் இப்படியும் மாறி விடுவாய் என்று நான் கனவிலும் கருதவில்லை'' என்றேன், குரலில் குறும்பும் குத்தலும் தொனிக்க.



நன்றி!

"டாக்டர் ஸார்! உங்களுக்கு என் கோடி நன்றியைத் தெரிவிச்சுக்கறேன்! உங்க வைத்தியத்தாலே எனக்கு நல்ல பலன் ஏற்பட்டுடுத்து!"



"என்ன நீங்க சொல்றது ஒன்றும் புரியல்லியே? நீங்க என்கிட்டே வைத்தியம் பார்த்துக்கிடல்லியே?"

"இல்லே! எங்க மாமா உங்ககிட்டே வைத்தியம் பார்த்துக்கிட்டாரு. அவருடைய சொத்துக்கு இப்போ நான்தான் வாரிசு!"

"எப்படி?" என்று கேட்டவன் என்னை வியப்புடன் நோக்கினான்.

"அதுதான் காதல் விவகாரம்."

"காதலா?" என்று அவன் சீறி விழுந்தான். "உங்களுக்கெல்லாம் இந்தக் காதலை விட்டால் வேறொன்றும் தெரியாதா? பெண் என்பவள் காதலிக்கக்கூடிய ஒரு பொருளா?" கணநேரம் மௌனமாயிருந்து விட்டு அவன் மேலும் சொன்னான்: "தற்சமயம் நான் கவலைப்படும் விஷயம் இதுதான். ஒரு சித்திரம் வரைய எனக்கு வேலை கிடைத்திருக்கிறது."

நான் மௌனமாயிருந்தேன். அவன் சொல்லிக் கொண்டே போனான்:

"பணமும் புகழும் கிடைக்கக் கூடிய ஒரு பெரிய வேலை அது."

பம்பாயிலுள்ள பிரசித்தி பெற்ற செல்வச் சீமானான ஒரு சைத்ரிகரின் பெயரை அவன் சொன்னான். அந்தச் சித்திரத்தினால் ஏற்படக் கூடிய பொருள் லாபத்தைப் பற்றியும் சொன்னான். அந்தச் சித்திரம் வெளிநாட்டிலுள்ள சித்திரக் கண்காட்சி ஒன்றுக்கு அனுப்பப்படும் என்பதையும் அறிவித்தான்.

"உனக்கு எனது வாழ்த்துக்கள்!" என்று நான் மகிழ்ச்சி பொங்கக் கூறினேன்.

என்னிடம் எவ்வளவு மகிழ்ச்சி பொங்கிற்றோ, அத்தனைக்கத்தனை அவனிடம் விரக்தி தாண்டவமாடியது. "உன் வாழ்த்துக்களைக் கொண்டு போய் உடைப்பில் போடு. அந்தச் சித்திரத்தின் கவலை என்னை எப்படி அரித்துக் கொண்டிருக்கிறது, தெரியுமா?" என்றான்.

"நீ யாரையோ பெண்ணைப் பற்றியல்லவா பேசிக் கொண்டிருந்தாய்?"

"ஆமாம். இந்தச் சித்திரத்துக்காகத் தான் பேசிக் கொண்டிருந்தேன். மிகுந்த சாந்தியும், உன்னத நோக்கமும், பரிசுத்தமான முகபாவமும் கொண்ட ஒரு பெண் வேண்டும். புரியவில்லையா? 'மாடல்'லுக்காக ஒரு பெண் வேண்டுமப்பா!" என்றான் அவன்.

"இதொன்றும் பெரிய சிரமமான வேலை இல்லையே!" நான் வேண்டுமென்றே ஆத்திரத்தைக் கிளப்பும் நோக்கத்துடன் சொன்னேன். "எத்தனையோ பெண்கள் எனக்குத் தெரிந்தவர்கள் ஏறக்குறைய இப்படித்தான் இருக்கிறார்கள்" என்றேன்.

ஒருவேளை அவன் பேச்சில் கவனம் செலுத்தவில்லையோ, என்னவோ! ஜன்னல் வழியே வெளியே பார்த்தவாறே சொன்னான்: "எப்படி ஸ்வரங்களின் விசேஷ சேர்க்கையினால் கருணை, சிருங்காரம் போன்ற நவரஸங்களும் உண்டாகின்றனவோ, அப்படியே முகத் தோற்றம், நடை, உடை, பாவனை இவைகளைக் கொண்டு பெண்கள் சாத்விக குணமுள்ளவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் இருக்கிறார்களா இல்லையா என்பதைக் கண்டு கொள்ள முடியும். எனக்கு எத்தனை தேடியும் அத்தகைய பெண் இன்று வரை கிடைக்கவில்லை."

"வழக்கமாக மாடலுக்கு வரும் பெண்கள் என்ன ஆனார்கள்?"

"அவர்கள் கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டிவிடக் கூடிய சஞ்சிகைகளின் அட்டைப் படத்துக்கு மட்டுமே உகந்தவர்கள். இப்பொழுது நானோ சீதையின் எழிலோவியத்தைத் தீட்ட வேண்டியிருக்கிறது."

"சீதை என்றதும் உன் மனத்திலும் ஒரு மரியாதை இருக்கிறாற் போலிருக்கிறதே!" என்றேன்.

"மரியாதைப் பேச்சு இங்கு எதற்கு? என்ன இருந்தாலும் சீதையை நான் மானிடப் பெண்ணாகக் கருதவில்லை. தெய்வமாகவே மதிக்கிறேன். அசோகவனத்திலே அமர்ந்திருக்கும் சீதையை நான் எழில் ஓவியமாகத் தீட்ட வேண்டும்."

"ஓஹோ! சித்திரம் தீட்டுவதற்கான விஷயமும் அவர்கள் கொடுத்திருக்கிறார்களா?"

"ஆமாம், ஆமாம். சித்திரத்தைச் சீக்கிரமாக முடிக்க வேண்டும். வெளிநாட்டுக்குப் போகப் போகிறது. கடந்த இரண்டு மூன்று நாட்களாக நான்......" அவன் வாக்கியத்தை முடிக்காமலே திடீரென்று மௌனமானான். அவனுடைய கண்கள் ஜன்னல் வழியே எங்கோ பறந்து சென்றன. நான் அங்கே இருப்பதை மறந்தான். ஐந்தாறு நிமிஷங்களுக்குப் பிறகு அவன் என்னைக் கூப்பிட்டு, "இங்கே வா, இங்கே வா, சீக்கிரம் இங்கே வா" என்று அவசரமாக அழைத்தான்.

நான் எழுந்து அவனருகில் சென்றேன். அவன் சுட்டிக் காட்டிய இடத்தை நோக்கினேன். அங்கே ஒரு மோட்டார் நின்று கொண்டிருந்தது. வண்டிக்கருகிலேயே விலையுயர்ந்த ஆடை அணிகள் அணிந்து இரண்டு பெண்மணிகள் நின்று கொண்டிருந்தனர். அந்தப் பெண்மணிகளுக்குப் பின்னால் ஒரு பிச்சைக்காரி நின்று கொண்டிருந்தாள்; அவர்களை மூச்சு விடாமல் பிச்சை கேட்டுத் தொந்தரவுபடுத்திக் கொண்டிருந்தாள். இன்னொரு புறம் இரண்டு ஆடவர்கள் நின்று வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அவன் யாரைச் சுட்டிக்காட்டி என்ன சொல்கிறான் என்று புரியாமற் போகவே, "என்ன அங்கே?" என்று வியப்புடன் கேட்டேன்.


மார்ச் மாதத்தில்
சீமை வாதாம்பழம்
நீங்கள் இப்பொழுது மார்ச் மாதத்தில் சீமை வாதாம் பழங்களைப் பெறலாம். அல்லது உங்களுக்கு மாம்பழம் பிடித்தமென்றால், அவைகளை கிறிஸ்துமஸ் பண்டிகை சமயத்தில் பெற முடியும்.
ஏனெனில், உங்களுக்கு விருப்பமான பழங்கள் அல்லது காய்கறிகள் எதுவாயினும், அவைகளை வருஷம் முழுவதும் நீங்கள் பெறமுடியும். மிட்லண்ட் நிபுணர்கள் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளின் நறுமணத்தையும் தெவிட்டாச் சுவையையும் ஒருங்கே திரட்டி பக்குவப்படுத்தியுள்ளார்கள். இதனால் அவைகளை எக்காலங்களிலும் பெற்று ருசித்து அனுபவிக்கலாம்.
இன்றே Midland மிட்லண்ட் தயாரிப்புகளை வாங்குங்கள்
தி மிட்லண்ட் ப்ரூட் அண்ட் வெஜிடபிள் பிராடக்ட்ஸ் (இந்தியா) மதுரா
ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள் :
கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
பம்பாய்-1
ஏஜெண்டுகள் : பாரி அண்டு கம்பெனி லிமிடெட்

''சீதை! சீதை கிடைத்து விட்டாள்!'' உமாகாந்தன் உற்சாகத்துடன் கூவினான்.

''பேஷ்! யார் அவள்? 'பாப் கட்' செய்து கொண்டிருக்கிறாளே, அவளா?''

''நீ ஒரு முட்டாளடா. அவள் சீதைக்குக் காவல் புரியும் ராட்சசியாக வேண்டுமானால் உபயோகப்படலாம். தெரிந்ததா?''

''அந்த இரண்டாமவள்?''

''இல்லை. அவளும் இல்லை. மூன்றுமவள்.''

''மூன்றுமவளா?''

''ஆம். அதே பிச்சைக்காரிதான்!''

''அவள் முதுகைப் பார்த்தே மயங்கி விட்டாயே! அவளிடம் என்ன சாத்விகத்தைக் கண்டு விட்டாய்? அவள் முதுகைப் பார்த்துப் படம் எழுதப் போகிறாயா?''

''உன் கேலிப் பேச்சை மூட்டை கட்டி வையடா!'' உமாகாந்தன் சள்ளென்று எரிந்து விழுந்தான். ''என் மனத் திரையிலே உருவாகியிருக்கும் சீதைக்கும் அவளுக்கும் நிரம்ப ஒற்றுமை இருக்கிறது. என் ஓவியம் நிச்சயம் பூர்த்தியுற்றுப் புகழ் பெறும்...நீ போய் அவளை அழைத்து வா!'' என்றான்.

நான் வெளியே சென்றேன். பிச்சைக்காரியின் அருகில் சென்று பார்த்ததும், உமாகாந்தன் சொன்னது அவ்வளவும் எழுத்துக்கு எழுத்து உண்மை என்பது எனக்கு நிதர்சனமாக விளங்கியது. நான் அவளை அருகில் அழைத்தேன். அவள் கையை நீட்டியவாறே என் அருகில் வந்து நின்றாள்.

''உனக்குக் காசு வேண்டும் அல்லவா?''

கணநேரம் என்னைப் பார்த்து விட்டு அவள், ''ஆமாம், ஐயா!'' என்றாள்.

''அப்படியானால் என்னுடன் அந்த வீடு வரைக்கும் வா. அங்கே உனக்குப் பணம் கிடைக்கும்!'' என்றேன்.

என்னை வேல் போன்ற கூரிய விழியுடன் ஒரு முறை துளைத்து விடுவது போல் பார்த்து விட்டு, நிந்தனை தோய்ந்த குரலில், ''எனக்குத் தெரியும், அந்த வேலை. வேண்டாம் எனக்குக் காசு. நான் வர முடியாது. போங்கள்!'' என்றாள்.

என் பேச்சுக்கு இப்படி ஒரு விபரீதமான அர்த்தமும் செய்து கொள்ள முடியும் என் பதை அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன்.

''நீ நினைப்பது போன்ற காரியம் இல்லை. அங்கே வந்தால் உனக்கு விஷயத்தை விளங்க வைக்கிறேன். உனக்கு விருப்பமிருந்தால் சம்மதம் தெரிவி. இல்லாவிட்டால் வேண்டாம். சந்தோஷமாக நீ திரும்பிவிடலாம்!'' என்று எவ்வளவோ எடுத்துக் கூறி அவளைச் சமாதானம் செய்ய முயன்றேன்.

தனது பார்வையினாலேயே என்னை அளவிடுபவள் போல அவள் பேசினாள்:

''எத்தனை காசு கிடைக்கும்?''

''நிறையக் கிடைக்கும். இருபது, இருபத்தைந்து, ஐம்பதுகூடக் கிடைக்கலாம்.''

அவளுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை. இருந்தாலும் என் முக காம்பீர்யத்தைப் பார்த்தவாறு யோசித்துக் கொண்டே என்னுடன் வரத் தயாராகி விட்டாள்.

உமாகாந்தன் பரபரப்புடன் அறையினுள் இங்குமங்கும் உலாவிக் கொண்டிருந்தான். பிச்சைக்காரியைப் பார்த்ததும், ''எனக்கு வேண்டிய மாதிரியே இருக்கிறாள். துளிக்கூட மாறுதல் இல்லை!'' என்றான்.

''அது சரி. ஆனால் இன்னும் நமது காரியத்துக்கான பேச்சு வார்த்தை நடைபெறவில்லை. அவளுக்கு அந்த வேலை பிடிக்குமோ பிடிக்காதோ, தெரியவில்லை!'' என்றேன்.

''ஏன் பிடிக்காது?'' உமாகாந்தன் ஆவேசம் வந்தவன்போல் பேசலானான்: ''தம்பிடி தம்பிடியாகக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுச் சேகரிக்கும் பிச்சைக்காரி! நாம் அவளுக்குக் கொடுக்கப் போகிற தொகையை அவள் அப்பன்கூடப் பார்த்திருக்க மாட்டான். அதை வாங்கிக் கொள்ள அவளுக்கு என்ன வலிக்கிறதாம்?''

கைக்குக் கிட்டிய பொருள் கைவிட்டு நழுவும்பொழுது படுகஞ்சன் அடைவானே, அந்த நிலையை ஒத்திருந்தது உமாகாந்தனின் நிலை.



பிச்சைக்காரி வாசற்படியில் சுவரில் சாய்ந்தவாறு மௌனமாக நின்றுகொண்டிருந்தாள். உமாகாந்தனின் பேச்சில் உள்ள கடைசிப் பகுதியைத்தான் அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அதில் அவளுக்கு ஒரு அவமானமோ இழிவோ இருப்பதாகத் தென்படவில்லை. அவளது கபடமற்ற களங்கமற்ற முகத்தில் ஒரு எளிய இளநகை இழையோடியது. அவளது அந்த முறுவலுக்கு ஒரு விசேஷப் பொருள் கொண்டு விட முடியாது.

''இங்கே உட்காரு!'' அருகில் இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டி அவளை உட்காரச் சொன்னேன்.

அவள் நாற்காலியையும் உமாகாந்தனையும் ஒரு முறை பார்த்தாள். அவளுக்கு நாற்காலியில் உட்கார வேண்டுமென்று தோன்றவில்லை. சங்கோசம் இடைமறித்துத் தடுத்தது. ஆயினும் தனக்குக் கிடைக்கப் போகும் தொகைக்காக, தான் செய்யவேண்டிய வேலைகளில் அதுவும் ஒன்றாக இருக்கலாம் என்ற எண்ணத்தில், மயில்வாகனத்தில் முருகப் பெருமான் போல் உட்கார்ந்தாள். நானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். உமாகாந்தன் இவை எல்லாம் தனக்குப் பிடிக்காவிட்டாலும் மௌனம் சாதித்தான்.

நான் பிச்சைக்காரியைப் பார்த்து, "இதோ உட்கார்ந்திருக்கிறாரே, இவர் ஒரு பெரிய சித்திரக்காரர். இவர் கையினால் உன் படத்தையும் வரையப் போகிறார்!" என்றேன்.

"என் படமா? என் போட்டோவா? நான் ஒரு தம்பிடி கொடுக்கமாட்டேன். எனக்குப் போட்டோவும் வேண்டாம், கீட்டோவும் வேண்டாம்!" என்று சொன்னவள் வேகமாக எழுந்து விட்டாள்.

உமாகாந்தன் மனத்துள்ளேயே என்னைத் திட்டிக் கொண்டிருந்தான்.

"நீ பணம் தரவேண்டாம். நாங்களே உனக்குப் பணம் தருவோம்!" என்று கூறி அவளைச் சம்மதிக்க வைப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

நாற்காலியில் மறுபடியும் உட்கார்ந்தவாறே, "எத்தனை காசு கொடுப்பார்?" என்று கேட்டாள் அவள்.

"குறைந்தது ஐம்பது ரூபாய் கொடுப்பார்!" என்றேன் நான்.

"இல்லை. நூறு ரூபாய் தருகிறேன்!" என்று ஒரு வேகத்தில் ஆரம்பித்தான் உமாகாந்தன். "நல்ல முறையில் நீ நடந்து கொண்டால் இன்னும் ஐம்பது ரூபாய் சேர்த்துக்கூடத் தருவேன்!" என்றும் சொன்னான்.

"அடேயப்பா! இத்தனை ரூபாய் எனக்கு எதற்கு?" என்றான் அவள்.

"உன் படத்துக்காக!" என்றேன் நான்.

"சொல், வருவாயா, மாட்டாயா!" என்று அதட்டினான் உமாகாந்தன்.

"சரி வருகிறேன்!" என்று அவள் தலையசைத்துச் சம்மதம் தெரிவித்தாள்.

"ஐந்து நாட்கள் வரவேண்டியிருக்கும்!"

"வருகிறேன்!"

உமாகாந்தன் இருபத்தைந்து ரூபாய் முன்பணமாக அவளுக்குக் கொடுத்தான். நடுங்கும் கைகளோடு அவன் கொடுத்த ரூபாயை அவள் வாங்கிக் கொண்டாள். "இந்தப் பணத்தைக் கொண்டு என் குழந்தைகளுக்குத் தின்பண்டம் வாங்கித் தரலாம்; மருந்து வாங்கித் தரலாம். அடே, அப்பா! எவ்வளவு ரூபாய்!" என்று மகிழ்ந்தாள்.

"இதேபோல் தினம் இருபத்தைந்து ரூபாய்கள் கிடைக்கும். ஐந்து நாட்கள் வரை. தினம் வந்து விடு. என்ன?"

"வந்து விடுகிறேன், எசமான்!" என்று அவள் கைகூப்பிக் கூறினாள். பிறகு எனக்கும் உமாகாந்தனுக்கும் வணக்கம் தெரிவித்து விட்டுப் புறப்பட்டாள்.

"ஏ சீதையம்மா! நீ எங்கே இருக்கிறாய்? சொல்லிவிட்டுப் போ!" என்று போனவளை நிறுத்திக் கேட்டான் உமாகாந்தன்.

"நான் ஸ்டேஷனுக்கு அந்தப் பக்கத்திலே, பாலத்தடியிலே இருக்கிறேன். ஆனால், ஐயா! என் பெயர் சீதையில்லை."

"தெரியும். ஆனால் நான் சீதையின் படம் வரையப் போகிறேன். அதற்காக உன்னையும் சீதை என்று கூப்பிட்டு வைத்தேன்" என்றான் உமாகாந்தன்.

"என் படம் அல்லவா வரையப் போவதாகச் சொன்னீர்கள்?"

"ஆமாம், உன் படம்தான். ஆனால் சீதையின் உருவத்தில்."

"யார் அந்தச் சீதை?"

''ராமர் சீதை இல்லே? அவள்தான். ராமாயணக் கதை கேட்டிருக்கிறாய் அல்லவா? ராவணன்கூட அவளை இலங்கைக்குத் தூக்கிக் கொண்டு போனானே?''

''அநுமார்கூட அவளைத் தேடுவதற்காகக் கடலைத் தாண்டிப் போயிருந்தாரே!''

''ஆமாம், ஆமாம். அதே படம் தான் வரைய வேண்டும். நீ ஐந்து நாட்கள் இங்கே வந்து சீதையாக உட்கார வேண்டும். புரிந்ததா?'' என்றான் உமாகாந்தன்.

அதைக் கேட்டதும் அவள் மௌனமே உருவானாள். அவள் முகம் எதிர்பாராத வகையில் கம்பீரத் தோற்றத்தை ஏற்றது. அவள் தலை குனிந்தவாறே பேசாமல் மௌனமாகத் திரும்பினாள்.

''இன்னும் உனக்கு என்ன வேண்டும்?'' உமாகாந்தன் கோபத்தில் கொதித்தெழுந்து அவளைக் கேட்டான்.

அவள் ஸ்வரம் ஒரேயடியாக இறங்கி விட்டது. ''எனக்கு ஒன்றும் வேண்டாம், எசமான்! இந்தப் பணமும் வேண்டாம்!'' என்று கூறியவள் நோட்டுக்களை எடுத்து மேஜை மேல் வைத்து விட்டாள்.

''ஏன்? என்ன விஷயம்?'' என்று நாங்கள் இருவரும் ஏககாலத்தில் கேட்டோம்.

''நான் ராமரின் சீதையாக ஆவதா? நடக்காத காரியம்!'' கனவில் பேசுபவள் போல் அவள் பேசினாள்.

''இருநூறு ரூபாய் தருகிறேன்!''-உமாகாந்தன் ஆசை வார்த்தை காட்டினான்.

''முடியாது, சாமி, முடியாது!'' என்று தலையாட்டியவாறே சொன்னவள் ஆவேசத்துடன் தொடர்ந்தாள்:

''நீங்கள் பொற்குவியலாய்க் கொண்டுவந்து கொட்டினாலும், நான் சீதையாகமாட்டேன். அந்தத் தெய்வத்தின் பெயரை நான் எனக்கு வைத்துக் கொள்வதா? சீதையின் பெயரை வைத்துக் கொள்வதா? முடியாது, முடியாது. முடியவே முடியாது. நான் பாவி, இழிந்தவள், கெட்டவள்; சீதையின் பெயரை வைத்துக்கொள்ள எனக்குச் சிறிதும் தகுதி கிடையாது; அருகதை கிடையாது!''


''நானூறு ரூபாய் தருகிறேன்!'' இன்னுமொரு முறை முயற்சி செய்து பார்க்கும் ஆசையில் உமாகாந்தன் ரூபாயைப் பந்தயத் தொகையாக ஏற்றினான்.

அவள் பேசாமல் இருந்தாள். அவள் மனத்திலே போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. அவளது வறுமை வாழ்விலே பொன்விளையும் பூமி கிடைக்க விருந்தது. தன் கிழட்டுத் தந்தையுடனும் குழந்தை குட்டிகளுடனும் துன்பப் பாலையிலிருந்து இன்பச் சோலைக்குப் புகும் அரிய வாய்ப்பு அவளுக்குக் கிட்டவிருந்தது. சில கணங்கள் அவள் கண்களை மூடிக்கொண்டு, இனிமை தோய்ந்த அந்தச் சித்திரத்தைக் காண முயன்றாள். ஆனால், ஆசையும் மோகமும் கடைசியில் அவளது உறுதிக்கு எதிரே நிலைத்து நிற்க முடியாமல் தோல்வியை ஒப்புக் கொண்டன.

''என்னை மன்னித்து விடுங்கள், ஐயா! நான் அந்தப் பாவத்தைச் செய்யமுடியாது!''

திடமான குரலில் இந்த வாக்கியங்களைச் சொன்னவள் அடுத்த கணம் அங்கே நிற்கவில்லை; பாய்ந்து வெளியேறி விட்டாள்.


புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத, மனோரம்மிய மணத்துடன்.


சுடர்
தீப்பெட்டிகள்
தயாரிப்பவர்கள்:
அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை
பெரம்பூர், சென்னை
சென்னை சர்க்கார் தொழில் & வர்த்தக இலாகாவின் ஒரு பிரிவு
எல்லா ஜில்லாக்களிலும் தொழில் & வர்த்தக உதவி டைரக்டர் காரியாலயங்களில் கிடைக்கும்

தமிழ் கூறும் நல்லுலகம்

பம்பாயில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் அண்மையில் தமக்கென உருவாக்கிக்கொண்ட பம்பாய்த் தமிழ் எழுத்தாளர் சங்கம் பிப்ரவரி மாதம் 16ம்தேதி தனது முதல் பேரவையைக் கூட்டியது. அவ்வமயம், சென்ற ஆண்டிலே இச் சங்கத்தின் செயலாளர்களாக இருந்து உற்சாகத்துடன் பணியாற்றிப் பேரவையின் பாராட்டுக்களைப் பெற்ற எழுத்தாளர்கள் ஸ்ரீ "ஆதி லட்சுமண்" ஸ்ரீ "மாயாவி" ஆகியோர் சமர்ப்பித்த ஆண்டு அறிக்கை, இக் குறுகிய காலத்துக்குள் சங்கம் புரிந்துள்ள பெரும் சாதனைகளுக்குச் சாட்சியாக விளங்கியது. குறிப்பாக, மாதம் ஒரு முறை பம்பாய்த் தமிழ் எழுத்தாளர்கள் கலந்து கூடி, இலக்கிய விஷயங்கள் பற்றிப் பேசிப் பயன் பெற்றதோடு, தமிழகத்திலிருந்து வந்த பிரபல எழுத்தாளர்களான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன், ஸ்ரீ "சாண்டில்யன்", கொழும்பு ஸ்ரீ எஸ். சிவபாத சுந்தரம் ஆகியோருக்கும், வரவேற்பும் பாராட்டும் அளித்துள்ளனர். தவிர, காலஞ்சென்ற எழுத்தாளர்களான ஸ்ரீ "தேவன்", ஸ்ரீ கி. ரா. கோபாலன் ஆகியோரின் மறைவு குறித்து அநுதாபக் கூட்டங்கள் நடத்தியதோடு, ஸ்ரீ கி. ரா கோபாலன் நிதிக்கும் பணம் திரட்டி அனுப்பப்பட்டது.

1958-ஆண்டுக்கு முன்னாள் பி. இ. என். செயலாளரும், பழம்பெரும் எழுத்தாளருமான ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் அவர்கள் தலைவராகவும், எழுத்தாளர்கள் ஸ்ரீ எஸ். விஜயராகவன், ஸ்ரீ பி. வி. பாரதியன் ஆகியோர் செயலாளர்களாகவும், ஸ்ரீ "மாயாவி" ஸ்ரீமதி கே. சுந்தராம்பாள் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும், ஸ்ரீ பி. க. கைலாசம் தணிக்கையாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

★

நாகபுரி நுண்கலைக் கழகத்தினர் கடந்த வாரத்தில், காலஞ் சென்ற ஸ்ரீ தேவனின் "மைதிலி" என்ற தமிழ் நாடகத்தை வெகு சிறப்பாக நடத்தினர்.

எல்லா வேஷங்களையும் கழக அங்கத்தினர்களே ஏற்று, வெகு திறம்பட நடித்தார்கள். நாகபுரியில் நடந்த அமெச்சூர் நாடகங்களில் மிகவும் சிறந்ததொன்றாக இந் நாடகம் பாராட்டப்பட்டது. பொது ஜனங்கள் திரளாக விஜயம் செய்து நாடகத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

★

மதுரை எழுத்தாளர் சங்கம் நகருக்கு விஜயம் செய்திருந்த பிரபல எழுத்தாளர்களான திரு பி. எஸ். ராமையா, தி. ஜானகிராமன் ஆகியோருக்கும் ஓவியக் கலைஞர் கலாசாகரம் இராஜகோபாலனுக்கும் வரவேற்பு அளித்துக் கௌரவித்தது.

எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு நா. பார்த்தசாரதி விருந்தினர்களை, கூட்டத்துக்கு அறிமுகம் செய்து வைத்தார். தினமணி (மதுரைப் பதிப்பு) பொறுப்பாசிரியர் வெ. சந்தானம் தலைமை வகித்தார். திரு பி. எஸ். ராமையா, "மணிக்கொடி யுகம்" என்பது பற்றியும், திரு தி. ஜானகிராமன், "என் கதைகளும், நானும்" என்பது பற்றியும், கலைஞர் இராஜகோபால், "கதைகளும் ஓவியமும்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். திரு பட்டாபி நாராயணன் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

★

சிங்கப்பூர் ஸ்ரீ தண்டாயுதபாணி கோவில் கொலு மண்டபத்தில் சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் வர்த்தக சங்கத்தின் 27-வது ஆண்டு மகா சபைக் கூட்டம் பிப்ரவரி 9ந்தேதி நடைபெற்றது. அவ்வமயம் பல பிரபலஸ்தர்களும் நகரத்தார்களும் விஜயஞ் செய்தனர். இறைவணக்கத்துக்குப் பின் சங்கத்தின் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. அதன் பிறகு சிங்கப்பூர் திரு சுப. ராம. சுப்பையா செட்டியார் அவர்கள் 'நகரத்தார்களும் உலகப்போக்கும்' என்னும் பொருள் பற்றி இனிமையாகவும் அழகாகவும் பேசினார்.

அதன் பிறகு 1958-ம் ஆண்டுக்குச் சங்க நிர்வாகஸ்தர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சங்கத்தின் தலைவராகத் திரு லெ. அ. அ. நா. மு. சுவாமிநாதன் செட்டியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

★

சென்ற மாதம் 23-ம் தேதி ஜபல்பூர் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டி அங்கத்தினர்களால் "பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்" என்ற ஹாஸ்ய நாடகம் நடிக்கப்பட்டது. இந்நாடகத்தில் பங்கு எடுத்துக் கொண்ட நடிகர்களில் பலர் மேடை அனுபவம் இல்லாமலிருந்த போதிலும் திரு "அரவரசன்" அவர்களது திறமையான டைரக்ஷனால் வெகு நன்றாக நடித்துப் பெயர் பெற்றார்கள். முக்கியமாக பஞ்சாட்சரமாக நடித்த திரு எம். ஆர். பாலசுந்தரமும், சிகாமணியாக நடித்த திரு ஏ. ராமமூர்த்தியும், பார்வதியாக நடித்த ஆர். நாராயணனும் தாங்கள் எடுத்துக்கொண்ட வேஷங்களோடு ஒன்றி உணர்ச்சி ததும்ப நடித்தார்கள். திரு எஸ். சீனிவாசனும், திரு ஏ. வி. ராமனும் ஹாஸ்ய வேஷங்கள் தாங்கிச் சபையோரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்து விட்டார்கள். 'ஒளி படைத்த கண்ணினாய்......' என்ற பாரதி பாடலைப் பாடின குமாரி ஈ. வி. வஸந்தாவின் குரலும், அப்பாடலுக்குக் குமாரி கே. கல்யாணியின் அபிநயமும் நாடகத்தின் சிகரமாக அமைந்தன. இந்நாடகத்தின் வரும்படி தென்னிந்தியப் பள்ளிக் கட்டடத்துக்குச் சேருகிறது என்று அறிவிக்கப்பட்டது.

உள்ளம் நல்லது



ஸ்ரீவத்ஸன்

பிரமை பிடித்தாற் போல் எவ்வளவு நாழிகை உட்கார்ந்திருந்தேன் என்பது எனக்கே தெரியவில்லை.

"என்னம்மா இது. இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? எங்கே யெல்லாம் தேடுகிறது உன்னை? அப்பா மணையில் உட்கார்ந்து விட்டார். புறப்படு" என்று என் மூத்த பெண் சாந்தா வந்து என்னைப் பிடித்து உலுக்கிய பிறகுதான் என் நினைவே எனக்கு வந்தது.

விடிந்தால் அவருக்கு ஷஷ்டி யப்த பூர்த்தி.

சொற்பமாகத்தான் செய்யப் போகிறோம். வீடே கலகலவென்று இருந்தது.

தில்லியிலிருந்து மூத்த பெண் சாந்தா இதற்காகவே குழந்தைகளுடன் புறப்பட்டு வந்திருக்கிறாள்.

அவளுடைய பெண்களும் பிள்ளைகளும் இரண்டு நாட்களாகவே என்னைக் கோட்டா செய்து கொண்டிருந்தன.

"பாட்டியும் தாத்தாவும் நலங்கு இடுவார்களோ?"

"பாட்டியின் புடவையையும் தாத்தாவின் வேஷ்டியையும் நான் முடிச்சுப் போடப் போகிறேன்!"

"பாட்டியும் தாத்தாவும் மாலை மாற்றிக் கொள்வார்களோ?"

"பாட்டி! தாத்தா பக்கத்திலே வெட்கப்பட்டுக் கொண்டு உட்கார வேணும். தெரிஞ்சுதா?"

"ஏன் தாத்தா, நீங்க மோட்டாரிலே ஊர்வலம் வருவேளோ?"

"பாட்டி ஆறு கஜம் புடவைதான் கட்டிக் கொள்ள வேணும். தாத்தா நீ பைஜாமா போட்டுக் கொள்ள வேணும்!"

இப்படி யெல்லாம் குழந்தைகள் சேர்ந்து கூத்தடித்தன. பெரிய மருமகனும் சின்ன மருமகனும் ஓடி ஓடிக் காரியம் செய்தார்கள்.

பெரிய மருமகன், "அம்மா, அப்பா உங்களைக் கூப்பிடுகிறாற் போலிருக்கு!" என்பான்.

நான் நிஜம் என்று போய், "கூப்பிட்டேளா?" என்பேன். "நான் கூப்பிடவில்லையே!" என்பார் அவர்.

திரும்பி வருவேன். பெரிய மருமகன் குறும்புச் சிரிப்பு சிரிப்பான்.

அவர்கள் விளையாட்டும் மகிழ்ச்சியும் கண்டு நானும் பெருமையால் பூரித்துப் போவேன்.

ஆனால் சாயங்காலத்திலிருந்து என் மனம் சரியாயில்லை. எந்த சந்தோஷத்திலும் ஈடுபட என் மனம் இடங் கொடுக்கவில்லை. அதனால் தான் விலகித் தனியாக மொட்டை மாடியில் வந்து உட்கார்ந்து கொண்டேன்.

சாயங்காலம் நான்கு மணி இருக்கும் ராத்திரி சமையலுக்குச் சாமான்கள் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

'' அம்மா !''

குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். புடவைக்காரர் நின்று கொண்டிருந்தார்.

'' வாங்க '' என்றேன்.

'' அம்மா! நாளைக்கு சஷ்டியப்த பூர்த்தி யாமே. எனக்கு நீங்கள் ஒரு காகிதம் போடப் படாதுங்களா ?''

'' போடப்படாது என்பதில்லே. ரொம்பவும் சொற்பமாகப் பண் ணுகிறோம். அதனுல்தான் அதிக மாக ஒருவருக்கும சொல்லவில்லே. இதுகூடப் பிள்ளேகள் கட்டா யப்படுத்துவதனுல்தான்.''

'' போன வாரம்தான் கேள்விப் பட்டேன். அந்த நாளிலே எங்கள் அப்பாவுக்கு நீங்கள் செய்த உதவியை அப்பா எப்பொழுதும் சொல்லிக்கிட் டிருப்பாரு. அவர் செத்த பிறகு இந்தப் பக்கம் அதிக மாக வர முடியவில்லே. நீங்கள் அப்பாவுக்குச் செய்திருக்கும் உதவிக்கு என்னுலே முடிந்தது இந்த சஷ்டியப்த பூர்த்திக் கலியாணத்துக்கு இந்தப் புடவையைப் பரிசாகக் கொடுப்பது தான். அதற்காகத்தான் வந்தேன். உங்க ளுக்காகப் பிரத்தியேகமாக இதை நெய் தேன்'' என்று ஒரு புடவையை என் கையில் கொடுத்தார்.

திடுக்கிட்டேன்.

'' சும்மா வாங்கி வையுங்க, அம்மா! எங்கள் அப்பாவுக்கு நீங்க செய்த ஒத்தா சைக்கு இது ஒரு பெரிக இல்லீங்க.''



புடவையைக் கொடுத்து விட்டு அவசரமாகப் போய் விட்டார் அவர்.

நல்ல அரக்குக் கலரில் ஒரு சாண் அகலத்துக்கு ஜரிகை போட்ட புடவை.

பாவம். எவ்வளவு அன் புடன் அவர் கொண்டுவந்து கொடுத்தார் ? அது மட் டுமா? ''அப்பாவுக்கு நீங்கள் செய்த உதவி'' என்ருரே.

அவருக்கு உதவியா செய் தேன் நான் ?

நான் செய்த காரியம் மட் டும் அவருக்குத் தெரிந்

அவர் கஷ்டம்!

டாக்டர்:- நீங்கள் ரொம்பவும் சிகரெட் பிடிக்கிறீர்களா?

நோயாளி:-ஒரு நாளைக்கும் பதினைந்து சிகரெட் பிடிப்பது வழக்கம்!



டாக்டர்:-அதைக் குறைச்சுடணும்! வேண்டுமானால் சாப்பாட்டுக்கும் பிறகு ஒன்று வீதம் பிடித்து வாருங்க!

டாக்டர் (ஒரு மாதத்துக்குப் பிறகு): பார்த்தீங்களா? உங்க உடலில் குணம் இருக்குது. டாக்டர் சொன்னதைக் கேட்டால் நிச்சயம் குணமாகும். தெரிஞ்சுதா?

நோயாளி:—அது ரொம்பச் சிரமமான காரியம் ஸார்!

டாக்டர்:-ஏன்

நோயாளி:-ஒரு நாளைக்கும் பதினைஞ்சு தரம் சாப்பிடறது கஷ்டமாயிருக்கு!

இருந்தால். அவருக்கென்ன? என் கணவருக்குத் தெரிந்திருந்தால்கூட......நல்லவேளை! யாருக்குமே தெரியாது.

அது நடந்து வருடங்கள் மூன்று உருண்டோடிவிட்டன. ஆனால் அது இதோ என் கண் முன் நடப்பது போல் தெரிகிறது.

பட்டீசுவரம் கோவிந்த பாகவதர் என்பவர் அந்தப் பக்கங்களில் புடவை வியாபாரத்துக்கு வரும்பொழுதெல்லாம் எங்கள் வீட்டில்தான் புடவை மூட்டையைக் கொண்டு வந்து வைப்பார். அவர் மிகவும் சாது. சாயம் போகக்கூடிய புடவையைக் கொடுத்து விட்டு, சாயமே போகாது என்று கையடித்துச் சத்தியம் செய்யத் தெரியாத அப்பாவி. பதினாறு முழப் புடவையைப் பதினெட்டு முழமாக அளந்து காட்டும் ஜகஜ்ஜாலப் புரட்டு தெரியாதவர்.

மூன்று வருடங்களுக்கு முன், நவராத்திரியின்பொழுது ஆண்டுதோறும் வருவதைப் போல் ஒரு பெரிய மூட்டையுடன் வந்தார். மூட்டையை வீட்டில் போட்டு விட்டுப் பத்து நாட்கள் சுற்றி எல்லாவற்றையும் விற்க முற்பட்டார்.

கொண்டுவந்த மூட்டை அநேகமாகக் காலியாகி விட்டது. ஒரே ஒரு பட்டுப்புடவை; நூறு ரூபாய் பெறும். அதுவும் நான்கு மட்டரக நூல் புடவைகளும் மட்டுமே மிஞ்சியிருந்தன.

"அம்மா! இந்தப் பட்டுப் புடவையை எடுத்து உள்ளே வையுங்க. எலி குதறிவிடப் போவுது. இந்த மட்டரகப் புடவைகளை எடுத்துப் போய் மில் தொழிலாளிகள் வசிக்கும் இடத்திலே விற்றுவிட்டு வருகிறேன். வந்து பட்டுப் புடவையை எடுத்துக்கிட்டுப் போய் சப்மாஜிஸ்திரேட் அய்யா வீட்டு அம்மாகிட்டே கொடுத்துவிட்டுப் போகிறேன். அவங்க ஊரில் இல்லையாம், வர மூன்று நாட்களாகுமாம்" என்று சொல்லி விட்டுப் போனார்.

போனவர் ஒரு வாரம் ஆகியும் வரவில்லை.

அன்று என் கணவர் பள்ளிக்கூடம் விட்டதும் வந்து, "சமாசாரம் கேட்டாயா, இங்கு வருவாரே புடவைக்கார கோவிந்த பாகவதர் அவர் இங்கிருந்து முப்பது மைலில் உள்ள ஊரில் மாரடைப்பால் இறந்து விட்டாராம். அவர் ஜேப்பிலிருந்து விலாசம் தெரிந்து அவர் பிள்ளைக்குத் தந்தியடிச்சாங்களாம். அவன் வந்து அடக்கம் செய்தானாம். பத்திரிகையில் போட்டிருக்கிறது" என்றார்.

திடுக்கிட்டேன்.

பத்துப் பதினைந்து நாட்கள் ஆகிவிட்டன.

புத்தியில் சிறிது சலனம் ஏற்பட்டுவிட்டது. நமக்குத்தான் ஒரு நல்ல புடவை கிடையாது. நம் கணவர் சம்பாதிப்பது சாப்பாட்டுக்கே போதவில்லை. நல்லவேளையாக மூத்த பெண்ணைச் சொந்தக்காரப் பையனுக்கே கொடுத்தாகிவிட்டது. பையன்களுக்கும் கலியாணமாகிவிட்டது. அவர்களும் இவரைப்போலவே பள்ளிக்கூட உத்தியோகம்தான். சொற்பச் சம்பளம். பக்கத்து ஊர்களில் இருந்தார்கள். நானும் அவரும் மட்டும் தனியாக இருந்து வந்தோம். நல்ல புடவை கிடையாதே. இதை எடுத்துக் கொண்டு விட்டால் என்ன? யாருக்குத் தெரியப் போகிறது? இம்மாதிரி புடவை பணம் கொடுத்து வாங்குவதென்பது நம் ஜன்மத்தில் இல்லை. கொஞ்ச நாட்கள் உள்ளே வைத்திருந்து விட்டு அமளியெல்லாம் அடங்கின பிறகு எடுக்கலாம் என்று நினைத்துப் புடவையை எடுத்துப் பெட்டியடியில் வைத்து விட்டேன்.

ஒரு மாதமாயிற்று. புடவைக்காரரின் பிள்ளை வந்தான்.

"அம்மா! அப்பா உயிருடன் இருந்தபோது சதா உங்களைப் பற்றிப் பேசுவார். உங்க வீட்டிலே புடவையைக் கவலை இல்லாமல் வைச்சுட்டு வியாபாரத்துக்குப் போவாராம். அவர் காலமாகி ஒரு மாதமாகி விட்டது" என்று கூறினான்.

வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டேன்.

"கடைசித் தடவை வந்தபோது கொண்டு வந்த புடவையை எல்லாம் விற்றுப் பணம் அனுப்பி விட்டு, 'இன்னும் ஒரு பட்டுப் புடவைதான் விற்கணும். அதையும் விற்று விட்டு இரண்டு நாட்களில் வருகிறேன்' என்று கடிதம் போட்டார். ஆனால் மறுநாளே அவர் காலமானதாகத் தந்தி வந்துவிட்டது. பட்டுப் புடவை விஷயம் என்ன ஆயிற்று? விற்றாரா, இல்லையா? தெரியவில்லை!" என்றான்.

புடவையைக் கொண்டு வந்து கொடுத்து விடலாமா என்று ஒரு கணம் யோசித்தேன்.

அதே சமயம், 'ஒரு நல்ல புடவை கூட இல்லை. வாங்கவும் வழியில்லை. ஏன் கொடுக்க வேண்டும்?' என்றும் தோன்றியது.

"இங்கிருந்து போகும்போது எடுத்துப் போனாரே ஒரு பட்டுப் புடவை" என்றேன்.

"இருக்கலாம், அம்மா! எந்தப் படுபாவி அமுக்கி விட்டானோ? உங்கமாதிரி பிறர் சொத்துக்கு ஆசைப்படாதவங்களாக எல்லாருமே இருப்பாங்களா?" என்றான்.

என்னைப் பற்றி அவன் கொண்டுள்ள உன்னத அபிப்பிராயம் சரிதானா? என்னை அவன் பேச்சு கொல்லாமல் கொன்றது.

அதன்பின் இரண்டு மாதங்களாகி விட்டன. புடவையை எடுத்துக் கட்டிக் கொள்ளலாம் என்று நினைத்தேன். இவ்வளவு காலமாக மூளையில் உறைக்காத ஒரு விஷயம் இப்போது மண்டையில் உறைத்தது.

புடவையை உடுத்துக்கொண்ட பிறகு அதை என் கணவர் பார்த்து, 'ஏது?' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? என் கணவரோ நெறி தவறாதவர்.

திருப்பிக் கொடுத்து விடலாமா? மூன்று மாதங்கள் ஆனபிறகு திருப்பிக் கொடுத்தால் என்னைப்பற்றி அவன் எவ்வளவு கேவலமாக நினைப்பான்? கணவர் காதில் விழுந்தால்...

மூன்று ஆண்டுகளுக்குப் பின் சஷ்டியப்த பூர்த்தி வந்தது. எரியும் தீயில் எண்ணெய் வார்ப்பதுபோல் என் துரோகத்தோடு புடவையைப் பரிசாகக் கொடுத்து ஏற்கெனவே புரையோடியிருந்த புண்ணை அதிகமாகக் கீறி விட்டு விட்டார் புடவைக்காரர்.

என்னைப் பொறுத்தவரையில் சஷ்டியப்த பூர்த்தி சப்பென்றுதான் நடந்தது. ஊருக்குப் பெண் பிள்ளைகள் எல்லோரும் போய் விட்டார்கள். பெண்ணைக் கொண்டு விட என் கணவரும் போயிருந்தார். அந்தச் சமயம் என் சித்தி பிள்ளை தில்லியிலிருந்து வந்து இரண்டொரு நாட்கள் தங்கிச் சென்றான். அவன் போன மறுநாள் என் கணவர் வந்தார்.

''தில்லியிலிருந்து 'பலராமன் வந்திருந்தான்'' என்றேன்.

''உனக்கு என்ன பரிசு?'' என்று கேட்டார்.

''இதுதான்'' என்று இவ்வளவு காலமாகப் பெட்டியடியில் கிடந்த புடவையைக் கொண்டு வந்து காட்டினேன்.

''தேவலையே! பட்டுப் புடவையா? எச்சில் கையால் காக்காய் ஓட்டமாட்டானே! எப்படி அவனுக்கு மனசு வந்தது?'' என்றார் அவர்.

''இப்பொழுதெல்லாம் அவன் எவ்வளவோ தாராளம்'' என்றேன்.

ஒரு வாரம் ஆயிற்று.

புடவைக்காரர் தங்கைக்குக் கலியாணம் என்று பத்திரிகை போட்டார்.

''நாம் ஏதாவது பணம் அனுப்ப வேண்டாமா?'' என்று கேட்டார் என் கணவர்.

''நீங்கள் கோபிக்காமல் இருந்தால்....''

''சொல்லேன்.''

''நம் சஷ்டியப்தபூர்த்திக்கு அவன் சக்தியையும் மீறிப் பட்டுப்புடவை கொடுத்தான். நாமும் அதேமாதிரி.''

''புடவையா? பணம் ஏது நம்மிடம்?''

''பணம் கொடுத்து வாங்குவானேன்? பலராமன் கொடுத்த புடவையை நான் இன்னும் பிரித்துக் கட்டிக் கொள்ளவே இல்லை. தவிரவும் எனக்கு அந்தக் கலர் பிடிக்கவும் இல்லை. பேசாமல் அதைக் கொடுத்தால் என்ன?''

''உன் இஷ்டம். நானு புடவையைக் கட்டிக்கப் போறேன்! நீயே கொடுக்கிறபோது எனக்கு ஆட்சேபனை இல்லை'' என்றார்.

மறுநாள் புடவையைப் பார்சல் செய்து அனுப்பிய பிறகுதான் என் மனத்தில் நிம்மதி உண்டாயிற்று.

அப்பப்பா! மூன்று வருடங்களாக மனம் பட்டபாடு இன்றுதான் சாந்தி அடைந்தது. புரையோடிய புண்ணை ஆற்றிவிட்டேன். புத்தியும் வந்துவிட்டது!

மார்ச் மாதச் சிறுகதைப் போட்டி

1. மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். கதைகள் கல்கியில் ஆறு பக்கத்திலிருந்து பத்து பக்கம் வரையில் வெளியிடக் கூடியதாக இருக்கலாம்.

3. ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

4. மார்ச் மாதப் போட்டிக்கு மார்ச் 1-ம் தேதியிலிருந்து 31-ம் தேதி வரை கதைகள் எழுதியனுப்பலாம். மார்ச் மாதப் போட்டிக்கு வந்த கதைகள் ஏப்ரல் மாதம் முழுதும் பரிசீலனை செய்யப்படும். பரிசு பெற்ற கதை மே மாதத்தில் பிரசுரமாகும். அதேபோல் அந்தந்த மாதக் கதைகள் அடுத்த மாதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கடுத்த மாதத்தில் பிரசுரமாகும்.

5. கதைகளை நல்ல காகிதத்தில் இடைவீடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.

6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் பில்லைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பியனுப்புவதற்கில்லை.

7. போட்டிக் கதை சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும் குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

—ஆசிரியர், கல்கி



தேக ஆரோக்யத்திற்கு
இன்றியமையாதது!
ஔஷத குணம் நிறைந்த சால்மூக்ரா தைலம் கலந்து
தயாரிக்கப்படும் காவேரி சூபர் சோப் ஒரு உன்னத
ஸ்நான சோப். கையடக்கமான ஸைஸ். எப்பொழு
தும் நீங்கள் கேட்டு வாங்கவேண்டிய சோப் காவேரி
சூபர் சோப்.
காவேரி
சூபர் சோப்
CAUVERY
SUPER
SOAP
தயாரிப்பு:
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை
சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.
MC-389



மக்லீன்ஸ் பற்களை
முன்னைவிட அதிவெண்மையாக
சுத்தம் செய்கிறது!
MTY 44 TAM
MACLEANS
peroxide
TOOTH PASTE
மக்லீன்ஸால் வெண்
மையாக்கப்பட்ட பற்கள்
ஆரோக்கியமானது
மட்டுமல்லாமல் பற்சிதைவினி
ன்றும் காப்பாற்றப்படுகின்றன.

படித்துப் பாருங்கள்

அயோத்தியா காண்டம்

(வால்மீகி ராமாயணம்)

ராமாயணக் கதையின் அஸ்திவாரம், காவியத்தின் சாரம் யாவும் ஒருங்கே கொண்டது அயோத்தியா காண்டம். அந்தப் பகுதியில் தான் ரகு வம்சத்தின் சிறப்பு, சகோதர பாசம், தாயின் அன்பு முதலிய அரும் பெரும் பண்புகளெல்லாம் உயரிய முறையில் நல்ல விளக்கம் பெறுகின்றன.

வால்மீகி ராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும் அரிய தொண்டைச் செய்து வரும் ஸ்ரீ டி. எஸ். ராகவன் இப்பொழுது அயோத்தியா காண்ட மொழிபெயர்ப்பை வெளியிட்டிருக்கிறார். ஏற்கனவே இவ்வாசிரியரால் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியிருக்கும் பாலகாண்டம், சுந்தர காண்டம் முதலிய காண்டங்களைப் போலவே இந்தக் காண்டமும் இனிமையாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. காம்பீர்யமும், கருணையும், ரௌத்திரமும், சோகமும் நிறைந்து நவரஸக் கனியாக விளங்கும் அயோத்தியா காண்டம் ஆசிரியரின் தமிழ் மொழிபெயர்ப்பினால் அதிகச் சுவையுடன் விளங்குகிறது.

பன்மொழிப் புலவர், உயர்திருவாளர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் முகவுரை இந்நூலின் சிறப்பை நன்கு நவில்கிறது.

''காண்டத்தின் தனிச் சிறப்பு'' என்ற தலைப்பில் காணப்படும் பகுதியில் அயோத்தியா காண்டத்தின் மாண்பை ஆசிரியர் நன்றாய் விளக்கியிருக்கிறார்.

''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?'' ''என் கரம் உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க'' என்பன போன்ற அத்தியாயத் தலைப்புகள் ஆசிரியரின் தமிழ் மொழி ஆர்வத்தை எடுத்து இயம்புகின்றன. வால்மீகி ராமாயணத்தை வடமொழியிலேயே படிப்பது போன்ற நேர் மொழிபெயர்ப்பே யானாலும், இந் நூல் தமிழ் மொழியின் சிறப்பை மேற்கொண்ட மொழிபெயர்ப்பாயிருக்கின்றமையினால் படிப்பதற்கு மிகவும் இனிமையாயிருக்கிறது.

கிடைக்குமிடம்: டி. எஸ். ராகவன், 21, மந்தைவெளித் தெரு, சென்னை—28; விலை: ரூ. 4—50.

வீரம் விளைந்தது

சோவியத் யூனியன் உலகப் புகழ் பெற்ற பல நாவலாசிரியர்களைப் பெற்றெடுத்திருக்கிறது. தன் நாடும் மக்களும் உயர்வதற்குரிய சிறந்த கருத்துக்களுடன் கூடிய நவீனங்களைப் படைக்கும் நூலாசிரியர்களைத் தோற்றுவித்திருக்கிறது. அப்படிப்பட்ட நாவலாசிரியர்களிலொருவர் நிக்கோலாய் ஆஸ்டிராவ்ஸ்கி. சோவியத் சர்க்கார் இலக்கியத் துறையில் தொண்டாற்றுபவர்களுக்குப் பல வழிகளில் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வருகிறார்கள். மிகச் சிறந்த நூல்கள் எழுதிய ஆசிரியர்களுக்கு 'லெனின் பதக்கம்' வழங்கிக் கௌரவித்து வருகிறார்கள். இந்தப் புகழ் வாய்ந்த 'லெனின் பதக்கம்' பெற்றவர் நிக்கோலாய் ஆஸ்டிராவ்ஸ்கி.

இவர் எழுதிய 'வீரம் விளைந்தது' என்ற நவீனம் பேவல் என்ற வாலிபனின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் முறையில் அமைந்திருக்கிறது. இந்த நவீனத்தைப் படிக்கும்போது ருஷ்ய நாட்டுச் சரித்திரத்தின் ஒரு பகுதியைப் படிப்பதுபோலவே இருக்கிறது. ருஷ்ய நாட்டில் பொதுவுடைமைக் கொள்கையுடைய சமுதாயத்தை உருவாக்குவதற்கு எத்தனை வாலிபர்கள் இரவு பகலாக உழைத்திருக்கிறார்கள்; அவர்கள் எவ்வளவு மகத்தான தியாகங்களைப் புரிந்திருக்கிறார்கள் என்பதை இந்த நவீனத்தில் வரும் கதாபாத்திரத்தின் வாழ்க்கையில் நிகழும் பல சம்பவங்கள் மூலம் உணர முடிகிறது.

கதாநாயகன் பேவல் ஏதோ தப்பிப் பிறந்தவன் அல்ல. அற்புதங்களை இயற்றும் அவதார புருஷனுமல்ல. சாதாரண உழைப்பாளிக் குடும்பத்தில் பிறந்த ஒரு உழைப்பாளிதான் பேவல். ருஷ்யாவில் உண்டான நவயுக சமுதாய ஏற்பாடும், அதைப் போற்றி வளர்க்கும் ஜனசக்தியும் பேவலுக்கு ஊக்கமளிக்கின்றன. அவன் போர்வீரனாக, தொழிலாளியாக, உடல் ஊனங்களை எதிர்த்துப் போராடும் தொண்டனாக, தன்னையும் சமுதாயத்தையும் மாற்றி அமைத்துக் கொள்ளும் ஆத்மசக்தி பெற்றவனாக வளர்ந்து வருகிறான். பேவல் மனிதாபிமானக் கண் கொண்டு மக்களைப் பார்க்கிறான். மக்களின் கஷ்டங்களைக் கண்டு கண்ணீர் விடுகிறான். தீமைகளைக் கண்டு கொதித்து எழுந்து தாக்குகிறான். இந்தக் கொடுமைகள் தீருவதற்குச் சமுதாயமே முன்னேற வேண்டும் என்று எண்ணுகிறான். அதைச் சாதிக்கும் வகையில் பாடுபடும் மக்களை ஒன்று திரட்டுகிறான். கெட்டதை அழிப்பதன் மூலமாகத்தான் நல்லதை உருவாக்க முடியும் என்ற உண்மை பேவலினுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் சுடர்விட்டு மின்னுகிறது. பேவலின் கதை எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கை ஒளிகாட்டி நம்மைச் செயலுக்குத் தூண்டும் இலக்கியமாக விளங்குகிறது.

மாஸ்கோ அன்னிய மொழிகள் பதிப்பகத்தார் இந்த நவீனத்தை ஆங்கில மொழியில் இரண்டு பாகங்களாக வெளியிட்டிருக்கின்றனர். அந்த ஆங்கில நூலின் தமிழாக்கம் தான் 'வீரம் விளைந்தது' என்னும் இந்த நவீனம். தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் இந்த நூலைச் சக்தி வாய்ந்த தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். இந்நூல் இரண்டு பாகங்களாக வெளி வந்திருக்கிறது.

கிடைக்குமிடம்:— நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், 119, மவுண்ட்ரோடு, சென்னை. முதல் பாகம்: விலை ரூ. 4—25. இரண்டாம் பாகம்: விலை ரூ. 4—75.

HEWLETT'S MIXTURE

IN 4 OZS. & 10 OZS. BOTTLES

WITH OR WITHOUT OPIUM



Popular for over 80 Years

☆

ஹியூலெட்ஸ்

மிக்ஸர்

80 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீரணம் வயிற்றுக் கோளாறுகள், நெஞ்சு எரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

வி. ஜே. ஹியூலெட் & சன் (இந்தியா) பிரைவேட் லிட். சென்னை - 3

சுலேகா

பௌண்டன் பேனா மை



உஷ்ணப் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு விசேஷ முறையில் 'S-58' ஸால்வென்ட் சேர்க்கப்பட்டிருக்கிறது. சாதாரண உலோக நிப்புகளில் அமிலம் தாக்காதபடியும் காப்பாற்ற உதவுகிறது.

சுலேகா ஒர்க்ஸ் லிமிடெட்

கல்கத்தா - டில்லி - பம்பாய் - சென்னை

புளோரோஸோன்
கருமையான சரீரத்தை வெண்மையாக்குகிறது



புளோரோஸோன் உங்கள் சருமத்தை இதேபோல் வெண்மையாக்கி, முகப் பருக்கள் முதலிய சருமக் கோளாறுகளை அறவே போக்கி, மேனிக்கு மலர்போன்ற மென்மையையும் நீடித்த அழகையும் அளிக்கும்.

புளோரோஸோன் லோஷன் ஒரு பாட்டில் விலை ரூ. 4.25. சக்தி மிகுந்த புளோரோஸோன் கிரீம் ஒரு ஜாடி விலை ரூ. 6.50. வி. பி. சார்ஜு தனி

கெமிஸ்டுகளிடமும் ஹைஜீனிக் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட், த. பெ. 1192 பம்பாய்-1 விலாசத்திலும் பெறலாம்

Florozone
MIRACLE BEAUTY BLEACH

Distributors for Madras:
R. L. GOWLAS & Co., 59, Sunkur St., Madras



இருபத்தைந்தாம் அத்தியாயம்

கந்த சாமியார்!

போலீஸ் உடை பறி போய் விட்டது. அதற்குப் பதில் காஷாயம் அங்கே கிடக்கிறது என்பதைக் கண்டவுடன் விஷயத்தைப் புரிந்து கொள்ள அந்தப் போலீஸ் வீரனுக்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. சடக்கென்று நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். சுமார் அரை மைல் தூரத்தில் ஒரு ஆசாமி போலீஸ் உடையில் ராஜபாட்டையை நோக்கி விரைந்து கொண்டிருந்தான். பாட்டைக்கு அப்பால் மரங்கள் அடர்ந்த தோப்பு. அவன் சாலையை அடைந்து விட்டானென்றால் பிறகு அவனைப் பிடிப்பதென்பது முடியாத காரியம்.

"திருட்டுச் சாமியார்!......விட்டேனா அவனை!" என்று உறுமிய வண்ணம் காவித்துணி ஒன்றை இடுப்பிலே கட்டிக் கொண்டு பாக்கித் துணிகளை அப்படியே மூட்டையாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு அந்தப் போலீஸ் உருவத்தை நோக்கி ஓடலானான்.

வரப்புகளின் மீது வேகமாக ஓடுவது மிகுந்த கடினமாக இருந்தது. எனினும், அவன் தட்டுத் தடுமாறிக் கொண்டே ஓடினான். தூரத்தில் தெரிந்த போலீஸ் உருவத்தின் மீதும் ஒரு கண் வைத்துக் கொண்டு குறுகிய வரப்பையும் கவனித்துக் கொண்டு ஓடுவது எளிதாக இல்லை. கால்கள் 'சதக் சதக்'கென்று வரப்பை விட்டு வழுக்கி வயலில் பாய்ந்தன. வயல்களைத் தாண்டிச் சமமான புல் வெளியில் நடந்து கொண்டிருந்த அந்தப் போலீஸ் உருவம் வெகு வேகமாக நடந்தது. அவன் விழுந்தெழுந்து தடுமாறிக் கொண்டே வியர்க்க விறுவிறுக்க ஒரு பர்லாங்கு ஓடுவதற்குள் அந்த ஆசாமி பெரிய ரஸ்தாவை அடைந்துவிட்டான். எனினும் கந்தசாமி வாயில் வந்தவாறு திட்டிக் கொண்டே விடாமல் ஓடினான். அடுத்த ஐந்து நிமிடங்களில் அவ்வுருவம் சாலைக்கப்பாலிருந்த தோட்டத்தின் பக்கமாகச் சென்று மறைந்து விட்டது. அவனது ஆத்திரமும் அவமான உணர்ச்சியும் அதிகரித்தன.

அவன் ராஜபாட்டையை அடைந்த சமயம் மாலை சுமார் ஆறு மணியிருக்கும். சூரியன் மேற்றிசையில் மூழ்கிக்கொண்டிருந்தான். வடக்கு தெற்காக நீண்டிருந்த அச் சாலை, இருமருங்கிலும் வரிசையாக வளர்ந்திருந்த உயர்ந்த விசாலமான மரங்களின் நிழலால் மூடப்பட்டு வெளிச்சக் குறைவாகவே காணப்பட்டது. சாலையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் மனிதர்களோ, வண்டிகளோ காணப்படவில்லை. மறுபுறத்தில் சுமார் பத்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள தோட்டம், மரங்கள் அடர்ந்து காடு போல் பயங்கரமாகக் காட்சியளித்தது. கந்தசாமி சிறிது நேரம் யோசித்தான். யாமன் தருமலிங்கத்தின் வீட்டுக்கும் அந்த இடத்துக்கும் சுமார் மூன்று மைல் தூரம் இருக்கும். அப்போது புறப்பட்டாலும் நன்றாக இருட்டிய பிறகுதான் ஊரை யடைய முடியும். ஆனால் அரைத் துணியை, அதுவும் போலீஸ் உடையைப் பறி கொடுத்துவிட்டு இந்தக் கோலத்தில் மாமா எதிரே எப்படிப் போக முடியும்! 'உடை என்னவாயிற்று?' என்று கேட்டால் என்ன பதில்

சொல்லுவது? உண்மை தெரிந்தால் எவ்வளவு அவமானம்? அந்தக் கிராமத்து மக்கள் என்ன நினைப்பார்கள்?

நேராக வடக்கு நோக்கி நடந்தால் சுமார் பத்து மைல் தூரத்தில் ரயில்வே ஸ்டேஷன் இருக்கிறது. கால்நடையாக அப்போது புறப்பட்டாலும் ஒன்பது மணிக்கு முன்னால் ஸ்டேஷனை அடைய முடியாது. ஆனால் அங்கிருந்து சென்னைக்குத் திரும்புவதென்றால் டிக்கட்டுக்குப் பணமல்லவா வேண்டும்! ஒருகால் அந்தப் போலிச் சாமியார் சட்டைப் பையில் ஏதாவது காசு வைத்திருப்பானோ?

மரத்தின் கீழ் உட்கார்ந்து அந்தக் காவித் துணி மூட்டையை உதறினான். அதிலிருந்து ஒரு பொய்த் தாடி கீழே விழுந்தது. சட்டைப் பையைத் துழாவினான். சில்லறை கொஞ்சம் இருந்தது.



இடுப்பில் இருந்த துணியைத் தவிர வேறு ஆடை எதுவும் இல்லாதிருக்கவே கந்தசாமிக்குக் குளிர ஆரம்பித்தது. கந்தசாமியின் மூளை சிறிது சிறிதாகவேலை செய்ய ஆரம்பித்தது. மார்பில் ஆடையே இல்லாமல் இருப்பதற்கு இந்தக் காவி அங்கியை அணிந்து கொண்டால் குளிராவது இராதல்லவா!

உடனே அதை உதறி மாட்டிக் கொண்டு அதுவரை இடுப்பில் கட்டி இருந்த அங்கவஸ்திரத்தைக் குளிருக்கு அடக்கமாக இருக்கும்படி மேலே போர்த்திக் கொண்டான். காவி வஸ்திரத்தை மாத்திரம் போட்டுக் கொண்டு வெறும் மீசையோடு இருந்தால் பொருத்தமாக இல்லைபோல் தோன்றியது. அந்தத் தாடியையும் எடுத்து ஒட்ட வைத்துக் கொண்டான். மறு நிமிஷம் கந்தசாமி கந்த சாமியாராகி விட்டான்! முத்தம்மாளே அப்போது அவனைப் பார்த்தால்கூட அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. இவ்வாறு நினைத்தபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

மேலே நடக்க வேண்டியது என்ன? அந்தத் திருட்டுப் பயல் இந்த முந்திரித் தோப்புக்குள்தான் போயிருக்க வேண்டும். ஆனால் இந்தத் தோப்பினுள் எவ்வளவு நேரம்தான் ஒளிந்து கொண்டிருக்க முடியும்? இன்னும் சிறிது நேரம் காத்திருந்து பார்த்தால் எப்படியும் வெளியில் வந்துதானே ஆக வேண்டும்? இவ்வாறு எண்ணிய வண்ணம் ஒரு பெரிய மரத்தின் அடியில் சிறிது ஒதுப்புறமாக உட்கார்ந்து தோப்புப் பக்கம் கண் கொட்டாமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சூரியன் மறைந்து வெகு நேரமாகி விட்டது. மாலை வெளிச்சம் சிறிது சிறிதாக மங்கி இருட்டத் தொடங்கியது. கந்தசாமியின் ஆவல் அதிகரித்தது. இருட்டிய பிறகு வெளியே வரலாம் என்றுதான் பதுங்கிக் கொண்டிருப்பான்! எப்படியும் இன்னும் சிறிது நேரத்தில் வெளியே வந்துதான் ஆக வேண்டும்; பிடித்து விடலாம் என்று எண்ணினான். ஆனால் இந்தப் பக்கமாக வராமல் வேறு பக்கமாக வெளியே போய்விட்டால்? இந்தச் சந்தேகம் தோன்றியதும் அவனது மனம் சஞ்சலமடையத் தொடங்கியது!......... இந்த உடையுடன் சென்னைக்கு மட்டும் எப்படிப் போவது? முத்தம்மாள் என்ன நினைப்பாள்? இன்ஸ்பெக்டருக்கு உடை விஷயமாக என்ன பதில் சொல்லுவது? முத்துப் பிள்ளை! சிங்காரி......... இவர்களுக்கு விஷயம் தெரிந்தால் எத்தனை அவமானம்? கேவலம் ஒரு பரதேசிப்பயல் இப்படி ஏமாற்றி விட்டானே?...... பரதேசியா அவன்! பொய்த்தாடி வைத்திருந்தான் அல்லவா? சாமியார்போல் ஊரை ஏமாற்றி வயிறு வளர்ப்பவனாக இருக்கும்!....ஆனால் போலீஸ் உடையை ஏன் அபகரிக்க வேண்டும்?

நேரம் ஆக ஆக அவனது வேதனை அதிகரித்தது. இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். ஆகாயத்தில் பிறைச் சந்திரன் ஒடிந்த அப்பளத் துண்டுபோல் தனது மங்கிய வெளிச்சத்துடன் உதயமாகியது. பனி பெய்யத் தொடங்கியது. குளிர் காற்று உடம்பெல்லாம் ஊசி போல் குத்தியது. பசிவேறு அவனுக்குப் பிடுங்கித் தின்றது.

அதற்குமேல் அவனுக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. அருகில் வீடுகளோ, சத்திரம் சாவடிகளோ இருப்பதாகத் தெரியவில்லை. இராப்பொழுதை எங்கு கழிப்பது? ஆகாரத்துக்கு வழி என்ன? இந்தத் தோட்டத்துக்குச் சமீபத்தில் சத்திரம் ஏதேனும் இருக்குமா?......அப்படியே அங்கு உட்கார்ந்திருப்பதைக் காட்டிலும் தேடிப் பார்ப்பது நலம் என்று எண்ணிக் கந்தசாமி எழுந்தான்.

அதே சமயத்தில் தெற்குப் பக்கத்தில் இருந்து சாலையோரமாக யாரோ வருவதுபோல் தெரிந்தது. கந்தசாமி மரத்தின்பின் மறைவாக நின்று கவனித்தான். ஒருகால் அவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஆசாமியா? உருவம் சரியாகத் தெரியாவிடினும், வந்தவன் போலீஸ் உடையில் இல்லை என்று மட்டும் தெரிந்தது. ஆகவே அவன் இல்லை. யாராவது வழிப்போக்கனோ?......

அந்த ஆசாமி கந்தசாமி இருந்த இடத்துக்குச் சிறிது சமீபமாக வந்ததும், ஒரு கணம் நின்றான். பிறகு நாலா பக்கமும் திரும்பிப் பார்த்து விட்டுத் தோப்புப் பக்கம் திரும்பி நடந்தான்.

சுமார் இரண்டு நிமிட நேரத்தில் அந்தத் தோட்டத்தின் இருள் அவனது உருவத்தை விழுங்கி விட்டது.

இருபத்திஆறும் அத்தியாயம்

முந்திரித் தோப்பு மர்மம்

கந்தசாமி ஆச்சரியமடைந்தான். இவன் யார்? இந்த அகாலத்தில் இவனுக்கு இந்தப் பயங்கரமான தோப்புக்குள் என்ன வேலை? ஒருகால் குறுக்கு வழியாகத் தோட்டத்தைக் கடந்து பக்கத்து கிராமத்துக்குச் செல்லுகிறானா? அல்லது அந்தத் தோட்டத்தின் காவற்காரன் இவன்தானா? அப்படியானால் ஏன் இங்கு நின்று சுற்றுமுற்றும் திரும்பிப் பார்க்க வேண்டும்?

யோசிக்க யோசிக்க அவனது மனத்தில் பற்பல சந்தேகங்கள் உதிக்க ஆரம்பித்தன. இந்த முந்திரித் தோப்பில் எத்தனையோ கொலைகள் நடந்திருப்பதாகவும், இருட்டிய பிறகு அந்தப் பக்கம் போவதற்கு ஜனங்கள் பயப்படுவார்கள் என்றும் மாமன் தருமலிங்கம் சொல்லக் கேட்டிருந்தான் அவன். அப்படியிருக்க இந்த ஆசாமி இந்நேரத்தில் உள்ளே சென்றது விசித்திரமாக இருந்தது. அவனது உடையைத் திருடிய போலீஸ்காரியாரும் சாதாரண ஆசாமியாக இருக்க முடியாது! அவன் இன்னும் தோட்டத்தினுள்ளேயே இருக்கலாம்! இப்போது உள்ளே சென்றவனுக்கும், அவனுக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருக்குமோ?

இந்தச் சந்தேகம் அவனது மூளையில் தோன்றியதும், கந்தசாமி தோட்டத்தை நோக்கி நடந்தான். அந்த மனிதன் உள்ளே நுழைந்த பக்கமாகச் சென்று உற்றுக் கவனித்தான். ஒரே இருட்டாக இருந்தது. சிறிது நிதானித்துக் கவனித்த பிறகு, அடர்ந்த புதர்களுக்கிடையே ஒரு கொடி வழி கண்ணுக்குப் புலப்பட்டது. மிகவும் ஜாக்கிரதையாக அந்த வழியே சென்றான்.

அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் கிளைகள் தலைக்குமேல் கூடாரம்போல் கவிந்து கொண்டிருந்தன. அவற்றினிடையே இங்குமங்குமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரக் கிரணங்களின் உதவியைக் கொண்டு, வளைந்து வளைந்து சென்ற அந்தக் கொடி வழியில் தட்டுத் தடுமாறிக் கொண்டே நடந்தான். நெடுகிலும் உதிர்ந்து கிடந்த உலர்ந்த இலைச் சருகுகள் அவனது கால்களுக்கு அடியில் 'கர் மூர்' என்று முறிந்தன. விதம்விதமான காட்டுப் பூக்களின் மணம், குறுக்கும் நெடுக்குமாகப் பாம்புகள்போல் படர்ந்திருந்த கொடிகள், இடையிடையே பேய்கள்போல் நின்றிருந்த சவுக்கு மரங்கள், அவை காற்றில் அசைவதாலான "ஹோ" என்ற பயங்கரமான ஓசை, ஆந்தையின் அலறல், கோட்டானின் கூக்குரல், புதர்களில் ஓடிய பிராணிகள் எழுப்பிய சலசலப்பு, எதிரே அந்தரத்தில் தோன்றித் தோன்றி மறைந்த மின்மினிப் பூச்சிகளின் சிறு வெளிச்சம், சுவர்க்கோழியின் ரீங்காரம் ஆகிய எல்லாம் ஒருங்கு சேர்ந்து அந்த அமானுஷ்யமான சூழ்நிலையில் அவனது உள்ளத்தில் பெருத்த அச்சத்தைக் கிளறி விட்டன.



அவனுக்கு முன்னால் உள்ளே நுழைந்த அந்த ஆசாமியின் சுவடே தெரியவில்லை. சுமார் அரை மணி நேரம் நடந்த பிறகு மரங்கள் அதிகமில்லாத சற்றுத் திறந்த வெளி குறுக்கிட்டது. கொடி வழி அங்கு இரண்டாகப் பிரிந்தது. கந்தசாமி ஒருகணம் நின்று யோசித்த பிறகு மேற்கு நோக்கிச் சென்ற வழியைப் பின்பற்றினான். குகை போல் இரண்டு மரச் செறிவுகளும், திறந்த சமவெளிகளும் மாறி மாறிக் குறுக்கிட்டன. முடிவென்பதே இல்லாமல் போய்க் கொண்டே இருந்த அந்த வனாந்திரத்தில் 'வழிதுறை' தெரியாமல் இரவு முழுதும் சுற்றும்படி ஆகிவிடுமோ என்று அவன் மனத்தில் திகில் பிடித்துக் கொண்டது. கால்கள் ஓய்ந்து விட்டன. பசியும் களைப்பும் மேலிட்டன. கடைசியில் என்னதான் ஆகப் போகிறது? ஒருகால் அந்த ஆசாமி கிழக்குப் பக்கம் பிரிந்து சென்ற பாதை வழியே எங்காவது போயிருப்பானோ? திகைத்து நின்ற அவனது கண்களுக்குச் சிறிது தூரத்தில் மரக் கூட்டங்களுக்கு மத்தியில் ஏதோ



ஒரு கட்டடம் தெரிந்தது. அவன் நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டான்.

கந்தசாமி மெதுவாக அருகே சென்று பார்த்தான். அது முழுவதும் இடிந்து சரிந்து போன ஒரு பிரும்மாண்டமான புராதனக் கட்டடம். பார்வைக்குப் பழைய காலத்து அரசர்களின் அரண்மனையைப் போல் காணப்பட்டது. சுற்றிலும் கற்களும் காரையும் சரிந்து கிடந்தன. மத்திய பாகம் மாத்திரம், பாதி இடிந்தும், இடியாமலும் நின்று கொண்டிருந்தது.

அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. இனிமேல் அவர்களைத் தேடிக் கொண்டு அலைவதில் பயனில்லை. பேசாமல் களைப்புத்தீர இக்கட்டடத்து வராந்தாவில் எங்கேயாவது படுத்துத் தூங்கிக் கழித்துவிட்டு, காலையில் எழுந்து மேலே நடக்க வேண்டியதைப் பற்றி யோசிக்கலாம் என்று தீர்மானித்தான் அவன்.

ஜாக்கிரதையாகக் கட்டடத்தின் இடியாமலிருந்த பாகத்தை நோக்கி நடந்தான். அதன் முன்புறம் ஒரு பெரிய வராந்தாவைப் போல் காணப்பட்டது. அதில் மிகவும் உயரமும் பருமனும் உள்ள ஆறு உருட்டுத் தூண்கள் நின்றிருந்தன. தூண்களிலிருந்த காரை ஆங்காங்கு பெயர்ந்து போயும் அநேக இடங்களில் பாசி படிந்தும் கிடந்தன. வராந்தா முழுவதும் புழுதி படிந்து புல்லும் செடிகளும் முளைத்திருந்தன. ஒரு புறத்தில் நீண்ட திண்ணை ஒன்று இருந்தது. கந்தசாமி தன் தோளிலிருந்த துண்டால் திண்ணையிலிருந்த தூசியைத் தட்டிவிட்டு, அதன்மேல் துண்டைப் பிரித்துப் படுத்துக் கண்களை மூடிக் கொண்டான். அலை பாய்ந்து கொண்டிருந்த மனத்தில் என்ன முயற்சியை மேற்கொண்டு செய்வதென்ன என்பதைப் பற்றி எவ்விதமான முடிவும் ஏற்படவில்லை. களைப்பு மேலிட்டால், சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கி விட்டான்.


இரவு சுமார் இரண்டு மணியிருக்கும். அவன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். ஏதோ அரவம் கேட்டது போலிருந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். எங்கிருந்தோ பேச்சுக் குரல் கேட்டது. அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. உண்மையில் மனிதர்களின் குரல்தானா? அல்லது பிரமையா? குரல் கட்டடத்துக்குப் பின்புறத்திலிருந்து வருவது போலிருந்தது.

அவன் மெதுவாக எழுந்தான். சிதிலமாகிக் கிடந்த அந்தக் கட்டடத்துக்குள் நுழைவதற்கு வராந்தாவின் இடது பக்கத்தில் ஒரு சிறிய வாசற்படி காணப்பட்டது. ஆனால் குகைபோல் இருண்டு கிடந்த அதனுள்ளே நுழைவதற்கு அவனுக்குத் துணிவு ஏற்படவில்லை. சந்தடியின்றி நடந்து சுற்றிக் கொண்டு கட்டடத்தின் பின்புறத்தையடைந்தான். இப்போதும் குரல் கேட்டுக் கொண்டுதான் இருந்தது. ஆனால் கட்டடத்துகுள்ளிருந்து கேட்டதாகத் தெரியவில்லை. பூமிக்கடியிலிருந்து கேட்டது. கீழே குனிந்து தரையில் காதை வைத்துக் கவனித்தான். யாரோ இருவர் பேசுவது காதில் விழுந்தது.

''உன்னிடம் ஒப்படைத்திருந்த வேலை முடிந்ததா, இல்லையா என்று தெரிந்து கொள்வதற்குத்தான் உன்னை இங்கே வரச் சொன்னது!...''

''அதுதான் சொன்னேனே!...சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று? மேலும், முதலில் எனது மாங்காய் விஷயம் பைசலானால் ஒழிய நான் மேற்கொண்டு எதிலும் பிரவேசிக்கப் போவதில்லை!''

கந்தசாமி திடுக்கிட்டான்! இப்போது பேசிய கீச்சுக் குரல் அவனது உடலைத்



யார் தவறு?

புதியமோட்டார் ஓட்டி ஒருவர் (தவறான பாதையில் சென்று மற்றொரு காருடன் மோதினார்.) மன்னித்துக் கொள்ளுங்கள். தவறு முழுதும் என் மேல்தான்!



மற்றவர்:— இல்லை, இல்லை, என் மேல் தான் தவறு. நீங்க வருகிறது முந்தாநாளுக்கு முன்னாலே தெரிந்தும் நான் இன்னொரு தெருவில் திரும்பியிருக்க வேணுமல்லவா?

திருடிச் சென்ற போலிச் சாமியாருடையது என்பதில் சந்தேகமேயில்லை! இதற்கு முன்னமே கூட அவன் இந்தக் குரலை எங்கேயோ கேட்டிருக்கிறான்! ஆனால் எங்கே?...

"அது விஷயமாகத்தான் எசமானர் சொல்லியனுப்பியிருக்கிறாரே! இன்னும் விற்பனையாகவில்லை. போலீஸ் இருக்கிற உஷாரில் அதை இப்போது வெளியே கொண்டுபோவது சாத்தியமில்லை என்று சொல்லச் சொன்னார்!"

"இப்படியே விற்கவில்லை விற்கவில்லை என்று சொல்லிக் கொண்டே போனால் சும்மா இருக்க முடியாது! எனக்குப் பணம் அவசரமாகத் தேவை! அவரால் விற்க முடியாவிட்டால் என்னிடம் கொடுக்கச் சொல்லு! நான் விற்று அவருக்குச் சேரவேண்டியதைக் கொடுத்து விடுகிறேன்! நாளைக்கு இரண்டில் ஒன்று முடிய வேண்டும்!"

"இதையெல்லாம் எங்களிடம் சொல்லிப் பலனில்லை. எசமானரே நேரில் வருவதாக இருந்தார். ஆனால் அவருக்கு அங்கே வேறு முக்கியமான வேலை இருப்பதால் என்னை அனுப்பி வைத்தார்......"

"என்ன இரைச்சல் அங்கே? மெதுவாகப் பேசுங்கள்!"

இது மூன்றாவது புதுக் குரல்.

அதற்கு மேல் கந்தசாமியால் சரிவரக் கேட்க முடியவில்லை.

"அட நீயும் கூடவே போ! மதுரையில் தான்...கமிஷனர்...வேலூர் பயமில்லை" என்று ஏதேதோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் சொற்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் அவனது காதுகளில் விழுந்தன. அதன் பிறகு அநேகர் சேர்ந்து தணிவான குரலில் பேசுவது போல் தெளிவற்ற சத்தங்கள் கேட்டன.

அவனுக்கு ஒரே பிரமிப்பாக இருந்தது. இந்தக் கட்டடத்துக்குள் என்ன மர்மம் அடங்கியிருக்கிறது? ஏதோ மாங்காய் என்கிறானே! ஒருகால் இது தோப்புக் காவல்காரன் வசிக்குமிடமோ என்னமோ! இந்தத் தோப்பில் இருக்கும் மாமரங்களின் மகசூல் விஷயமாக ஏதாவது பேசுகிறானோ? அப்படியானால் போலீஸ் உஷாராக இருப்பதால் விற்க முடியவில்லை என்கிறானே! மாங்காயை விற்கப் போலீசுக்கு ஏன் பயப்பட வேண்டும்? வேலூரில் யார் இருக்கிறார்கள்? பூமியின் அடியிலிருந்து குரல் கேட்கிறதே! ஏதாவது சுரங்கங்கள் இருக்கின்றனவா? இவ்வாறெல்லாம் சிந்தித்துக் கொண்டே கட்டடத்தின் பின்புறம் நோக்கினான்.

அங்கு முன்புறம் இருந்ததைப் போலவே தரை மட்டத்துக்கு மேல் இரண்டு மூன்றடி தலையைத் தூக்கிக் கொண்டிருந்த இடிந்த சுவர்களும், குவியல் குவியலாக மண்ணும் காரையும் கற்களுமே காணப்பட்டன. அவற்றுக்கப்பால் செடிகளின் மறைவில் ஏதோ கறுப்பாகத் தெரிந்தது. கந்தசாமி கொஞ்சம் முன்னால் சென்று புதர்களின் மறைவிலிருந்து எட்டிப் பார்த்தான். சந்திரனின் மங்கிய வெளிச்சத்தில் அங்கு ஒரு பெரிய மோட்டார் கார் நிற்பது தெரிந்தது. அவனது ஆச்சரியத்துக்கு எல்லையில்லை. கடடாயம் இங்கே ஏதோ பெருத்த மர்மம் அடங்கித்தான் இருக்க வேண்டும் என்று கந்தசாமி தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

காரில் ஒருவருமில்லை என்று தெரிந்து கொண்டு மெதுவாக அதனருகில் சென்று நம்பரைப் பார்த்தான். MBX 4488 என்றிருந்தது. இந்தச் சமயத்தில் மனிதர்களின் காலடிச் சத்தம் கேட்டது. அவனது நெஞ்சு 'தடக் தடக்' என்று அடித்துக் கொண்டது.

"ஜாக்கிரதை! எசமான் உத்தரவு ஞாபகம் இருக்கட்டும்!"

"நானும் கூடவே வருகிறேன்!"

இரண்டாவது பேசியது அந்தப் போலிச் சாமியார். கந்தசாமிக்கு ஒளிந்து கொள்ளவோ ஓடவோ நேரமில்லை! சுற்று முற்றும் பார்த்தான். அந்தக் கட்டடத்துக்குப் பின்புறம் சிறிது தூரம் திறந்தவெளியாக இருந்தது.

அவன் 'சட்' என்று காரின் பின்புறம் சாமான்கள் வைக்குமிடத்தை மெதுவாகத் திறந்து அதில் புகுந்து கதவை மூடிக் கொண்டான்.

சுமார் இரண்டு நிமிடங்களில் மோட்டார் கார் அங்கிருந்து நகர ஆரம்பித்து, வேகமாக முன்னேறியது. (தொடரும்)

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam



பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்க்
உபயோகித்தால்
நாள்முழுவதும் புத்துணர்ச்சி
யுடனும், நறுமணத்துடனும்
இருக்கலாம்
மிகுந்த கவரூட்டுவதும், நறுமணம் வாய்ந்ததுமான
பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்
தால், நீங்கள் கொடிய வெப்பத்திலும், புழுக்கமான
நாள்களிலும்கூட இனிய உணர்ச்சியுடன் இருக்கலாம்.
மென்மையான இந்த டால்கம் பவுடரை உடம்பில்
தூவிக்கொண்டால், எரிச்சலூட்டும் வியர்வைத்
தொல்லை ஒழியும். நாள் முழுவதும் புது மலரைப்
போல் இனிய புதுமையுடன் இருக்க பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்.
செஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)
POND'S
DREAMFLOWER TALC
DREAMFLOWER TALC

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon